» தொகுதி 1, இதழ் 21

» மே 1-15, 2021

இலவச விநியோகத்திற்காக

# நியூ இந்தியா சமாச்சார்

NEW INDIA SAMACHAR

Volume 1, Issue 21

May 1-15, 2021



## கனவை நனவாக்கும் திட்டம்

# உஜ்வாலா

காரணமாக புகையற்ற சமையல்
தேசத்தை உருமாற்றி
இருக்கிறது

## விருப்பத்தை நிறைவேற்றுதல்

# புதிய அவதாரத்தில் தேர்வு வீரர்கள்

**அலீனா டாயங் :** நான் அருணாச்சல பிரதேசத்தின் ரோயிங் பகுதியைச் சேர்ந்தவள். இம்முறை எனது தேர்வு முடிவு வந்தபோது, தேர்வு வீரர்கள்! புத்தகத்தை நான் படித்திருக்கிறேனா என்று சிலர் என்னிடம் கேட்டனர். இல்லை என்று நான் பதில் கூறினேன். அதன் பிறகு, அந்தப் புத்தகத்தை வாங்கி, இரண்டுக்கு மேற்பட்ட முறை அதனைப் படித்துப் பார்த்தேன். அதன் பின்னர் எனக்கு மிகச் சிறந்த அனுபவம் ஏற்பட்டது. தேர்வு எழுதுவதற்கு முன்பு இந்த புத்தகத்தைப் படித்திருந்தால், நல்ல பலனை அடைந்திருக்கலாமே என்று நான் கருதினேன். இந்தப் புத்தகத்தில் உள்ள சில அம்சங்கள் என்னைக் கவர்ந்தன, ஆனால், மாணவர்களுக்கான பல மந்திரங்கள் அதில் இருப்பதை நான் கண்டேன், ஆனால் எனது பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்தப் புத்தகத்தில் பெரிதாக எதுவும் இல்லை என்று கூறிவிட்டனர். அடுத்த பதிப்பை வெளியிடுவதாக இருந்தால், அதில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் தேவையான சில மந்திரங்களை சேர்க்குமாறு நான் வாழ்த்துகிறேன்.

**பிரதமர் :** நாட்டின் பிரதான சேவகன் இந்த நாட்டிற்காக என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்களோ; அது நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எனதருமை இளம் நன்பர்களுக்கு ஏற்பட வேண்டும். எனது இளைய நன்பர் ஒருவர் என்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைத்துள்ளார், உண்மையில் சொல்ல வேண்டுமானால் அது எனக்கான உத்தரவாகும். உங்களது உத்தரவை நிச்சயமாக நான் செயல்படுத்துவேன்




மாணவர்கள் தேர்வுகளை மன அழுத்தமின்றி எழுதுவதற்கு ஏற்ப, தேர்வு வீரர்கள் புத்தகத்தின் சமீபத்திய வெளியீட்டில், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுவாரஸ்யமான சில மந்திரங்களை பிரதமர் நரேந்திரமோடி இணைத்துள்ளார்

**உங்களது பிரதியை உடனே வாங்குவீர்**

https://www.narendramodi.in/examwarriors
https://www.amazon.in/Exam-Warriors-Revised-Updated-Narendra/dp/0143449974/ref=asc_df_0143449974/?tag=googleshopdes-21&linkCode=df0&hvadid=396986125419&hvpos=&hvnetw=g&hvrand=11787528220984750938&hvpone=&hvptwo=&hvqmt=&hvdev=c&hvdvcmdl=&hvlocint=&hvlocphy=9061650&hvtargid=pla-1193639338926&psc=1&ext_vrnc=hi

நியூ இந்தியா
# சமாச்சார்
» தொகுதி 1 இதழ் 21 » மே 1-15, 2021

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | தலையங்கம் | பக். 02 |
| 2 | அஞ்சல் பெட்டி | பக். 03 |
| 3 | செய்திச் சுருக்கம் | பக். 04-05 |
| 4 | ஆளுமை : கோபால கிருஷ்ண கோகலே | பக். 06 |
| 5 | சுய சார்பு இந்தியா | பக். 07-09 |
| 6 | கொரோனாவுக்கு எதிரான போர் | பக். 10-11 |
| 7 | ஆஸாதி கா அம்ரித் மஹோத்சவ் | பக். 12-13 |
| 8 | பரீக்ஷா பே சர்ச்சா | பக். 14-16 |
| 9 | அமைச்சரவை முடிவுகள் | பக். 17 |
| 10 | சிறப்புக் கட்டுரை | பக். 18-25 |
| 11 | பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானுடன் ஒரு நேர்காணல் | பக். 26-27 |
| 12 | புத்தக வெளியீடு | பக். 28-29 |
| 13 | ஆபரேஷன் சக்தி | பக். 30-31 |
| 14 | சமூக பாதுகாப்பு திட்டம் | பக். 32-33 |
| 15 | உஸ்தாத் திட்டம் | பக். 34 |
| 16 | ஆளுமை : மஹாராணா பிரதாப் | பக். 35 |
| 17 | ஆக்கப்பூர்வ அணுகுமுறை | பக். 36 |

**Editor**
Jaideep Bhatnagar,
Principal Director General,
Press Information Bureau,
New Delhi

**Consulting Editors**
Vinod Kumar
Santosh Kumar

**Designer**
Ravindra Kumar Sharma

**Published & Printed by**
Satyendra Prakash,
Principal Director General, BOC
on behalf of Bureau of
Outreach and
Communication

**Printed at**
Infinity Advertising services Pvt.Ltd.
FBD-One Corporate Park, 10th floor,
New Delhi-Faridabad border,
NH-1,Faridabad-121003

**Published from**
Bureau of Outreach and
Communication, 2nd Floor,
Soochna Bhawan,
New Delhi -110003

NEW INDIA SAMACHAR

RNI No. : DELTAM/2020/78809

response-nis@pib.gov.in

# ஆசிரியர் மேசையிலிருந்து...

வணக்கம்,

நமது வாசகர்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள் என நம்புகிறேன். கடந்தாண்டு, கொவிட்-19 தொற்றை இந்தியா கூட்டாக செயல்பட்டு முறியடித்தது. நாம் மீண்டும் இந்த தொற்றை ஒன்றாக இணைந்து வெற்றி கொள்வோம். கொவிட்-19 தடுப்பூசிகளுடன், தொற்றிலிருந்து விடுபட நமது விஞ்ஞானிகள் மற்றும் சுகாதார நிபுணர்கள் கடுமையாக உழைக்கின்றனர். இவைதான் இந்த கொடூரமான நோயுடன் போராட உதவும் ஆயுதம். கொரோனா தொற்றிலிருந்து 100 சதவீதம் விடுபடும் வரை, முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது, போன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றுவது நமது கடமை. இந்தியாவின் தலைமை உணர்வுபூர்வமான அணுகுமுறையை கையாண்டுள்ளது மற்றும் நாடுமுழுவதும் உள்ள மருத்துவமனைகளில் மருந்துகள் விநியோகம் மற்றும் மருத்துவ வசதிகள் சீராகக் கிடைப்பதை உறுதி செய்துள்ளது. பீதியடையாமல், கொவிட்-19 தொற்றிலிருந்து ஒருவர் தன்னை பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கை மேற்கொள்வது தான் நமது இலக்கு.

தொற்றுக்கு எதிரான போராட்டமாக இருக்கட்டும் அல்லது பல நடவடிக்கைகள் மூலம் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டுவருவதாக இருக்கட்டும், இத்தகைய முயற்சிகளுக்கு மக்களின் பங்களிப்பு வெற்றிக்கு வழிவகுக்கிறது. இதற்கு சிறந்த உதாரணமாக, எல்பிஜி நாடு முழுவதும் மக்களின் வாழ்வை எவ்வாறு மாற்றுகிறது என்பதில் காண முடியும். பல ஆண்டுகாலமாக ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டும் கிடைத்து வந்த எல்பிஜி விநியோகம், தற்போது அனைவருக்கும் கிடைக்கும் வகையில் நாட்டின் அனைத்து மூலைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சமையலுக்கு விறகுகளை சார்ந்திருந்த நலிந்த மக்களுக்கு தற்போது எல்பிஜி தடையின்றி கிடைக்கிறது. இந்த மிகப் பெரிய வெற்றி, பிரதமரின் உஜ்வாலா திட்டம் மூலம் சாத்தியமானது. இது சாதாரண மக்களின் ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை தரத்தை மட்டும் மேம்படுத்தவில்லை, சுத்தமான மற்றும் பசுமையான சூழலை வழங்கும் இந்தியாவின் உறுதியையும் மேம்படுத்தியுள்ளது.

கடந்த 2016ம் ஆண்டு தொடங்கப்பட்ட பிரதமரின் உஜ்வாலா திட்டம், வெற்றிகரமாக 6வது ஆண்டை நிறைவு செய்யும் தருணத்தில் உள்ளது. இந்திய மக்களின் எளிதான வாழ்க்கைக்கு அதிகளவில், இத்திட்டம் உதவியுள்ளது. இதுதான் இந்த வெளியீட்டின் பிரதான செய்தி. காப்பீடு துறையில், ஏராளமான அரசு திட்டங்கள், சாதாரண மக்களுக்கு அதிக அதிகாரம் அளிப்பதில் உதவியுள்ளன. இந்த இதழில் வெளிவரும் இத்திட்டத்தின் கதைகளின் தொகுப்பை நமது வாசகர்கள் ரசிப்பர்.

சுதந்திர போராட்டமாக இருக்கட்டும் அல்லது, அந்நியர்களை வெளியேற்றுவதாக இருக்கட்டும், இந்தியா எப்போதும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தது. இந்த இதழின் ஒரு பகுதி, மகாராணா பிரதாப், கோபால கிருஷ்ண கோகலே போன்ற வீரர்களுக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்காக பாடுபட்ட அறியப்படாத பல வீரர்களுக்காகவும் அர்ப்பணிக்கப்படுகிறது.

இந்த பதிவில், தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சியில், வாழ்க்கையில் உள்ள பல சவால்களை எப்படி எதிர்கொள்ளலாம் என இளம் தலைமுறையினருடன் பிரதமர் மேற்கொண்ட உரையாடல் நிகழ்ச்சியிலிருந்து சுவாரஸ்ய துணுக்குகளும் இடம்பெற்றுள்ளது.

தற்சார்பு இந்தியா திட்டம் மீது கொடுக்கப்பட்ட முன்னுரிமை நடவடிக்கைகளால், தொழில்துறை மற்றும் வர்த்தக துறையில் 137 கோடி மக்களின் பங்களிப்புடன் கடந்த ஓராண்டாக நல்ல பலன் கிடைத்துள்ளது. இந்த முயற்சியின் மீதான மக்களின் நேர்மறையான அணுகுமுறை, வரும் காலங்களில் இந்தியாவின் வெற்றிகரமான எதிர்காலத்துக்கு உறுதியளிக்கும்.

எப்போதும் போல் அதே அன்புடனும், நம்பிக்கையுடனும், உங்கள் கருத்துக்களை எங்களுக்கு தொடர்ந்து அனுப்புங்கள்...


முகவரி: : Bureau of Outreach and Communication,
IInd Floor, Soochna Bhawan, New Delhi - 110003

e-mail : response-nis@pib.gov.in


(ஜெய்தீப் பட்நாகர்)

# அஞ்சல் பெட்டி




நியூ இந்தியா சமாச்சார் ஒரு தலைசிறந்த இதழ். முந்தைய வெளியீடுகளைப் போலவே, நியூ இந்தியா சமாச்சாரின் இந்த இதழும் அற்புதமாக உள்ளது. இந்தியா மற்றும் அதன் வளர்ச்சியைப் பற்றிய ஏராளமான தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்கள் வாயிலாக, நம்மை செழுமைப்படுத்தக் கூடிய பல்வேறு அம்சங்கள் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன. இதுபோன்ற சிறந்த மற்றும் மதிப்புமிக்க இதழை வெளியிடுவதற்காக, நியூ இந்தியா சமாச்சார் குழுவினருக்கு நன்றி.

பேராசிரியர் சுபீர் சின்ஹா
subirsinha.2009@gmail.com

இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து நான் நியூ இந்தியா சமாச்சார் இதழை வாசித்து வருகிறேன், ஒவ்வொரு முக்கியத் திட்டம், விவகாரங்கள் மற்றும் பிரதமரின் மனதின் குரல் உரை போன்ற உத்தமமான பணிகளை ஒன்றுதிரட்டி, அதிகாரப்பூர்வ தகவல்களை எண்ணற்ற மக்களுக்கு வழங்கிய உதவுதற்காக அரசிற்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த இதழின் அச்சுப்பிரதி கிடைக்குமா என்பது பற்றியும், அதற்கு சந்தா செலுத்துவது எப்படி என்பதற்கான வழிமுறைகளையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கிரித்தி ஸ்ரீவஸ்தவா
srivastavakriti001@gmail.com

அரிய தகவல்களை வழங்கும் இந்த இதழை நாங்கள் வாசித்து வருகிறோம். போட்டித் தேர்வுகள் மற்றும் அன்றாட வாழ்க்கைக்கு உதவக்கூடிய சிறந்த தகவல்களைப் பெற்று வருகிறோம். நியூ இந்தியா சமாச்சார் குழுவினருக்கு நான் மிகுந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன். தகவல் அறிந்துகொள்ள உதவக்கூடிய இதுபோன்ற வேறு ஏதேனும் இதழ்கள் வெளிவருகின்றனவா என்பது பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

ரினூ குமார்
rinkoo8858@gmail.com

நியூ இந்தியா சமாச்சார் ஒரு மிகச் சிறந்த மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிகழும் சம்பவங்களைப் பற்றிய தகவல்களை வழங்கும் நம்பகமான ஆதாரமாகவும் திகழ்கிறது. இந்த இதழை வெளியிடுவதற்காக, மக்கள் தொடர்பு மற்றும் கள விளம்பரப் பிரிவுக்கு நன்றி கூற விரும்புகிறேன். இந்த இதழ் வெளியீட்டின் பின்னணியில் உள்ள ஒட்டுமொத்தக் குழுவினருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

பொறியாளர் பாசாம் கயூம்
basaam4@gmail.com

நான் போட்டித் தேர்வை எதிர்கொள்ள இருப்பவர்களில் ஒருவன். இந்த இதழை நான் முதன்முறையாக வாசித்துப் பாரத்தேன், இதில் இடம்பெறும் அம்சங்கள், அரசின் திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் பற்றிய நமது அறிவை மேம்படுத்திக்கொள்ள மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். அடுத்த இதழைப் படிக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

ராணி ஷர்மா
sharmarani0144@gmail.com

## டிஜிட்டல் காலண்டர்




இந்திய அரசு வெளியிட்டுள்ள டிஜிட்டல் காலண்டர் மற்றும் டைரியில் பல்வேறு திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் வெளியீடுகள் குறித்த அண்மைக்கால தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அதோடு, அரசு விடுமுறை மற்றும் பல்வேறு முக்கிய நாட்களின் பட்டியலும் இடம்பெற்றுள்ளது.

இதனை கூகுள் பிளேஸ்டோர் மற்றும் ஐஓஎஸ்-ஸில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

கூகுள் பிளேஸ்டோர் இணைப்பு
https://play.google.com/store/apps/details?id=in.gov.calendar

ஐஓஎஸ் இணைப்பு
https://apps.apple.com/in/app/goi-calendar/id1546365594

https://goicalendar.gov.in/

செய்திச் சுருக்கம்



# பிரதமரின் யோகா விருதுகள் 2021-க்கு விண்ணப்பிப்பது தொடங்கியுள்ளது

யோகா கலையின் முக்கியத்துவம் குறித்து, அக்கலையின் மிகவும் பிரபலமான பிரதிநிதியான திருமலை கிருஷ்ணமாச்சார்யா கூறுவதாவது: “ உண்மையை வெளிப்படுத்தினால், குழப்பம் ஏன்? “ மனது தெளிவாக இருந்தால் நோய் எப்படி வரும்? சுவாசம் கட்டுப்பாடாக இருந்தால் மரணம் எங்கே? எனவே, யோகாவில் உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்! யோகா குரு பி.கே.எஸ்.ஐயங்கார் போன்றவர்கள் அவரது சீடர்கள். பிரதமர் நரேந்திரமோடி மேற்கொண்ட பெரும் முயற்சி காரணமாக, சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுவதுடன், தற்போது யோகா மற்றும் அதனை விரிவுபடுத்த இந்தியா ஆற்றிவரும் பங்களிப்பிற்காக உலக நாடுகள் அனைத்தும் பாராட்டி வருகின்றன. 2016-ம் ஆண்டு, இரண்டாவது சர்வதேச யோகா தின கொண்டாட்டத்தின்போது, இரண்டு வகையான யோகா விருதுகள் வழங்கப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார் - ஒன்று சர்வதேச அளவிலும், மற்றொன்று தேசிய அளவிலும், சர்வதேச யோகா தின கொண்டாட்டத்தின்போது அறிவிக்கப்படும். ஜூன் 21, 2021 அன்று நடைபெற உள்ள சர்வதேச யோகா தின கொண்டாட்டத்தின்போது அறிவிக்கப்பட உள்ள விருதுக்கு விண்ணபிக்கும் பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது. விருதுபெறுவோர், சுழற்கோப்பை, சான்றிதழ் மற்றும் ரூ.25 லட்சம் ரொக்கப்பரிசு வழங்கி கவுரவிக்கப்படுவார்கள். யோகா குரு கே.பட்டாபி-யின் கூற்றுப்படி, யோகா என்பது, ஆழ்மனதை தூய்மைப்படுத்த உதவும் சுய அறிதலுக்கு மிகச்சிறந்த உதாரணமாகும்.

## ஸ்டாண்ட் - அப் இந்தியா

### கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களை சுயசார்பு அடையச் செய்கிறது



பெண்கள் மற்றும் எஸ்.சி எஸ்.டி. சமுதாயத்தினர் சொந்தமாக புதிய தொழில் தொடங்குவதை ஊக்குவிக்கும் விதமாக, ஐந்தாண்டுகளுக்கு முன், ஸ்டாண்ட் -அப் இந்தியா தொடங்கப்பட்டது, தற்போது அது மிகவும் உறுதியான பலன்களை அளித்து வருகிறது. குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் தொழில் முனைவோர் திறனை ஊக்குவிக்கும் இத்திட்டம், அவர்களை வேலை வழங்குவோராக உருவாக்கி வருகிறது. மார்ச் 23, 2021 அன்றைய புள்ளிவிவரங்களின்படி, இத்திட்டத்தின்கீழ், 1.14கோடி கணக்குதாரர்களுக்கு ரூ.25,000 கோடிக்கும் மேற்பட்ட தொகை வழங்கப்பட்டுள்ளது. சுயசார்பு இந்தியாவை உருவாக்கும் குறிக்கோளுடன், ஏப்ரல் 5, 2016-ல் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் பெரும் வெற்றிபெற்று மிகவும் பிரபலமடைந்ததைத் தொடர்ந்து, தற்போது இது 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. நாட்டின் இதயமாக கருதப்படும் கிராமப்புறங்கள் மற்றும் சிறிய நகரங்களில், வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வு காணும் விதமாக, இதுவரை நடைமுறையில் இல்லாத ஸ்டார்ட்-அப் இந்தியா போன்ற திட்டங்களை பிரபலப்படுத்துவதற்கு, அரசு திட்டமிட்டுள்ளது.

## டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில் சீனா மற்றும் அமெரிக்காவை, விஞ்சி நிற்கும் இந்தியா




நாட்டில் நடைமுறையில் உள்ள டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை முறைகள், மக்களிடம் பிரபலமடைந்துள்ளன, குறிப்பாக கோவிட் பெருந்தொற்று காலத்தில் மிகவும் பிரபலமடைந்துள்ளன. டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையில், 2020-ம் ஆண்டில் சீனா மற்றும் அமெரிக்காவைத் தாண்டி, சர்வதேச அளவில் இந்தியா புதிய உலக சாதனை படைத்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் இந்தியாவில் 25.5 பில்லியன் ஆன்லைன் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு அடுத்தபடியாக, சீனாவில் 15.7 பில்லியன் பரிவர்த்தனைகளும், தென்கொரியாவில் 6 பில்லியனும், தாய்லாந்தில் 5.2 பில்லியன் மற்றும் பிரிட்டனில் 2.8 மில்லியன் ஆன்லைன் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1.2 பில்லியன் பரிவர்த்தனைகளுடன், அமெரிக்கா 9-வது இடத்திற்கு வந்து, முதல் 10 இடங்களை எட்டிப் பிடித்துள்ளது.

## பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட தகவல் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுடன், இலவச டிஷ் 4 கோடி குடும்பங்களை சென்றடைந்துள்ளது




4 கோடிக்கும் மேற்பட்ட இணைப்புகளை சென்றடைந்து புதிய சாதனை படைத்துள்ள டிடி இலவச டிஷ், 2025-க்குள் 5 கோடியைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்டார், சோனி, கலர்ஸ், செய்தி அலைவரிசைகள், விளையாட்டு மற்றும் கல்வி அலைவரிசைகள் உள்ளிட்ட 161-க்கும் மேற்பட்ட இலவச சேனல்கள், டிடி இலவச டிஷ் மூலம் வழங்கப்படுகிறது. டிடி இலவச டிஷ் -ஷில் இடம்பெற்றுள்ள அலைவரிசைகளில் ஒன்றான டிடி ரெட்ரோ-வில் இடம்பெற்றும் பழங்கால திரையிசை, மிகவும் குறுகிய காலத்தில் வெகுவாக பிரபலமடைந்துள்ளது. இது, டிடிஎச் மற்றும் தகுந்த ரிசீவர் மூலம் யார் வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளக்கூடிய பன்முக அலைவரிசையாகும். தரமான பொழுதுபோக்கு மற்றும் தகவல் நிகழ்ச்சிகளை வழங்குவதே இந்த அலைவரிசையின் நோக்கம் ஆகும். நாடுதழுவிய வலுவான கட்டமைப்புகளைக் கொண்டுள்ள டிடி இலவச டிஷ், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

### வாசனைப்பொருள் சாகுபடி செய்யும் விவசாயிகள் சர்வதேச சந்தையை அணுகுவது எளிதாக்கப்படும்

யுஎன்டிபி எனப்படும் ஐநா வளர்ச்சித் திட்டம் மற்றும் இந்திய வாசனை திரவியங்கள் வாரியமும் இணைந்து, கள்ளச்சந்தைகளை அறிந்துகொண்டு விவசாயிகள் சந்தையை அணுகும் வகையில், இந்திய வாசனை திரவிய வாரியம் உருவாக்கியுள்ள இ-ஸ்பைஸ் பஜார் இணையதளத்தில் சேர்த்து, இந்தியாவில் உள்ள வாசனை திரவியப் பொருள் சாகுபடி விசாயிகள், சர்வதேச சந்தையை அணுகுவதை எளிதாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. கள்ளச்சந்தையைக் கண்டறியும் இடைமுக வடிவமைப்புப் பணிகள், மே-2021க்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆந்திரபிரதேசத்தின் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மிளகாய்,மஞ்சள் சாகுபடி மேற்கொள்ளும் 3,000-த்திற்கும் மேற்பட்ட விவசாயிகளிடம், முன்னோடித் திட்டமாக இது செயல்படுத்தப்படுகிறது. உலகில் வாசனை திரவியங்களை உற்பத்தி செய்து, பயன்படுத்தும் மற்றும் ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது. 2019-20-ல் வாசனைதிரவிய ஏற்றுமதி 3பில்லியன் டாலரைத் தாண்டியுள்ளது.

### இந்திய சுதந்திர தின வைர விழா முடிவுக்கு வரும் முன்பே 2.14 கோடி பயனாளிகளுக்கு நிரந்தர குடியிருப்புகள்



அம்ரித் மஹோத்சவ் (இந்தியாவின் 75-வது சுதந்திர தினக் கொண்டாட்டம்) நிறைவடையும் ஆண்டிற்குள், பிரதமரின் வீட்டுவசதித் திட்டம்-கிராமப்புறம் வாயிலாக, நாட்டின் கிராமப்புறங்களில் வசிக்கும் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட வீடு வழங்குவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசின் இந்த முன்னோடித் திட்டத்தின்கீழ், சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையில், நிரந்தரமான காத்திருப்போர் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. 2011-ம் ஆண்டு சமூக-பொருளாதார மற்றும் சாதிவாரி மக்கள்தொகை புள்ளி விவரங்களின்படி, மொத்தம் 2.14 கோடி பயனாளிகள், இத்திட்டத்தில் பயன்பெறத் தகுதியுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

### நெடுஞ்சாலை கட்டுமானத்தில் ஒரு நாளைக்கு 37கிலோமீட்டர் சாலை அமைத்து சாதனை !

கடந்த சில ஆண்டுகளாக, நாட்டில் நெடுஞ்சாலை கட்டுமானப் பணியில் இந்தியா அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஏப்ரல் 2014ல் 91,287 கிலோமீட்டராக இருந்த, நெடுஞ்சாலை கட்டுமானம், கடந்த 7 ஆண்டுகளில் 50 சதவீதம் அதிகரித்து, மார்ச் 20, 2021-ல் 1,37,625 கிலோமீட்டர் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. நாட்டில் உள்ள மொத்த சாலைகளில் நெடுஞ் சாலைகளின் அளவு வெறும் 2.2சதவீதம் மட்டுமே என்றாலும், மொத்த வாகனப் போக்குவரத்தில் 40 சதவீத சுமையைத் தாங்குகின்றன. நாடு முழுவதும் நெடுஞ் சாலை இணைப்புகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் அரசு, 2015-ல் ரூ.33,414 கோடியாக இருந்த இத்துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை, 5.5மடங்கு அதிகரித்து, 2021-2022 நிதியாண்டில் ரூ.1,83,101 கோடியாக நிர்ணயித்துள்ளது. கட்டுமானப் பணிகளின் முன்னேற்ற வேகத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், 2010 முதல் 2014 வரை 5,865 திட்டங்களுக்கு மட்டுமே ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், 2015 முதல் 2021 வரை10,855 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



# கோகலே:
## மகாத்மாக்களின் மகாத்மா

கோபால கிருஷ்ண கோகலே, பிப்ரவரி 19, 1915-ல் தனது இறுதிமூச்சைவிட்டபோது, "ஒரு அரசியல்வாதியிடம் நான் காணவிரும்பிய அனைத்து குணநலன்களையும் கொண்டவராக அவர் திகழ்ந்தார், சொக்கத்தங்கம் போன்று தூய்மையானவர், செம்மறி ஆட்டுக்குட்டியைப் போன்று மென்மையானவர், சிங்கம் போன்ற துணிச்சல் கொண்டவர் மற்றும் தவறுகளை எதிர்ப்பதில் உறுதியானவர்" என்று காந்தியடிகள் குறிப்பிட்டார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில், முற்றிலும் மாறுபட்ட குணம்கொண்ட இரண்டு தலைவர்களும் ஏற்றுக்கொண்ட ஒரே வழிகாட்டியாகத் திகழ்ந்தவர் கோகலே. அவரது அகிம்சை கொள்கையால் மகாத்மா காந்தி ஈர்க்கப்பட்டார் என்றால், முகமது அலி ஜின்னா, அவரிடமிருந்து சட்ட நுணுக்கங்களை அறிந்துகொண்டார்.



மகாராஷ்டிரா மாநிலம் ரத்னகிரியில், மே 9, 1866-ல் பிராமணக் குடும்பத்தில் பிறந்தவர் கோபால கிருஷ்ண கோகலே. கோகலே, நாகரீகமான குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்ததால், அவருக்கு சிறப்பான கல்வி கிடைத்தது. பிரிட்டிஷாரின் நவீன கல்வி முறையில் கல்லூரி பட்டம்பெற்ற முதல் தலைமுறை இந்தியர்களில் ஒருவராக அவர் இருந்தார். 1884-ல் மும்பையின் எல்ஃபின்ஸ்டன் கல்லூரியில் தமது பட்டப்படிப்பை அவர் நிறைவு செய்தார். பின்னர் அவர், பூனா கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றினார். இந்த காலகட்டத்தில், மகாதேவ் கோவிந்த் ரனடே மற்றும் பெரோஸ்ஷா மேத்தா ஆகியோருடன் கலந்துரையாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இவர்களிடமிருந்து சட்ட நுணுக்கங்களை கற்றுக்கொண்டபோது, அவர் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக சேர்ந்தார். மேத்தா, பம்பாய் மாகாண சட்டமேலவை உறுப்பினராக பதவிவகித்தார். கோகலே-வும் அந்த அவையின் உறுப்பினரான காலகட்டத்தில், பட்ஜெட் தாக்கல் செய்த பிரிட்டிஷ் நிதியமைச்சர் எட்வர்டு லா, ரூ.7 கோடியை சேமித்திருப்பதாக அறிவித்தது அனைத்து தரப்பினரிடையேயும் பாராட்டுப் பெற்றது. இதே காலகட்டத்தில், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பஞ்சம் தலைவிரித்தாடியது. கோகலே தனது வாதத்திறமையால், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் எவ்வாறு அதிக வரி விதிக்கிறது, ராணுவத்தை எவ்வாறு பிளவுபடுத்துகிறது, கல்விக்கான ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளது என்பதை நிரூபித்து, அப்போதைய அரசாங்கத்தின் இரட்டைவேடத்தை அம்பலப்படுத்தினார். கோகலே-வின் இந்தப் பேச்சு அவரை பிரபலமடையச் செய்ததுடன், காங்கிரஸ் கட்சியிலும் அவர் மேலும் வளர வழிவகுத்தது. 39 வயதிலேயே அவர் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்புக்கு தேர்வுசெய்யப்பட்டார். அதன்பிறகு, காங்கிரஸ் கட்சியில், பால கங்காதர திலகர் தலைமையில் தீவிரவாதிகள் ஒரு அணியாகவும், கோகலே தலைமையில் மிதவாதிகள் ஒரு அணியாகவும் செயல்படத் தொடங்கினர். கோகலேவின் கல்லூரித் தோழரான

> *"கோபால கிருஷ்ண கோகலே-வை அவரது பிறந்த நாளில் நினைவுகூருகிறேன். தலைசிறந்த ஞானம் கொண்டவரான அவர், கல்வி மற்றும் சமூக அதிகாரமளித்தலுக்காக அளப்பரிய பங்காற்றியுள்ளார். இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கும் சிறப்பான முறையில் தலைமைவகித்துள்ளார்."*
>
> **— பிரதமர் நரேந்திரமோடி**

திலகர், அவரது கடும் அரசியல் எதிரியாகத் திகழ்ந்தார். கோகலே தமது வாழ்நாள் முழுவதும் சாதிக்கொடுமைகள் மற்றும் தீண்டாமையை எதிர்த்து கடுமையாகப் போராடி வந்தார். இந்தியாவின் கல்வி முன்னேற்றத்திற்கு பணியாற்றுவதற்காக, இந்திய பணியாளர்கள் கழகத்தை உருவாக்கினார். கோகலே-வின் பெரும் முயற்சி காரணமாக ஏற்பட்ட மின்டோ-மார்லி சீர்திருத்தங்களின் பலனாக, கவர்னர் ஜெனரலின் நிர்வாகக் குழுவில் இந்தியர்களுக்கும் இடம் கிடைத்தது. சுதேசிக் கொள்கையை முதன்முதலில் வெளியிட்டவர் கோகலே என்றும், அதன்பிறகு மகாத்மா காந்தி அதனை ஒரு இயக்கமாகவே மாற்றினார் என்றும் கூறப்படுகிறது.

கோகலே, தமது 48-வது வயதில் பிப்ரவரி 19, 1915-ல் காலமான போது மஹாத்மா காந்தி இப்படி எழுதினார்: "சர் பெரோஸ் ஷா (மேத்தா) எனக்கு இமயமலையாகவும், லோக்மான்யா(பால கங்காதர திலகர்) சமுத்திரமாகவும் தெரிந்தாலும், (கோபால கிருஷ்ணா) கோகலே கங்கையைப் போன்றவர். இமயமலை அளவிட முடியாதது, சமுத்திரத்தையும் யாராலும் எளிதில் கடந்துவிட முடியாது, ஆனால், புனித கங்கையில் யார் வேண்டுமானாலும் குளித்துப் புத்துணர்வுபெறலாம்." ■



# 'தற்சார்பு இந்தியா முழக்கம்'

## நாட்டின் உந்து சக்தி

கொரோனா பெருந்தொற்று பாதிப்பைக் கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்ட பொதுமுடக்கம் மற்றும் பிற கட்டுப்பாடுகள் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு பெரிதும் பாதிக்கப்பட்ட நேரத்தில், நாட்டை தற்சார்புடையதாக மாற்றும் நோக்கில் 'உள்ளூர் பொருட்களுக்கு குரல்கொடுப்போம்' என்ற நீண்டகால கொள்கையை அரசு அறிமுகப்படுத்தியது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக, கடந்த ஆண்டு மே-12ந் தேதி அறிவிக்கப்பட்ட 'உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம்' என்ற இயக்கம், குறுகிய காலத்திலேயே மிகவும் பிரபலமடைந்தது. தற்போது அது மாபெரும் மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் விவேகமான சிந்தனையில் உருவான இத்திட்டம் நல்ல பலனை அளித்து வருவதால், முதலீட்டிற்கு மிகவும் உகந்த இடமாக இந்தியா உருவெடுத்துள்ளது. 'உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம்' என்ற அழைப்பு உண்மையிலேயே, இந்தியாவின் விருப்பங்களுக்கு சிறகு முளைத்தது போல் அமைந்துள்ளதுடன், 'இந்தியாவில் உற்பத்தி' மற்றும் 'உலகிற்காக தயாரிப்பு' போன்றவற்றை நனவாக்கியுள்ளது.

ஒரு நூற்றாண்டில் ஒருமுறை தான், ஏழை - பணக்காரன், இளைஞர் - முதியோர் மற்றும் பெண்கள் - ஆண்களுக்கிடையேயான இடைவெளியை அகற்றி, அனைத்துத் தரப்பினரும் தேச நிர்மானத்திற்காக பணியாற்றுவதற்கு ஊக்கமளிக்கும் காலம் வரும்.

இந்த தேசிய கொள்கை, இந்தியாவை தற்சார்பு அடைய செய்ததோடு மட்டுமின்றி, வெளிநாட்டுப் பொருட்கள் மீது உள்ளூர் நுகர்வோரிடம் இருந்த மோகம் என்ற மாயை-யும் தகர்த்தெறிந்து களத்தையே மாற்றியமைத்துள்ளது. இந்தியப் பொருட்களை வாங்குவதில் சாமான்ய நுகர்வோரிடம் ஏற்பட்டுள்ள இந்த ஆர்வம், இதனை மக்கள் இயக்கமாக மாற்றியுள்ளது.

விசாகபட்டினத்தைச் சேர்ந்த வெங்கட் முரளி பிரசாத் என்பவர், சில மாதங்களுக்கு முன் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றிலிருந்து, இந்த தேசத்தின் மனநிலையை அளவிட முடிகிறது. அதில், "இந்த கடிதத்துடன் 2021-ம் ஆண்டிற்கான எனது ABC-யையும் இணைத்து அனுப்பியுள்ளேன்" என்று எழுதி இருந்தார். எடுத்த உடனேயே, இதன் பொருளை பிரதமரால் கூட மதிப்பிட முடியவில்லை. ஆனால், அந்தக் கடிதத்துடன் அனுப்பப்பட்டிருந்த இணைப்பை பிரதமர் படித்துப் பார்த்தபோது தான், **ABC** என்பதற்கு **Atma Nirbhar Chart** என்ற பொருள்பட பிரசாத் எழுதியிருப்பதை உணர முடிந்தது. அவர் தமது கடித இணைப்பில், அன்றாட வாழ்க்கையில் தான் உபயோகிக்கக் கூடிய பொருட்களின் பட்டியலை இணைத்திருந்தார். மின்னணு சாதனங்கள், எழுதுபொருட்கள் மற்றும் அன்றாடம் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களின் விவரத்தை அந்தப் பட்டியலில் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். பிரதமன் உறுதிப்பாட்டிற்கேற்ப, உள்நாட்டுத் தொழிலாளர்களின் வியர்வையும் உழைப்பும் அடங்கியுள்ள பொருட்களை மட்டுமே பயன்படுத்துவதை அவர் பகிர்ந்து கொண்டிருந்தார். "வெளிநாட்டுப் பொருட்களுக்கு இணையான பொருட்கள், உள்நாட்டிலேயே எளிதில் கிடைக்கிறது என்பதை அறியாமலேயே நாம் வெளிநாட்டுப் பொருட்களை உபயோகித்து வருகிறோம்" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவரது குறிப்பில் இருந்த கருத்துக்களை ஆதரிக்கும் பிரதமர், "இத்தகைய உணர்வுகளை நாம் மேலும் வளப்படுத்துவதோடு, அதனை மேலும் விரிவுபடுத்துவது பற்றியும் ஆராய வேண்டும்". அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களின் பட்டியலையும், நமது வாழ்க்கையில் ஊடுருவி, அவற்றை சார்ந்திருக்கும் நிலையை உருவாக்கியுள்ள வெளிநாட்டுப் பொருட்களின்



## சுயசார்பு இந்தியா தொகுப்பு என்றால் என்ன...

*கொரோனா, சாதாரண வாழ்க்கை நடைமுறைகளைக் கட்டுப்படுத்தியது மட்டுமின்றி, நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் தடையை ஏற்படுத்தியது. வீழ்ச்சியடையும் பொருளாதார நிலையை மாற்றி பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் நோக்கில் சுயசார்பு இந்தியா பொருளாதார தொகுப்பு அறிவிக்கப்பட்டது. சுயசார்பு தொகுப்பு 1.0 திட்டத்தின்கீழ், முதலாவது நிவாரணத் தொகுப்பில் மே 13 முதல் மே 17 வரை ரூ.20.97 லட்சம் கோடி மதிப்புள்ள ஐந்து அறிவிப்புகளை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார். அதன்பிறகு, சுயசார்பு தொகுப்பு 2.0-வின்கீழ், அக்டோபர் 12, 2020-ல் ரூ.73,000 கோடி மதிப்புள்ள கூடுதல் தொகுப்பு ஒன்றும் அறிவிக்கப்பட்டது.*

### தற்சார்பு இந்தியா 1.0

- **ஒரே நாடு, ஒரே கார்டு:** ரேஷன் பொருட்களை, ஒரே ரேஷன் கார்டு மூலம், நாட்டின் எந்த பகுதியில் உள்ள ரேஷன் கடையிலிருந்தும் வாங்க முடியும்.
- **பிரதமரின் ஸ்வாநிதி திட்டம்:** சாலையோர வியாபாரிகள், சுமார் 23.97 லட்சம் பேருக்கு சிறு வணிகக்கடன்கள் அளிக்கப்பட்டுள்ளன.
- **விவசாயி கடன் அட்டை திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் 157.44 லட்சம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.
- **பிரதமரின் மீன் வளர்ப்பு திட்டம் :** 2020 டிசம்பர் 9ம் தேதி வரை, ரூ.2,812 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.
- **நபார்டு மூலம் விவசாயிகளுக்கு அவசரகால தொழில் முதலீட்டு நிதி:** இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.25,000 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- **வங்கிசாரா நிதி நிறுவனங்கள்/வீட்டு வசதி நிதி நிறுவனங்களுக்கு சிறப்பு பணப்புழக்க திட்டம்:** இத்திட்டத்துக்கு இதுவரை ரூ.7,227 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- **டிஸ்காம் நிறுவனங்களுக்கு நிதியுதவி:** இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.1,18,273 கோடி கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இதுவரை ரூ.31,136 கோடி மதிப்பிலான கடன் வழங்கப்பட்டுள்ளது.
- **பகுதி கடன் உத்திரவாத திட்டம்:** இத்திட்டத்தின் கீழ் பொதுத்துறை வங்கிகள், ரூ.26,899 கோடி கடன் வழங்கியுள்ளன.
- **இசிஎல்ஜிஎஸ் 1.0:** இத்திட்டத்தின் கீழ் 6 மில்லியனுக்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு ரூ.2.05 லட்சம் கோடி வழங்கப்பட்டுள்ளது.

### தற்சார்பு இந்திய திட்டம் 2.0

**பண்டிகை முன்பணம்:** இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு எஸ்பிஐ உத்சவ் அட்டை வழங்கப்பட்டுள்ளது.

**LTC எல்டிசி ரொக்க உறுதிசீட்டு திட்டம்:** பொருளாதார முன்னேற்றத்திற்கு புதிய உத்வேகம் அளிக்கும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

- சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மற்றும் ராணுவ அமைச்சகங்களுக்கு கூடுதல் முதலீட்டு செலவினங்களுக்காக ரூ.25,000 கோடி வழங்கப்பட்டுள்ளது.

### தற்சார்பு இந்திய திட்டம் 3.0.

- சுகாதாரம் மற்றும் இதர 26 துறைகளில், நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் அவசர கால கடன் உத்திரவாத திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்பு திட்டம் அறிவிப்பு. 10 புதிய துறைகள் உட்பட 13 துறைகளுக்கு உற்பத்தியுடன் கூடிய ஊக்குவிப்பு திட்டம் அறிவிக்கப்பட்டது.
- பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் (நகர்ப்புறம்) கீழ் ரியல் எஸ்டேட் திட்டங்களை நிறைவேற்றவும், வேலை வாய்ப்பை உருவாக்கவும் ரூ.18,000 கோடி மதிப்பிலான கூடுதல் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- கட்டுமான துறையில் செயல்படும் நிறுவனங்கள் 2021 டிசம்பர் வரை, 10 சதவீதத்துக்கு பதிலாக 3 சதவீத வங்கி உத்திரவாதத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது.
- வீடு வாங்குவோருக்கும், சொந்த வீடு கட்டுவோருக்கும், வருமான வரியில் தள்ளுபடி வழங்கப்பட்டது.
- 14 கோடி விவசாயிகள் பயன்பெறுவதற்காக ரூ.65,000 கோடி மதிப்பிலான உர மானியம் வழங்கப்பட்டது. பிரதமரின் ஏழைகள் நலன் திட்டத்தின் கீழ் கூடுதலாக ரூ.10,000 கோடி வழங்கப்பட்டது.
- கடன்கள் மூலமாக ஏற்றுமதி வளர்ச்சிக்கு உதவ எக்ஸிம் வங்கிக்கு ரூ.3,000 கோடி வழங்கப்படும்.
- கொவிட் தடுப்பூசி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு, ரூ.900 கோடி அளிக்கப்பட்டது.

விவரத்தையும் தயாரிக்குமாறு, நாட்டு மக்களை கேட்டுக் கொள்கிறேன். வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படும் இத்தகைய பொருட்களுக்கான மாற்றுப்பொருட்களை இந்தியாவிலேயே கண்டறிவதுடன், இந்திய மக்களின் உழைப்பு மற்றும் வியர்வை சம்பந்தப்பட்டுள்ள இந்தியப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும். நாட்டு நலனுக்காகவும் இந்த உறுதிமொழியை ஏற்க வேண்டும்.“

முக்கியமாக, கொரோனாவல் ஏற்பட்ட தீய விளைவுகளை அகற்றுவதில் முன்னோடியாகத் திகழும் பிரதமர், குழப்பங்களிலிருநது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் தருணத்திற்காகவும் அரும்பாடுபட்டு வருவதுடன், விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான செயல் திட்டத்தையும் வகித்துள்ளார். மூன்றாம்கட்ட பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட சூழலில் மே12 அன்று நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர், கோவிட்



## சீர்திருத்தங்களின் விளைவு | வேகமாக மீண்டுவரும் பொருளாதாரம்...

- அரசால் அறிவிக்கப்பட்ட ரூ.29.87 லட்சம் கோடி தொகுப்பு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 15 சதவீதம் ஆகும். பொருளாதார வளர்ச்சி இயந்திரத்தை விரைவுபடுத்துவதற்காக, மற்ற நாடுகளும் பொருளாதார ஊக்குவிப்புத் திட்டங்களை அறிவித்துள்ளன. ஜப்பான், அமெரிக்கா, ஸ்வீடன், ஜெர்மனி, ஸ்பெயின் மற்றும் சீனா போன்ற நாடுகளும், முறையே தத்தமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 21.1 சதவீதம், 13 சதவீதம், 12 சதவீதம், 10.7 சதவீதம், 7.3சதவீதம் மற்றும் 3.8 சதவீதம் மதிப்புள்ள பொருளாதார ஊக்குவிப்பு தொகுப்புகளை அறிவித்துள்ளன.
- கொரோனா காலகட்டத்தில் பொதுமுடக்கம் காரணமாக அறிவிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் -23.9 சதவீதமாக குறைந்தபோதிலும், பொருளாதாரம் மறுமலர்ச்சி அடையும் என பொருளாதார நிபுணர்களும் கணித்துள்ளனர். எனினும், அரசின் தொலைநோக்குப் பார்வை காரணமாக, மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 'V வடிவ' நிலைக்கு மீண்டதன் வாயிலாக, பொருளாதாரத்தின் மூன்றாவது காலாண்டின் இறுதியில் 0.4 சதவீத வளர்ச்சி என்ற சாதகமான நிலையை எட்டியுள்ளது.
- ஏப்ரல் 2020 முதல் ஜனவரி 2021 வரையிலான 10 மாதத்தில், 72.12 பில்லியன் டாலர் மதிப்புள்ள அன்னிய நேரடி முதலீடுகள் இந்தியாவிற்கு வந்துள்ளது. எந்தவொரு நிதியாண்டிலும், 10 மாத காலத்திற்குள் கிடைத்த மிக அதிகமான அன்னிய நேரடி முதலீடு இதுவே ஆகும்.
- மார்ச் 2020-ல் பொதுமுடக்கம் அறிவிக்கப்படுவதற்கு சற்று முன்புவரை, 21.49 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் மொத்த ஏற்றுமதி 34 பில்லியன் டாலர்களாக அதிகரித்து, மார்ச் 2021-ல் 48.23 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது. இந்த காலகட்டத்தில், இந்தியாவில் பயன்படுத்தப்படும் 5 முக்கியப் பொருட்களின் இறக்குமதி 13 முதல் 90 சதவீதம் வரை குறைந்துள்ளது.
- மார்ச் 2021 சரக்கு மற்றும் சேவை வரியின் வாயிலாக மிக அதிகமாக ரூ.1.23 லட்சம் கோடி கிடைத்தது. கடந்த 2020 அக்டோபர் மாதத்திலிருந்து தொடர்ச்சியாக 6-வது முறையாக சரக்கு மற்றும் சேவை வரியின் வருவாய் ரூபாய் ஒரு லட்சம் கோடி அளவைக் கடந்துள்ளது.

## இதுவரை அறிவிக்கப்பட்ட ஊக்கத்தொகைகளின் விவரம்

| | |
|---|---|
| பிரதமரின் கரீப் கல்யாண் திட்டம் | ரூ.1,92,800 கோடி |
| சுயசார்பு இந்தியா இயக்கம் 1.0 | ரூ.11,02,650 கோடி |
| பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா | ரூ.82,911 கோடி |
| சுயசார்பு இந்தியா இயக்கம் 2.0 | ரூ. 73,000 கோடி |
| அர்ஜுன் நிர்மல் பாரத் திட்டம் 3.0 (சுயசார்பு இந்தியா திட்டம் 3.0) | ரூ.2,65,080 கோடி |
| இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகள் | ரூ. 12,71,200 கோடி |
| **மொத்தம்** | **ரூ. 29,87,641 கோடி** |

பாதிப்பிற்கு பிந்தைய உலகின் நிலையை சுட்டிக்காட்டினார். நாடு சுயசார்பு அடைவதற்கான பொருளாதாரம், கட்டமைப்பு மற்றும் அதிக தேவையுள்ள அம்சங்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்தக்கூடிய எதிர்காலத்திற்கான செயல் திட்டத்தையும் அவர் அறிவித்தார். இந்திய உற்பத்திப் பொருட்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கச் செய்யும் நோக்கில், 'உள்ளூர் பொருட்களுக்கு குரல்கொடுப்போம்' என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார். இதன் பலனாக, இந்தியச் சந்தைகள் அன்னிய முதலீட்டாளர்களை அதிகளவில் ஈர்ப்பதுடன், ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு தற்போது அதிக கிராக்கி (தேவை) ஏற்பட்டுள்ளது. இது, உலகளவில் போட்டியிடக்கூடிய வகையில் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய உள்ளூர் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

மார்ச் 25, 2020-ல் முதலாவது பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டதும், மறுநாளே பிரதமரின் ஏழைகள் நலவாழ்வுத் திட்டத்தின்கீழ் (பிரதமரின் கரீப் கல்யாண் யோஜனா) நாட்டிலுள்ள கிராமப்புறங்கள் மற்றும் ஏழை மக்களுக்கு உதவும் விதமாக, ரூ.1.75லட்சம் கோடி மதிப்பிலான நிவாரணத் தொகுப்புத் திட்டத்தை அரசு அறிவித்தது. அத்துடன், மே 12-ந்தேதி ரூ.20லட்சம் கோடி மதிப்புள்ள பொருளாதார தொகுப்புத் திட்டங்கள் அறிவிக்கப்படுவதையொட்டி, பொதுமுடக்க காலத்தில் ஏராளமான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அறிவிப்புகளை வெளியிடுவதற்கு முன்பாக, தொழில் துறையினரையும் பிரதமர் கவனத்தில் கொண்டதோடு, மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நாட்டிலுள்ள தனியார் தொண்டு நிறுவனங்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தார். விவசாயம், எரிசக்தி, கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளுடன் தொடர்புடையவர்களுடனும், காணொளிக் காட்சி வாயிலாக பிரதமர் ஆலோசித்தார். மாநில முதலமைச்சர்களின் கருத்துக்களை கேட்டறிவதற்காக, ஐந்து முறை, உயர்மட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டங்களையும் அவர் நடத்தினார். இந்தியாவை சுயசார்பு அடையச் செய்ய வேண்டும் என்ற பிரதமரின், நடைமுறைக்கு சாத்தியமான தொலைநோக்குப் பார்வை, இந்தியா தற்போதைய நிலையிலிருந்து எதிர்காலத்திற்கேற்ப மாறுவதை உறுதிசெய்ய உதவும். ■




# தடுப்பூசித் திருவிழா:

## கொரோனாவுக்கு எதிரான இரண்டாவது யுத்தம்

### 18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்

கொரோனா பெருந்தொற்று இரண்டாவது அலையினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மிக அபாயகரமான அளவை எட்டியுள்ளன. புதிய நோயாளிகள், தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள், தொற்றின் விகிதம்... ஒவ்வொரு எண்ணிக்கையும் புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. எனவே கொரோனா தொற்றின் சங்கிலியைக் உடைப்பதற்காக தடுப்பூசித் திருவிழாவை நடத்த நாடு முடிவு செய்தது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இரண்டாவது அலையில், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அளவு, பல்வேறு மாநிலங்களிலும் அபாய கட்டத்தைத் தாண்டியுள்ளது. பிப்ரவரி மாதத்திலேயே தொற்று காணாமல் போய்விடும் என்பது போன்று தோன்றிய நிலையில், இந்த ஆண்டில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், தடுப்பூசி போடும் பணியை அரசு மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

கொரோனா தடுப்பூசி போடும் பணியை ஜனவரி 16, 2021-ல் இந்தியா தொடங்கியது. முன்னுரிமை அடிப்படையில் முதலாவதாக சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. பிப்ரவரி 2-ம் தேதிக்குப் பிறகு முன்களப் பணியாளர்களுக்கு தடுப்பு மருந்து செலுத்தப்பட்டது. இதற்கு அடுத்ததாக, 60 வயதுக்கும் மேற்பட்டோர் மற்றும் இணை நோய் உள்ள 45 முதல் 59 வரையான வயது உள்ளவர்களுக்கு மார்ச் 1 முதல் தடுப்பூசி போடப்பட்டது. நாடு முழுவதும் கொரோனாவின் இரண்டாவது அலை தாக்கிய நிலையில், எந்தவொரு இணை நோயும் இல்லாத 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி போடும் பணியை அரசு தொடங்கியது. தற்போது, 45 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு அவர்களது பணியிடங்களிலேயே தடுப்பூசி போட வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.

### புதிய உச்சத்தை தொட்ட ஒரு நாள் தொற்று பாதிப்பு

ஏப்ரல் 19-ம் தேதி வெளியிடப்பட்ட தரவுகளின்படி, இந்தியாவில் 24 மணிநேரத்தில் 2.75 லட்சம் பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இது ஒரே நாளில் ஏற்பட்ட உச்சபட்ச பாதிப்பு ஆகும். ஒட்டுமொத்த பாதிப்பில் 10 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் மட்டும் 80 சதவீத பாதிப்புகள் கண்டறியப்பட்டன. அதாவது, மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், பஞ்சாப், டெல்லி, ராஜஸ்தான், குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம், சத்தீஷ்கர், கேரளா ஆகியவை அதிக பாதிப்புகளை சந்தித்துள்ளன.

### ரெம்டெசிவிர் மருந்து ஏற்றுமதிக்கு தடை

ரெம்டெசிவிர் ஊசி மருந்து ஏற்றுமதிக்கு அரசு தடைவிதித்தது.

**ஸ்புட்னிக் வி தடுப்பூசிக்கு அரசு அனுமதி; மேலும் சில தடுப்பூசிகளுக்கு விரைவில் அனுமதி கிடைக்கவிருக்கின்றன!**

ரஷ்யாவின் ஸ்புட்னிக்-வி தடுப்பூசியை அவசரகாலமாக பயன்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மற்ற தடுப்பூசிகளுக்கும் ஒப்புதல் அளிக்க பரிசீலித்து வருகிறது. கோவாக்சின், கோவிஷீல்டு ஆகியவற்றைத் தொடர்ந்து, ஸ்புட்னிக்-வி தடுப்பூசிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், ஆஸ்ட்ராஜெனீகா இணைந்து கோவிஷீல்டு மருந்தை கண்டுபிடித்துள்ளன. இதனை புனே-வில் உள்ள சீரம் நிறுவனம் உற்பத்தி செய்கிறது. கோவாக்சின் தடுப்பு மருந்தை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், தேசிய வைரஸ் ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து பயோடெக் நிறுவனம் கண்டறிந்துள்ளது. ஸ்புட்னிக்-வி மருந்தை டாக்டர் ரெட்டீஸ் ஆய்வக நிறுவனம் உற்பத்தி செய்ய உள்ளது. இந்த தடுப்பூசியின் திறன் 91.6%-ஆக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




### 85 நாட்களில் 10 கோடி தடுப்பூசிகள்

கொரோனா தடுப்பூசி போடுவதில் ஏப்ரல் 10-ல் மிகப்பெரும் மைல்கல்லை இந்தியா எட்டியது. தடுப்பூசி போடும் பணி ஜனவரி 16-ல் தொடங்கிய நிலையில், 85 நாட்களில் 10 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட்டன. இதுவே அதிவேக தடுப்பூசி பணியாகும். 85 நாட்களில் அமெரிக்கா 9.2 கோடி மருந்துகளை செலுத்தியது. சீனாவில் 6.14 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டன. ஏப்ரல் 5-ல் சாதனை அளவாக 24 மணிநேர காலத்தில் 43 லட்சம் தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட்டன.

கொரோனா நோயாளிகளுக்கு ஆக்சிஜன் அளவு குறையும்போது, ரெம்டெசிவிர் ஊசி மருந்தை போடலாம் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கொரோனா தொற்றுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்துவருவதால், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, ரெம்டெசிவிர் ஏற்றுமதிக்கு தடைவிதிக்க அரசு முடிவுசெய்தது. இந்த ஊசியை இந்தியாவில் 7 நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்றன. தினசரி 38.80 லட்சம் ஊசி மருந்தை உற்பத்தி செய்யும் திறனை இந்த நிறுவனங்கள் பெற்றுள்ளன. இதற்கும் மேலாக, நாட்டில் நிலைமை சீரடையும் வரை, முக்கிய மருந்துப் பொருட்கள் (Active Pharmaceutical Ingredients) ஏற்றுமதிக்கும் அரசு தடை விதித்துள்ளது. ஒவ்வொரு உள்நாட்டு உற்பத்தியாளரும், விநியோகஸ்தரும் தங்களிடம் உள்ள இருப்பு நிலவரங்கள் குறித்து இணையதளத்தில் தெரிவிக்க வேண்டும். ■

## பரிசோதனை, கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளிப்பதற்கு முக்கியத்துவம்

மகாராஷ்டிராவில் அதிக அளவிலானோருக்கு கொரோனாவைரஸ் பாதிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. சில இடங்களில் பகுதியளவு பொதுமுடக்கம் அமல்படுத்தப்பட்டது. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகளுடன் ஏப்ரல் 8, 2021-ல் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின்போது, பரிசோதனை, கண்டறிதல் மற்றும் சிகிச்சையில் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். அப்போது பேசிய பிரதமர், "கடந்த ஆண்டில் இருந்த நிலை என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். அப்போது, நம்மிடம் பரிசோதனைக்கான ஆய்வகங்கள் இல்லை. போதிய அளவில் முகக்கவசம் கிடைக்கவில்லை. தனிநபர் பாதுகாப்பு கவச உடைகளும் இல்லை. அந்த நேரத்தில், தொற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே வழியாக பொதுமுடக்கம் இருந்தது. இதன்மூலம், தேவையான பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை அதிவேகமாக செய்ய முடிந்தது. இந்த உத்தி, மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தது. ஏற்பாடுகளையும், வளங்களையும் ஏற்படுத்தி, நமது திறனை அதிகரிக்க முடிந்தது. ஆனால் இன்று, நம்மிடம் அனைத்து வளங்களும் உள்ளன. நமது ஆளுமை மீதான சோதனையாக உள்ளது. சிறு அளவிலான கட்டுப்பாட்டு மண்டலங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்," என்றார்.

### பிரதமர் வலியுறுத்திய சில கருத்துக்கள்

- கொரோனா பெருந்தொற்றை கையாள்வதில் மிகப் பெரிய அம்சம் என்பது தடுப்பூசி மருந்து வீணாவதைத் தடுப்பது ஆகும்
- தடுப்பூசி போட்டபிறகும் கூட, முகக்கவசம் அணிவது மற்றும் மற்ற வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்று மக்களிடம் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டும்.
- ஜோதிபா புலே-வின் பிறந்த நாளான ஏப்ரல் 11 முதல் பாபா சாகேப் அம்பேத்கரின் பிறந்த தினமான ஏப்ரல் 14 வரை டீக்கா உத்சவ் அல்லது தடுப்பூசி திருவிழா நடைபெற்றது
- நாம் நான்கு விஷயங்களில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். முதலாவது - ஒவ்வொருவரும் மற்றொருவருக்கு தடுப்பூசி போடச் செய்வது. அதாவது, தாங்களாகவே சென்று தடுப்பூசி போட்டுக் கொள்ள முடியாத நிலையில் உள்ள கல்வியறிவில்லாத மக்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட வேண்டும்.
- இரண்டாவது, ஒவ்வொருவரும் மற்றொருவருக்கு சிகிச்சை அளிப்பது. அதாவது, குறைந்த வசதிகளே உள்ள மற்றும் போதிய தகவல்கள் தெரியாத மக்களுக்கு கொரோனாவுக்கான சிகிச்சை பெற உதவ வேண்டும்
- மூன்றாவது - ஒவ்வொருவரும் மற்றொருவரை காப்பாற்றுவது. அதாவது, மற்றவர்களை காப்பதற்காகவும் கூட, தானே முகக்கவசம் அணிந்துகொள்வது
- நான்காவது, மிகவும் முக்கியமான அம்சம். யாருக்காவது கொரோனா தொற்று ஏற்பட்டால், அந்தப் பகுதியை சேர்ந்த மக்கள், கொரோனா தொற்று உள்ள பகுதியில் சிறு கட்டுப்பாட்டு மண்டலத்தை உருவாக்க வேண்டும்.



# பிரிட்டிஷாருக்கு சவால் விடுத்த பீமா ஜல்காரியால் பெருமைகொள்ளும் ஜான்சி

*மே 10, 1857-ல் நடந்த சம்பவம், புதிய சகாப்தம் உருவாக காரணமாக இருந்தது. புதிய தலைவர் மற்றும் புதிய கொடியின் மூலம், ராணுவத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி, தேசிய மற்றும் மதப் போராட்டமாக மாறியது என்பதே உண்மை.*

**இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறு எண்ணிலடங்காத நிலைகள் இருந்தன. இவற்றின் மூலம், சக்தியையும், ஊக்குவிப்பையும் நாம் பெற்றோம். எண்ணிலடங்காத போராளிகளுக்கு நாடு நாள்தோறும் நன்றியை வெளிப்படுத்தி வருகிறது. சுதந்திரம் என்ற விடியலுக்காக பல நூற்றாண்டுகள் அடிமைத்தனத்துடன் காத்திருந்த காலத்துக்கும், சுதந்திரம் பெற்றபிறகு 75 ஆண்டுக்கும் உள்ள நிலையை நாம் கவனித்தால், எந்த அளவுக்கு முன்னேற்றம் பெற்றிருக்கிறோம் என்பது தெரியவரும். இதுதொடர்பாக பிரதமர் தெரிவித்த கருத்துக்கள்: "இந்தியாவின் நீண்ட பாரம்பரியம், சுதந்திரப் போராட்டத்தின் வடுக்கள், சுதந்திர இந்தியாவின் அற்புதமான வளர்ச்சி ஆகியவற்றை வரலாறு கண்டிருக்கிறது என்பதே உண்மை. அதேபோல, சுதந்திரப் போராட்டத்தில் பல்வேறுபட்ட போராட்டங்கள் மற்றும் நிகழ்வுகளிலிருந்து செய்திகளையும், ஊக்குவிப்புகளையும் பெற்றுள்ளோம். இது இந்தியாவை முன்னோக்கிச் செல்ல வைத்துள்ளது.**

> "எந்தவொரு தீர்மானமும் கொண்டாட்டங்களின்றி நிறைவுபெறாது. தீர்மானமானது கொண்டாட்டம் என்ற வடிவத்துக்கு வரும்போது, அதனுடன் லட்சக்கணக்கானோரின் உறுதியும், சக்தியும் சேர்கிறது. சுதந்திரமடைந்ததன் 75 ஆண்டுகள் கொண்டாட்டத்தை 130 கோடி மக்களின் பங்களிப்புடன் செய்ய வேண்டும். இந்த கொண்டாட்டத்தின் முக்கியமான பகுதியே மக்களின் பங்களிப்பு தான். இந்த பங்களிப்பானது, 130 கோடி மக்களின் உணர்வுகள், ஆலோசனைகள், கனவுகள் ஆகியவற்றைக் கொண்டது."
>
> **பிரதமர் நரேந்திர மோடி**



# ஜல்காரிபாய்

## ராணி லட்சுமிபாயின் மறுஉருவம்

ஜான்சியின் ராணி லட்சுமிபாய் குறித்த அறிமுகம் தேவையா? காலனி ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தின் அடையாளம் அவர். காலனி ஆதிக்க சக்திகளுக்கு எதிராக தீரத்துடன் போரிட்டவர். ஆங்கிலேயர் ஆட்சியின் அடித்தளத்தையே ஆட்டுவித்தவர். வீரத்தின் அடிப்படையில் துர்காவின் அடையாளமாக திகழ்ந்த ராணி லட்சுமிபாயின் வெற்றி மற்றும் பெயருக்கு காரணமாக இருந்தவர் ஜல்காரி பாய். ராணி லட்சுமிராயின் ராணுவப் படையில் பெண் பிரிவுக்கு கமாண்டராக இருந்தவர் ஜல்காரி பாய். ஏழை மற்றும் தலித் குடும்பத்தில் பிறந்த ஜல்காரிபாய், லட்சுமிபாயைப் போன்ற தோற்றம் கொண்டவர். உண்மையில், ஆங்கிலேயரை ஏமாற்றுவதற்காக ராணியைப் போன்று வேடம்தரித்து, போர்க்களத்துக்குள் நுழைவார். கோட்டையில் லட்சுமிபாய் சிக்கிக் கொண்டபோது, அவரை வெளியேறவைக்கும் செயல்களை செய்தவர் ஜல்காரிபாய். கோட்டையை ஆங்கிலேயர் சுற்றிவளைத்தபோது, லட்சுமிபாயிடம் கோட்டையை விட்டு வெளியேறி, படைகளை திரட்டுமாறு கூறினார். ராணி போன்று ஆடை அணிந்துகொண்டு, ஆங்கிலேயர் படைகளுடன் வீரத்துடன் போரிட்டார். பின்னர் ஆங்கிலேயர்களிடம் பிடிபட்டார்.அந்தமான் மற்றும் நிக்கோபாரில் உள்ள போர்ட் பிளேயருக்கு (காலா பானி) அனுப்பி வைக்கப்பட்ட அவர், 1876 ஆம் ஆண்டு டிசம்பர் 29 அன்று வீர மரணம் அடைந்தார். அவரை கவுரவப்படுத்தும் வகையில் நினைவு தபால் தலையை ஜூலை 22, 2001-ல் அரசு வெளியிட்டது. ஜல்காரிபாயின் வீரம், இன்னும் பண்டல்காண்ட் மற்றும் பாஸ்டர் பகுதி மக்கள் மனதில் இருந்துகொண்டிருக்கிறது.



# பீமா

## நிமார் பகுதியின் ராபின்ஹுட்

மத்தியப்பிரதேச மாநிலத்தில் உள்ள கர்கோன் பகுதி, அதன் அழகு மற்றும் ஆடம்பரத்தால் பெயர்பெற்றது. இதற்கு பழங்குடியின தலைவர் பீமா நாயக்கின் வீரத்துடன் தொடர்பு உண்டு. 1857-ல் பீமா நாயக் தலைமையில் இந்தியாவின் முதலாவது சுதந்திரப் போராட்டம், இங்கிருந்தே தொடங்கியது. இது ஆங்கிலேயர் ஆட்சியின் வேரையே ஆட்டுவித்தது. பிராந்தியத்தில் உள்ள பழங்குடியினர்களை ஒருங்கிணைத்து, பிரிட்டிஷாரின் கொடுமைகளுக்கு எதிரான இயக்கத்துக்கு தலைமை வகித்தார். அவரது ஆதிக்கம், மத்தியப்பிரதேசத்தின் பர்வானி பகுதியிலிருந்து மகாராஷ்டிராவின் கந்தேஷ் பகுதி வரை விரிவடைந்திருந்தது. 10 ஆயிரம் வீரர்களைக் கொண்ட இவரது படை, ஆங்கிலேயர்களின் துப்பாக்கிகளுடன் வில் மற்றும் அம்பு மூலம் போரிட்டது. பீமாவை கைதுசெய்ய முடியாத பிரிட்டிஷார், சதி செயல்களில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இறுதியாக, அவருக்கு நெருக்கமானவர்கள் அளித்த தகவல் மூலம், பீமாவை பிரிட்டிஷார் கைதுசெய்தனர். பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார். பீமா நாயக்கின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஏராளமான சம்பவங்கள் உண்டு. இதனை கர்கோன் பகுதி மக்கள் பெருமையுடன் கூறுவர். ஆங்கிலேயர்களின் கருவூலத்தை கொள்ளையடித்து ஏழை மக்களுக்கு பகிர்ந்து அளித்தார். இதன் காரணமாக, இவரை நிமர் பகுதி ராபின்ஹுட் என்று அழைப்பார்கள். ■



# தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சியின் மூலம் இளம் மாணவர்களின் மனங்களை ஊக்குவித்தார் பிரதமர்

*சர்வதேச தலைவராக அரசியல் கடமைகளை நிறைவேற்றும் பிரதமர் நரேந்திர மோடி தற்போதுள்ள நிச்சயமற்ற தருணத்தில் தேர்வுகள் மற்றும் பாடச்சுமைகளால் நிர்பந்தங்களை எதிர்கொள்ளும் குழந்தைகளுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்கிறார். நான்காவது ஆண்டாக நடைபெறும் 'தேர்வுக்கு தயாராவோம்' நிகழ்ச்சியில் பிரதமர் ஆற்றிய உரை மாணவர் சமுதாயத்திற்கு ஊக்கமளிப்பதில் அவருக்கு இருக்கும் தங்கு தடையற்ற உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாக இருந்தது. தனக்கு இருக்கும் மிக நீண்ட அனுபவத்தின் அடிப்படையில் தனது ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் பகிர்ந்துகொண்டார் பிரதமர்.*

நான்காவது ஆண்டாக நடைபெற்ற தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பிரதமர் நரேந்திர மோடி, மாணவர்கள், அவர்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் நண்பராகவும், வழிகாட்டியாகவும் கலந்துரையாடினார். தேர்வுகளை தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்காக மாணவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதே அவரது நோக்கம்.

அதிக அளவில் மதிப்பெண்ணுடன் படிப்பை முடிப்பது மட்டுமே வெற்றியின் அடையாளமா? ஒவ்வொரு முறையும் மாணவர் மத்தியில் எழும் கேள்விகளில் ஒன்றுதான் இது. தற்போதைய காலத்தில், தேர்வு முடிவுகள் மட்டுமே, மாணவர்களின் வெற்றியை தீர்மானிக்கும் காரணியாக உள்ளது. எனினும், இந்த நிலை தற்போது உண்மையானதாக மாறி வருகிறது. தேர்வு என்பது நெருக்கடியை ஏற்படுத்திக் கொள்வதாக இல்லை. பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு, புதிய சவால்களை எதிர்கொள்வதற்கு தன்னைத்தானே தயார்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாகவே அமைந்துள்ளது.

தொடர்ந்து நான்காவது ஆண்டாக தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், "இதுவே இறுதியானது என்று தேர்வுகளை மாணவர்கள் கருதக் கூடாது. இது வாழ்க்கையின் ஒரு பகுதிதான். வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள நாம் முழுமையாக தயார்படுத்திக் கொள்ள வேண்டும்," என்றார். கொரோனா பரவல் நெருக்கடி காரணமாக, இந்த நிகழ்ச்சி முதன்முறையாக காணொலிக்காட்சி மூலம் நடத்தப்பட்டது. இதில், லட்சக்கணக்கான மாணவர்கள், அவர்களது பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். உண்மையான நண்பர் என்ற நிலைக்கு மாறிய பிரதமர், மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் உரையாற்றும்போது, "ஒரே சிந்தனையை நாம் பகிர்ந்துகொள்கிறோம் மற்றும் அதே தீர்மானத்தை நாம் கொண்டுள்ளோம்," என்றார்.

மேலும் அவர், "நல்ல புத்தகங்கள், திரைப்படங்கள், கதைகள், கவிதைகள், வார்த்தைகள், ஆரோக்கியமான அனுபவங்கள் ஆகியவை பயிற்சிக்கான காரணிகளாக உள்ளன. இது தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சி. ஆனால், தேர்வு தவிர மேலும் பல்வேறு விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க உள்ளோம்," என்றார்.

> மனதுக்குள் உள்முகமாக சென்றுவிட்ட மற்றும் சிந்தனையின் ஓர் அங்கமாக மாறிவிட்ட செயல்கள் எப்போதும் நினைவைவிட்டு நீங்காது. மனப்பாடம் செய்வதைவிட உள்முகமாக கிரகித்துக் கொள்ள வேண்டும்.
>
> பிரதமர் நரேந்திர மோடி

**தேர்வுகள் ரத்துசெய்யப்பட்டன, எனினும், தேர்வுக்கு தயாராவோம் நிகழ்ச்சியின் மூலம் முக்கிய பாடங்கள் கிடைத்தன**

கொரோனா தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில், சிபிஎஸ்இ தேர்வுகள் தொடர்பான உயர்நிலைக் குழுக் கூட்டத்துக்கு பிரதமர் தலைமை வகித்தார். அப்போது, பாதுகாவலராக மாறிய அவர், மாணவர்களின் உடல்நலன் தொடர்பான பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசினார். தேர்வை ஒத்திவைப்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்ட போதிலும் மாணவர்களின் வாழ்க்கைக்கு ஆபத்தாக முடியும் என்று அவற்றை நிராகரித்தார். தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. எனினும், ஒரு வாரம் முன்னதாக, தனது வருடாந்திர தேர்வுக்கு தயாராவோம் என்பது குறித்த நிகழ்ச்சியில் பேசிய அவர், தேர்வுகாலத்தில் மனநெருக்கடியைப் போக்குவது குறித்த தனது கருத்துக்களை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார். தங்களது உறுதியான எதிர்காலத்துக்கான வாழ்க்கைமுறையை தேர்வுசெய்து கொள்வது குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் பணியை மேற்கொண்டார். இது அவர்களது கனவை நனவாக்குவதற்கு உதவும்.

# மாணவர்களுக்கு தனது கருத்துக்களை பகிர்ந்துகொண்டார் பிரதமர்

## அச்சமில்லாமலும் மன அழுத்தமில்லாமலும் தேர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது?



**தேர்வைக் கண்டு அச்சம் கொள்ள வேண்டாம்:** தேர்வுகள் முதல்முறையாகவோ அல்லது திடீரெனவே நடைபெறுவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் மார்ச்-ஏப்ரல் மாதங்களில் தேர்வுகள் நடைபெறுகின்றன. தேர்வுகளைக் கண்டு அச்சப்படுவதைப் போன்று தோன்றும். உண்மையில், ஆழமாக சிந்தித்துப் பார்த்தால், நாம் தேர்வுசெய்துள்ள பாடப்பிரிவில் கிடைக்கும் முடிவுகளில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது.

**நெருக்கடியை தேர்வுக்கூடத்துக்கு வெளியே விட்டுச் செல்லுங்கள்:** போதிய அளவில் தயார்படுத்திக் கொண்டுள்ளோம் என்பதை மாணவர்கள் தங்களுக்குள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பதற்றத்தை தேர்வுக் கூடத்துக்கு வெளியேயே விட்டுச் செல்ல வேண்டும். தேர்வுக் கூடத்தில் இருக்கும்போது, சரியான விடைகளை எழுதுவதிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

**ஒவ்வொரு பாடத்துக்கும் சமமான நேரத்தை ஒதுக்குங்கள்:** மாணவர்கள் தங்களது நேரத்தையும், சக்தியையும் அனைத்து பாடங்களுக்கும் சமமாக ஒதுக்க வேண்டும். படிப்பதற்கு உங்களிடம் இரண்டு மணிநேரம் உள்ளது என்றால், அதில், அனைத்துப் பாடங்களுக்கும் சமமான அளவை பகிர்ந்துகொள்ள வேண்டும்.

**தீர்மானம் தெளிவாக இருக்க வேண்டும்:** கனவை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானம் மிகவும் முக்கியமானது. உங்களது வாழ்க்கையின் தீர்மானமாக எந்த கனவை எடுத்துக் கொள்கிறீர்கள்? அந்தத் தீர்மானத்தை முடிவுசெய்த பிறகு, உங்களுக்கான பாதை மிகவும் தெளிவானதாக மாறும்.

**நெருக்கடி இல்லாமல் இருங்கள்:** உங்களது வாழ்க்கையின் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்கான அளவீடு என்பது பாடங்கள் மட்டுமே அல்ல. வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதே உங்களது வாழ்க்கையை வடிவமைக்கும். எனவே, சமூகம் மற்றும் உங்களது பெற்றோரின் நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

**புரட்சியாளர்களிடமிருந்து ஊக்குவிப்பை எடுத்துக் கொள்ளுங்கள்:** நாட்டின் சுதந்திரப் போராட்டம் தொடர்பாக உங்களது மாநிலங்களில் நடந்த 75 நிகழ்வுகளைக் கண்டறியுங்கள். இது எந்தவொரு புரட்சியாளர் தொடர்பானதாகவும் இருக்கலாம். இந்த சம்பவங்களை உங்களது தாய்மொழியில் எழுதுங்கள்.

**ஒட்டுமொத்த ஆண்டுக்குமான திட்டங்களை தயார்செய்யுங்கள்:** டிஜிட்டல் முறையில் ஒட்டுமொத்த ஆண்டுக்கும் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் குறித்த திட்டங்களை தயார்செய்யுங்கள். இதற்காக உங்களது ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டிகளிடம் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை கேளுங்கள்.

**ஓய்வுநேரமே சொத்து:** ஓய்வாக இருக்கும் நேரம், வீணானது என்று கருத வேண்டாம். இதுவே வாய்ப்பாக அமையும். ஏனெனில், உங்களுக்கு ஓய்வுநேரம் இல்லாவிட்டால், உங்களது வாழ்க்கை இயந்திரமயமாகிவிடும்.

**சுயபயிற்சிக்கு உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்:** வேலைவாய்ப்புகளுக்கான திறன்களைப் பெறுவதற்கு மெட்ரிகுலேஷன் மற்றும் நடுநிலைபள்ளி மாணவர்களின் காலடித்தடங்களை பின்பற்றுங்கள். உங்களை சுற்றிலும் உள்ள வாழ்க்கையில் உள்ள மாற்றங்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப உங்களுக்கான பயிற்சியை தொடங்குங்கள்.

**பாடங்களைத் தேர்ந்தெடுத்து, உங்களது சிந்தனைக்கான இடத்தை கண்டறியுங்கள்:** எந்தவொரு பாடத்தையும் நீங்கள் பிடித்ததாக மாற்றிக் கொண்டால், உங்களது சிந்தனையின் ஓர் அங்கமாக அது மாறிவிடும். இது உங்களது நினைவிலிருந்து மறையாது.

### சுயசார்பு இந்தியாவை உருவாக்குவதே வாழ்க்கையின் மந்திரம்:

நான் இன்று உங்களுக்கு மிகவும் முக்கியமான தேர்வை தயார்செய்ய விரும்புகிறேன். இந்தத் தேர்வில் ஒவ்வொருவரும் அதிக மதிப்பெண்களுடன் தேர்ச்சிபெறுவீர்கள். இது இந்தியாவை சுயசார்புகொண்டதாக மாற்றுவதற்கான தேர்வு. இதில், உள்ளூர் பொருட்களுக்கு நாம் மதிப்பு கொடுத்து பயன்படுத்த வேண்டும்.



### நேரத்தை கையாள்வது மற்றும் செயல்முறை அறிவு குறித்து ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும்

**நேரத்தை சரியாக கையாள்வதற்கான உத்திகளை கற்பியுங்கள்:** நேரத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கான திறன்கள் மற்றும் வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். பாடத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே செல்லாமல், சரியான வழிகாட்டுதல்களை வழங்குங்கள்.

**செயற்கையாக இல்லாமல், நடைமுறைக்கு ஏற்ப செயல்படுவது குறித்து பகிர்ந்துகொள்ளுங்கள்:** உங்களது அனைத்து அறிவுரைகளையும் குழந்தைகளால் கேட்டுக் கொள்ள முடியாமல் இருக்கலாம். தங்களது பெற்றோரின் செயல்களே அதிக அளவில் குழந்தைகளுக்கு வழிகாட்டியாக உள்ளன. இதனை பயன்படுத்தி ஊக்குவியுங்கள். எனவே, செயற்கையாக இருந்துகொள்ளாமல், சிறந்த செயல்பாடுகள் மூலம், குழந்தைகள் மனதில் நல்ல பழக்கங்களை விதைக்க முடியும்.

## தேர்வுக்கு தயாராவோம், பெற்றோரும் பாதுகாவலரும் வழிகாட்டியாக மாற வேண்டும்



**உங்களது குழந்தைகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தாதீர்கள்:** வாழ்க்கை என்பது மிக நீண்டது. அதில், மிகவும் சிறிய நிறுத்தம் தான் தேர்வுகள். குழந்தைகளுக்கு எந்தவொரு நெருக்கடியையும் நாம் ஏற்படுத்தக் கூடாது. இந்த நெருக்கடி நீங்கிவிட்டால், தேர்வின் நெருக்கடி என்பது மாணவர்களுக்கு ஏற்படாது. வீடுகளில் குழந்தைகளுக்கு நெருக்கடியில்லாத சூழலை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். இது அவர்கள் மத்தியில் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும்.

**குழந்தைகளுக்கு பெற்றோரே முன்மாதிரி:** மிகவும் அற்புதமானவர்கள் குழந்தைகள். அவர்கள் என்ன செய்யச் சொல்கிறோமோ அதனை பின்பற்றாமல் இருக்கலாம். ஆனால், பெற்றோரை அவர்கள் மிகவும் உன்னிப்பாக கண்காணிப்பார்கள். நீங்கள் என்ன செய்தாலும் அதனை பின்பற்ற முயற்சி செய்வார்கள்.

**உங்களது குழந்தைகளுக்கு பிடித்தது மற்றும் பிடிக்காததை புரிந்துகொள்ளுங்கள்:** உங்களது குழந்தைகளுடன் தொடர்ந்து இணைந்திருங்கள். அவர்களுக்குப் பிடித்தது, பிடிக்காதது ஆகியவற்றை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். இது சந்ததிகளுக்கு இடையேயான இடைவெளியை சரிசெய்ய உதவும்.

**உங்களது குழந்தைகள், அவர்களுக்குள்ளாகவே ஒளியூட்டிக் கொள்வார்கள்:** ஒரு விளக்கு மற்றதை ஒளியூட்டும். உங்களது குழந்தையிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் ஒளியானது, அவர்களுக்கு உள்ளிருந்தே வர வேண்டும். உங்களது முயற்சியால் மட்டுமே இது நடைபெறும்.

**உங்களது குழந்தைகளை அச்சமில்லாதவர்களாக மாற்றுங்கள்:** தேர்வு முடிவுகளின் அடிப்படையிலேயே குழந்தைகளின் முடிவு இருக்கும் என்பது போன்ற சூழலை ஏற்படுத்தாதீர்கள். இது தவறான வழி. இது எதிர்மறையான ஊக்குவிப்பை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு உண்டு.

**குழந்தைகளுக்கு பாரம்பரிய உணவுகளின் மீதான ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்:** நமது பாரம்பரிய உணவுகளைக் கண்டு நாம் பெருமைகொள்ள வேண்டும். அதன் தரம் மற்றும் பயன்கள் குறித்து விவாதிக்க வேண்டும்.

**உங்களது குழந்தைகளுக்கு நெருக்கமானவர்களாக மாறுங்கள்:** உங்களது புதிய வாழ்க்கைப் பயணம் தொடர வேண்டும் என்று நீங்கள் விரும்பினாலும், வயதின் தாக்கத்தை குறைத்து இளமையாகவே இருக்க விரும்பினாலும், உங்களது குழந்தைக்கும் உங்களுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்து, அவர்களுடன் நெருக்கமாக இருங்கள். இது பெருமளவில் உதவும். ■




## ஆலோசனையின்போது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த பிரதமர்

**தேர்வு குறித்த அச்சத்தை எவ்வாறு போக்குவது? என்பது குறித்து பிரதமரிடம் ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த பல்லவி என்ற மாணவியும், கோலாலம்பூரிலிருந்து அர்பன் பாண்டே என்ற மாணவரும் கேள்வி எழுப்பினர்**

இது தேர்வு பயம் மட்டுமானது இல்லை, இது வெளிப்புற சூழலை ஏற்படுத்துவதும் ஆகும். இதன் காரணமாகவே, இதுதான் அனைத்தும் என்று நீங்கள் உணர்கிறீர்கள். இது பிறப்பிலிருந்தே வருகிறது. இது உங்களை அதீத உணர்வு கொண்டவர்களாக மாற்றுகிறது. வாழ்க்கை என்பது மிகவும் நீண்டது. உங்களது வாழ்க்கையில் ஒரு சிறு பகுதிதான் தேர்வுகள். குழந்தைகளுக்கு பெற்றோர், ஆசிரியர்கள், பொதுமக்கள் என யாரும் நெருக்கடி கொடுக்கக் கூடாது. ஒருவரை பரிசோதிப்பதற்கான வாய்ப்பாக தேர்வை எடுத்துக் கொள்ள வேண்டும். எனினும், வாழ்க்கையைவிட பெரிதானதாக மாற்றிவிடக் கூடாது. தங்களது குழந்தைகள் படிப்பதற்கு உதவ விரும்பும் பெற்றோர், குழந்தைகளின் பலம் மற்றும் பலவீனங்களை தெரிந்துகொள்ள வேண்டும்.

**தற்போதைய காலத்தில், குழந்தைகளை வளர்ப்பது என்பது பெற்றோருக்கு மிகவும் நெருக்கடியானதாக உள்ளது. இதற்கு மாறிவரும் வாழ்க்கைமுறையே காரணம். இந்த சூழலில், நமது குழந்தைகளின் செயல்பாடு, பழக்கவழக்கம், குணநலன் ஆகியவை சிறப்பாக இருப்பதை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்?**

தனது குழந்தையை வளர்ப்பதில் ஆர்வம் காட்டும் தந்தையாக இந்தக் கேள்வியை பிரவீன் குமார் என்பவர் எழுப்பினார். ஆனால், இதற்கு பதிலளிப்பது எனக்கு மிகவும் சிரமமானது. இதுகுறித்து அசைபோடுமாறு உங்களுக்கு அறிவுரை கூறுகிறேன். நீங்கள் பின்பற்றும் வாழ்க்கை முறையை உங்களது குழந்தையும் பின்பற்ற வேண்டும் என்பது சரியானது இல்லை. இதிலிருந்து சிறிதளவு விலகினாலும், இதில் வீழ்ச்சி ஏற்பட்டதாக நாம் கருதுகிறோம். புதுமை தொழில்நுட்பத்துடன் கூடிய நிறுவனங்களைத் தொடங்கிய இளைஞர்களுடன் நான் ஒரு முறை பேசியது நினைவில் இருக்கிறது. வங்காளத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் தனது அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். சொந்தமாக புதிய நிறுவனத்தைத் தொடங்குவதற்காக தனது வேலையைவிட்டு விலகினார். இதனை அவரது தாய் அறிந்துகொண்டபோது, பேரிடியாக கருதினார். அவரது தாய்க்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. எனினும், தனது தொழிலை வெற்றிகரமாக நடத்தினார். உங்களது விருப்பத்துக்கு ஏற்ப, உங்களது குழந்தைகளை கட்டுப்படுத்த வேண்டுமா என்று நீங்கள் சிந்திக்க வேண்டும். அடிப்படை மதிப்புகளை நமது குடும்பங்கள் மற்றும் பாரம்பரியங்கள் எவ்வாறு வலுப்படுத்தும் என்பதை நாம் அடையாளம் காண வேண்டியது அவசியம்.

# உற்பத்தி மையமாக இந்தியா மாற வேண்டும்; இளைஞர்களுக்கு ஒரு கோடிக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும்

*இந்தியாவை உற்பத்தி மையமாக மாற்றும் நோக்கில், உற்பத்தி அடிப்படையில் ஊக்கத்தொகை வழங்கும் 13 திட்டங்களை மத்திய அரசு தொடங்கியுள்ளது. இது உணவு பதப்படுத்துதல், மருந்துப் பொருட்கள், தகவல் தொழில்நுட்ப பொருட்கள் உள்ளிட்ட துறைகளுக்கு வழங்கப்படுகிறது. இதன்மூலம், அடுத்த 5 ஆண்டுகளில் கூடுதலாக 50,000 கோடி டாலர் அளவுக்கு பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். நாட்டில் இளைஞர்களுக்கு ஒரு கோடிக்கும் மேலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி, நாட்டில் வேலைவாய்ப்பு சூழலை இந்தத்திட்டம் ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

அரசின் முதன்மைத் திட்டமான சுயசார்பு இந்தியா இயக்கத்தின் ஓர் அங்கமாக இது திகழ்கிறது. உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தின்கீழ், ரூ.2 லட்சம் கோடி வழங்கப்பட உள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் 52,000 கோடி அமெரிக்க டாலர் அளவுக்கு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 9 துறைகளில் உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. இதுவரை தொழில் நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களை கவர்ந்திழுத்துள்ளது. மற்ற 4 துறைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை திட்டத்தின் பின்னணி, பலன்கள்

- கடந்த 7 ஆண்டுகளில் உற்பத்தி திறனை அதிகரிக்கவும், உற்பத்தியாளர்கள் மிகவும் தீவிரப் பங்களிப்பை செய்ய அனுமதிக்கவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும் அதிக அளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுயசார்பு இந்தியா இயக்கத்தின்கீழ், முதலாவது நடவடிக்கையாக, உற்பத்தி துறையை ஊக்குவிக்கும் வகையில், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.
- உற்பத்தித் துறையில் உலகின் தலைசிறந்த இடங்களில் ஒன்றாக இந்தியாவை மாற்ற இந்தத் திட்டம் வழிவகை செய்கிறது. இதன்மூலம், உற்பத்தியில் உலகுக்கே தலைமைவகிக்கச் செய்வதுடன், சர்வதேச அளவில் அதிகஅளவில் போட்டி நிறைந்ததாக மாற்றும்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தி துறையின் பங்களிப்பை 25 சதவீதம் அளவுக்கு அதிகரிக்கும் வகையில், ஊக்கத்தை அளித்து வலுவான தொழில் துறை கட்டமைப்பை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். உற்பத்தி துறையில் இந்தியாவை சுயசார்பு கொண்டதாக மாற்றவும், "இந்தியாவில் தயாரிப்போம்", "உலகுக்காக தயாரிப்போம்" என்ற இரண்டு இலக்குகளில் கவனம் செலுத்தி ஏற்றுமதியை அதிகரிக்கவும் இது வழிவகை செய்யும். உற்பத்தியில் போட்டித்திறன் கொண்டதாகவும், முதலீட்டுக்கு ஏற்ற வகையிலும், உலகளாவிய விநியோக சங்கிலியில் ஒருங்கிணைந்த பகுதியாக இந்தியாவை மாற்றி இந்தியாவை உலகப் பொருளாதாரத்தின் வல்லமை சக்தியாக மாற்றும் திறனை உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டம் ஏற்படுத்தும். ■

### மத்திய அமைச்சரவை ஏற்கனவே கீழ்க்காணும் 9 துறைகளுக்கு ஊக்கத் தொகை திட்டத்துக்கு ஒப்புதல்



**உணவு பதப்படுத்துதல் தொழில் துறை**

திட்ட மதிப்பு ரூ.10,900 கோடி | சுமார் 2.5 லட்சம் வேலைவாய்ப்புகள் ஏற்படும்



**மருந்துப் பொருட்கள் துறை**

திட்ட மதிப்பு ரூ.15,000 கோடி | சுமார் ஒரு லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்



**தகவல் தொழில்நுட்ப பொருட்கள் உற்பத்தி**

திட்ட மதிப்பு ரூ.7,350 கோடி | சுமார் 1.8 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும்



**சூரிய மின்சார உற்பத்தி கட்டமைப்புகள்**

திட்ட மதிப்பு ரூ.4,500 கோடி | 1.5 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும்




**தொலைத்தொடர்பு உற்பத்தி**

திட்ட மதிப்பு ரூ.12,195 கோடி | 40,000 வேலைவாய்ப்புகள் உருவாகும்



**ஏசி மற்றும் எல்இடி அல்லது மின்னணு சாதனங்கள்**

திட்ட மதிப்பு ரூ.6,238 கோடி | 4 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும்

### கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்ட ஊக்கத் தொகை திட்டங்கள்

ரூ. 6,940 கோடி
மருந்துப் பொருட்கள் துறை

ரூ. 40,951 கோடி
மின்னணு சாதனங்கள் உற்பத்தி

ரூ. 3,420 கோடி
மருத்துவ உபகரணங்கள்

# நம்பிக்கை ஒளிர்கிறது

## அனைவரும் பெறக் கூடிய வகையில் தூய எரிசக்தி ஆற்றலை உருவாக்குதல்



உஜ்வாலா திட்டத்தால் ஏற்பட்ட தாக்கம் அனைவருக்கும் தூய்மையான எரிசக்தி கிடைப்பதை வழி செய்வது மட்டுமல்லாமல், இந்த முறையின் மூலம் முன்னெப்போதும் இல்லாத வகையில் சாமானிய மக்களின் வாழ்வு எளிமையாவதுடன் அவர்களது ஆரோக்கியம் மேன்மையடைந்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. முன்னதாக இதுபோன்ற பலன்கள் உயர்மட்ட நகர்புற மக்களுக்கு மட்டுமே கிடைத்தன. கடந்த ஆறு ஆண்டுகளில் பிரதமரின் உஜ்வாலா என்ற புரட்சிகரமான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு 8 கோடி வீடுகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டதன் வாயிலாக 99.6 சதவீத குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு கிடைத்துள்ளது. கானா, வங்கதேசம் போன்ற நாடுகளும் இந்தியாவின் வளர்ச்சிப் பாதையை பின்பற்றுவது, இந்தத் திட்டத்தின் வளர்ச்சியை எடுத்துரைக்கிறது.



“எனக்கு, சிறுவயது கதையொன்று நினைவுக்கு வருகிறது. பள்ளிக்குச் சென்ற தாய்மார்கள் மற்றும் சகோதரிகள் நீங்கள் அனைவரும் இதைப் படித்திருப்பீர்கள். முன்ஷி பிரேம்சந்த் நம் நாட்டின் மிகவும் கற்றறிந்த எழுத்தாளர். அவரது மிகவும் பிரபலமான கதை - இட்கா. இது 1933 ஆம் ஆண்டில் அவர் எழுதியது. இந்த கதையின் முக்கிய கதாபாத்திரம் ஹமீத் என்ற ஒரு சிறுவன். அவன் ஒரு பொருட்காட்சிக்கு செல்கிறான். அங்கு இனிப்புகள் கூடச் சாப்பிடாமல், தன் பாட்டிக்காக சமையல் செய்ய உதவும் இடுக்கி போன்ற பொருளை வாங்குகிறான். தன் பாட்டியின் கைகள் தீ நாக்குகளில் பட்டு எரியாமல் இருப்பதற்காக அச்சிறுவன் அதை வாங்குகிறான். முன்ஷி பிரேம்சந்தின் கதை இன்றும் எனக்கு உத்வேகமளிக்கிறது. ஹமீத் என்ற ஒரு சிறுவன் இப்படி ஏதாவது செய்ய முடியும் என்றால் நாட்டின் பிரதமர் ஏன் அதைச் செய்ய முடியாது? என்று நான் கருதுகிறேன்.

- **பிரதமர் நரேந்திர மோடி** உஜ்வாலா பயனாளிகளுடன் உரையாடிய போது..”

“முன்னதாக, எரிவாயு அடுப்பு இல்லாதபோது, சமையலறைகளில் விறகுகளை எரிப்பதற்காக பாதி நாள் செலவிடப்பட்டது. மழைக்காலங்களில், மண் அடுப்பு பெரும்பாலும் தண்ணீரால் நிரம்பி விடும். விறகுகளும் நனைந்து போகும், அவை எரியாது.

மழை பெய்யும் காலங்களில் குழந்தைகளுக்கு உணவு உண்ணவும் முடியாது. பட்டினி கிடக்க நேரிடும். “என்னால் என் குழந்தைகளுடனும், குடும்பத்தினருடனும் நேரம் செலவிட முடியாமலிருந்தது. இப்போது எங்களுக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டிருப்பதால், மழைக்காலத்தில் எனக்கு எந்த பிரச்னையையும் இல்லை, எனது குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும் நேரம் ஒதுக்க முடிகிறது” என்று ஒடிசாவின் மயூர்பஞ்ச் பகுதியைச் சேர்ந்த சுஷ்மிதா, அமைதி தவழும் முகத்துடன் கூறுகிறார். சுஷ்மிதாவின் கதை தனிப்பட்ட கதையல்ல.

“இது நம் நேரத்தை மிச்சப்படுத்துகிறது. ஜம்மு-காஷ்மீரில் உள்ள அனந்த்நாகின் அர்ஜுமான் அரா கூறுகையில், “நாங்கள் முன்பு அடுப்பெரித்துக் கொண்டிருந்த போது குழந்தைகள் நெருப்பின் அருகே செல்லக்கூடும் என்ற ஆபத்து இருந்தது”. “புகை காரணமாக கருப்பு நிறமாக மாறும் பாத்திரங்களை சுத்தம் செய்ய எங்களுக்கு நிறைய நேரம் தேவைப்பட்டது. ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டால், நாள் முழுவதும் மருத்துவமனையில் கழிந்தது, இதன் விளைவாக, அன்றைய தினம் ஒரு வேளை உணவைக் கூட எங்களால் சமைக்க முடியவில்லை. ஆனால் உஜ்வாலா வாயு எங்கள் வாழ்க்கையை எளிதாக்கி விட்டது; குறிப்பாக இந்த ரமலான் மாதத்தில். இப்போதெல்லாம் காலையில் உணவை சமைத்து சாப்பிட 15-30 நிமிடங்களே ஆகின்றன. முன்பெல்லாம், நாங்கள் உண்ணா நோன்பு விரதம் இருந்த நாட்களில், உணவு தயாரிப்பதற்காக இரவு 1 மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டியிருந்தது.

நாங்கள் மரம் சேகரிக்க வெளியே செல்ல வேண்டியிருந்ததால் மாலை வேளைகளிலும் பிரச்னைகள் இருந்தன. குழந்தைகள் புகை காரணமாக நிறைய கஷ்டப்பட வேண்டியிருந்தது, அவர்களால்

## குறிப்பிட்ட கால வரையறைக்கு முன்னதாகவே திட்டமிடப்பட்ட இலக்கு எல்லைகளை அடைதல்

### எட்டு கோடி இணைப்பு



முன்பு சமையல் எனக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. ஆனால் சிலிண்டரும், அடுப்பும் பெற்ற பிறகு எனது சக்தி மிச்சப்படுகிறது.

ஆயிஷா ஷேக், அவுரங்காபாத், மகாராஷ்டிரா
(செப்டம்பர் 7, 2019)

### ஐந்து கோடி இணைப்பு



இப்போது புகை என் கண்களுக்குள் புகாது. சிலிண்டர் கொடுத்ததற்கு நன்றி மோடி அவர்களே...

தக்தீரன், டெல்லி
(ஆகஸ்ட் 3, 2018)

### முதலாவது இணைப்பு



முன்னர், நான் சமைக்கும் போது புகை என் கண்களுக்குள் புகுந்து விடும். நான் சமையலுக்கு விறகு கொண்டு வரவும் வேண்டும். உஜ்வாலா என் வாழ்க்கையையும், என் குடும்பத்தின் வாழ்க்கையையும் மாற்றி விட்டது.

குடி தேவி, பல்லியா, உத்தரப்பிரதேசம்
(மே 1, 2016)

प्रधानमंत्री उज्ज्वला योजना
स्वच्छ ईंधन.. बेहतर जीवन

**திட்டம்**

1 மே, 2016 அன்று, திட்டம் பல்லியாவிலிருந்து தொடங்கப்பட்டது

இத்திட்டத்தின் மொத்த சமூக முதலீடு **ரூ .12800 கோடி** (அமெரிக்க டாலர் $ 1.8 பில்லியன்).

**8 கோடி** இலவச இணைப்புகள் வழங்கப்பட வேண்டும் என்ற இலக்கு, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னதாகவே, 2019 செப்டம்பர் மாதம் 7 ஆம் தேதி எட்டப்பட்டது.

**27.12 கோடி சந்தாதாரர்கள் பஹல் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர், இதுவரை**

**ரூ .1,37,483 கோடி**

**மானியம் நேரடியாக டிபிடிஎல் மூலம் வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.**

- 'கிவ் இட் அப்' இயக்கத்தில் 1.08 கோடி மக்கள் இணைந்தனர்.
- சிலிண்டரை மீண்டும் நிரப்புவதற்கான உற்சாகம், 80 சதவீதத்திற்கும் அதிகமான பயனாளிகள் முதல் பயன்பாட்டிற்குப் பிறகு இரண்டாவது முறையாக மறு சிலிண்டர் எடுத்தனர்.

**38 %**

**8 கோடி பயனாளி குடும்பங்களில், 3.05 கோடி (38%) எஸ்சி / எஸ்டி. ஷெட்யூல்டு வகுப்பு/ஷெட்யூல்டு பழங்குடியினர். 38%**

நிம்மதியாகத் தூங்கவும் முடியவில்லை. இப்போது எங்கள் நேரம் கணிசமாக சேமிக்கப்பட்டுள்ளது. அதனால், நான் தையல் வேலையைக் கற்றுக் கொண்டேன், இப்போது நான் சம்பாதிக்கிறேன், இந்தப் பணம் எரிவாயு சிலிண்டர்களை வாங்க எங்களுக்கு உதவுகிறது" சத்தீஸ்கரில் ராய்ப்பூரைச் சேர்ந்த மீனா நிர்மலாகர் எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தத் தொடங்கியதிலிருந்து அவரது வீட்டுச் செலவுகள் குறைந்து விட்டன, அக்கம் பக்கத்திலுள்ள சுற்றுச்சூழலும் மேம்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ருத்ரம்மாவைப் பொறுத்தவரை, ஒரு எரிவாயு அடுப்பில் இட்லி-தோசை செய்வது எளிதாகிவிட்டது. பீகாரைச் சேர்ந்த கீதா தேவி, ஜூலி, ராஜ்ஜோ தேவி ஆகியோரும் விறகு சேகரிப்பதிலும், விறகை எரிப்பதால் ஏற்படும் புகையினாலும் ஏற்படும் சிரமங்களிலிருந்து விடுபட்டுள்ளனர். அவர்கள் கண் எரிச்சல், தலைவலி ஆகியவற்றால் பாதிக்கப்படுவதில்லை, குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதில்லை. வாழ்க்கையை இருளில் இருந்து வெளிச்சத்திற்கு இட்டுச்செல்லும் இதேபோன்ற வெற்றிக் கதைகள் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் உள்ளன, இதனால் சாமானிய மக்களுக்கு வாழ்க்கை எளிதாகிறது. இவை அனைத்துக்கும் பிரதமர் உஜ்வாலா யோஜனா திட்டமே காரணமாகும்.

## அந்த்யோதயா திட்டமும், சவாலான பயணமும்

உலக சுகாதார அமைப்பின் (WHO) தரவுகளின்படி, மரம், நிலக்கரி, மாட்டு சாணம் போன்ற பாரம்பரிய சமையலறை எரிபொருள்களைக் கொண்டு சமைப்பதால் ஏற்படும் புகை காரணமாக, இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5 லட்சம் இறப்புகள் பதிவாகின்றன. இவர்களுள் பெரும்பாலும் பெண்களே. பெண்களின் உடல் நலமின்மை முழு குடும்பத்திலுமே பாதிப்பை ஏற்படுத்தியது இயற்கையே. புகை காரணமாக காற்று மாசுபாடும் ஏற்பட்டது.

எல்பிஜி போன்ற தூய எரிபொருள்கள் சுதந்திரம் பெற்றதிலிருந்து இவ்வளவு காலமாக ஒரு குறிப்பிட்ட வகை மக்களுக்கு மட்டுமே கிடைப்பதாக இருந்தன. முந்தைய அரசாங்கங்கள் நாடு முழுவதும் மக்களுக்கு இதைக் கிடைக்கச் செய்திருக்க முடியும். 2014 வரை நாட்டில் 13 கோடி எரிவாயு இணைப்புகள் மட்டுமே இருந்தன. மத்திய அரசின் உஜ்வாலா திட்டம் நாட்டின் இந்நிலையை மாற்றியுள்ளது. எரிவாயு

# வாழ்தல் எளிது : புரட்சிகர மாற்றம்

'எளிமையான வாழ்க்கையை' உஜ்வாலா திட்டம் நாட்டில் மேம்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் பெண்களின் ஆரோக்கியம் மேன்மையடைவதுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் வலுப்பெறுகிறது. உலக பொருளாதார மன்றத்தின் சர்வதேச எரிசக்தி மாற்றத்திற்கான குறியீடு மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான செயல்திறன் குறியீட்டின் தரவரிசையில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.



**உலகில் மிக அதிக அளவில் எல்பிஜி நுகரும் நாடாக இந்தியா மாறியது**

**99.6** குடும்பங்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. அதாவது, 43 சதவீதத்திற்கும் அதிகமாக பயன்பாட்டு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் 55 சதவீத குடும்பங்கள் மட்டுமே சமையல் எரிவாயுவைப் பயன்படுத்தி வந்தன.

- பெண்கள் சமையலுக்காக தாங்கள் செலவிடும் நேரத்தை மிச்சப்படுத்தினர் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டதால் குடும்ப வருமானத்திற்கு பங்களிக்கத் தொடங்கினர்.
- தூய எரிபொருளில் - அதாவது எல்பிஜியில் சமைக்கும் வீடுகளின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. இது உடல்நலத்தைப் பாதிக்கின்ற நோய்களைக் குறைக்க வழிவகுத்தது.
- விறகு சேகரிக்க காட்டில் அலைந்து திரிவதிலிருந்து விடுதலை.

இணைப்பு உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை கடந்த ஆறு ஆண்டுகளில் இருமடங்குக்கும் மேலாக அதிகரித்து 29 கோடியாக உள்ளது. எல்பிஜி இணைப்புகள் இன்று அனைவரின் அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக மாறியிருக்கலாம்; ஆனால் அது ஒரு குறிப்பிட்ட வகுப்பின் 'அந்தஸ்தின் சின்னமாக' இருந்த ஒரு காலமும் இருந்தது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 25 கூப்பன்கள் வழங்கப்பட்டன, அவர்கள் தங்கள் நாடாளுமன்றத் தொகுதிகளில் 25 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்புகளை வழங்குவதில் பெருமிதம் கொண்டனர். சமையல் எரிவாயு இணைப்புகளின் கறுப்புச்சந்தை குறித்து அடிக்கடி செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டது! ஆனால் இப்போது பிரதமர்-உஜ்வாலா திட்டத்தின் கீழ் எட்டு கோடி இணைப்புகள் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. சுதந்திரம் பெற்ற 60 ஆண்டுகளில் எல்பிஜி 55 சதவீத வீடுகளை எட்டியது, இது 6 ஆண்டுகளில் 43 சதவீதம் அதிகரித்து 99.6 சதவீதமாக உள்ளது.

நாடு முழுவதும் உள்ள சமையலறைகளுக்கு சுத்தமான எரிபொருளை வழங்க வேண்டும் என்ற பண்டிட் தீன் தயாள் உபாத்யாயாவின் அந்தியோதயா கனவை நனவாக்க முயற்சிக்கும் மோடி அரசுக்கு அது எளிதாக இருக்கவில்லை. நிதி ஆதாரங்களே மிகப்பெரிய சவாலாக இருந்தது, இது முந்தைய அரசாங்கங்களாலும் தீர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் மானிய விலையில் எல்பிஜி வழங்குவதை விரிவுபடுத்தும் நோக்கம் அவர்களுக்கு இல்லை. திட்டமிட்ட காலத்துக்கு ஏழு மாதங்களுக்கு முன்னதாகவே எட்டு கோடி இலவச இணைப்புகளை வழங்கும் இலக்கை இத்திட்டம் அடைந்துள்ளது என்ற பெருமை, தைரியமான முடிவெடுக்கும் மத்திய அரசையே சாரும். இத்திட்டம் உலகம் முழுவதும் அனைவராலும் பாராட்டப்படுகிறது. இத்திட்டத்தின் வெற்றியால் ஈர்க்கப்பட்ட கானா, பங்களாதேஷ் போன்ற நாடுகளும் இதை செயல்படுத்துகின்றன. உஜ்வாலா யோஜனா திட்டத்தின் ஆறு ஆண்டுகள் நிறைவடையும் நேரத்தில் இத்திட்டத்தின் வெற்றிகரமான பயணத்தை புரிந்து கொள்வதும் முக்கியம்.

## பஹலுடன் ஒரு புதிய ஆரம்பம்

2014ஆம் ஆண்டு மே மாதம் மத்தியில் அதிகார மாற்றம் ஏற்பட்ட பின்னர், அரசாங்கத்தின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்பட்டது தெளிவாகியது. மானிய விலையிலான எல்பிஜி நாடு முழுவதும் சென்று சேரக் கூடிய வகையில் நிதி ஆதாரங்களைத் திரட்டுவதற்கான கொள்கையை வகுப்பதற்கான பணிகளை மத்திய அரசு தொடங்கியது. இந்த திசையில், முதல் நடவடிக்கையாக, அரசாங்கம், டீசல் மீதான மானியத்தை ரத்து செய்து, அதை சந்தையுடன் இணைத்தது. பின்னர், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை, முன்பு ஒரு பீப்பாய் 150 டாலர் என்றிருந்த நிலை மாறி, ஒரு பீப்பாய் 26 டாலராகக் குறைந்தது என்பது ஒரு



# உலகளவில் உஜ்வாலா திட்டம்

- கானா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் உஜ்வாலா யோஜனா திட்டத்தை ஆய்வு செய்து அங்கும் இதேபோன்ற திட்டத்தை, ஏழை மக்களுக்காக செயல்படுத்துகின்றன
- கானாவில் 23 சதவீத மக்கள் மட்டுமே எல்பிஜி இணைப்புகள் பெற்றுள்ளனர், சிலிண்டர்களை நிரப்ப மக்கள் மணிக்கணக்கில் வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. எனவே, கானா, இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தத்தைக் கையெழுத்திட்டுள்ளது,
- உஜ்வாலா யோஜனா திட்டம் மூலம் புகை இல்லாத சமையலறைகளை ஏற்படுத்தும் முயற்சி எடுத்தமைக்காகவும், திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்தியதற்காகவும் 2017 ஆம் ஆண்டில் உலக பெட்ரோலிய கவுன்சில் சிறப்பு விருது வழங்கப்பட்டது.
- பாரிசில் உள்ள உலக எல்பிஜி அசோசியேஷன், உஜ்வாலாவின் வெற்றிக் கதைகளை தனது இணையதளத்தில் ‘‘இந்தியாவில் எல்பிஜி விநியோகத்தின் வெற்றி‘‘ என்ற தலைப்பில் வெளியிட்டது.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பெண்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது ஆகியவற்றில் செய்துள்ள சிறந்த சாதனைக்காக இந்தியாவை சர்வதேச எரிசக்தி நிறுவனம், பாராட்டியது.

இனிமையான தற்செயல் நிகழ்வு. இதைத் தொடர்ந்து ஆதார் அட்டை அமைப்புக்கான கொள்கை வரையறை ஏற்படுத்தப்பட்டது.எல்பிஜி (டிபிடிஎல்) திட்டத்தின் நேரடி பயன் பரிமாற்றம், ஜனவரி 1, 2015 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. , ‘ஜாம்’(JAM) என்ற ‘ஜன்தன் - ஆதார் - மொபைல் ஆகிய மூன்றிற்கு இடையிலான இணைப்பு இதுவரை இருந்து வந்த நிலைமைகளை ஒட்டுமொத்தமாக மாற்றுவதாக அமைந்தது. ‘பஹால்’ என்று பெயரிடப்பட்ட இத்திட்டம் உலகின் மிகப்பெரிய நிதி உதவித் திட்டமாக மாறியது, இது லிம்கா சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. 4.11 கோடி போலி இணைப்புகளை அடையாளம் கண்டு 13,000 கோடி ரூபாய் சேமிக்க டிபிடிஎல் திட்டம் அரசுக்கு உதவியது. கசிவுகளற்ற டிஜிட்டல் அமைப்பு நாடு முழுமைக்கும் எல்பிஜி வசதிகளை வழங்க அரசாங்கத்திற்கு நிதி அடிப்படையை வழங்கியது.

ஏழைகளுக்கு எந்த அசவுகரியமும் ஏற்படாமல் இருப்பதற்காக, டிபிடிஎல் திட்டத்திற்கான அடித்தளத்தை தயாரிக்கும் அதே நேரத்தில் டிஜிட்டல் முறையும் உருவாக்கப்பட்டது. அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், விநியோகஸ்தரிடம் சென்று உஜ்வாலா இணைப்பைக் கேட்பது மட்டுமே. அதன் பிறகு, நுகர்வோருக்கு உஜ்வாலா இணைப்பை வழங்குவது விநியோகஸ்தரின் பொறுப்பாகும்.

## திட்டத்திற்கு செல்வந்தர்களின் ஆதரவு

மக்களை மையமாகக் கொண்ட திட்டத்தை அவர்களின் பங்களிப்பின் மூலம் மக்களிடம் கொண்டு செல்வதற்கான கொள்கை, மோடி அரசாங்கத்தின் நல்லாட்சிக்கு ஒப்பானதாகும். இந்தத் திட்டத்திற்கான அடிப்படைக் கட்டமைப்பைத் தயாரித்த பின்னர், பிரதமர் நரேந்திர மோடி, மார்ச் 27, 2015 அன்று பெட்ரோலிய அமைச்சகத்தின் ‘உர்ஜா சங்கம்‘ நிகழ்ச்சியில் ‘கிவ் இட் அப்’ (‘விட்டுக் கொடுங்கள்‘) என்று வேண்டுகோள் விடுத்தார். மானிய விலையில் உள்ள எல்பிஜி சிலிண்டர்களைப் பெறுவதைக் கைவிடுமாறு பணக்காரர்களை அவர் கேட்டுக்கொண்டார். இந்த இயக்கத்தின் மூலம் சேமிக்கப்படும் பணம் அரசு கருவூலத்திற்குச் செல்லாமல், ஏழைகளுக்கு இலவச எல்பிஜி சிலிண்டர்களை வழங்கப் பயன்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

பிரதமரின் வேண்டுகோளுக்கு வசதியான பிரிவினர் உடனடி ஆதரவளித்தனர், உடனடியாக 1.08 கோடி நுகர்வோர் எல்பிஜி மானியத்தைத் தாமாகவே முன்வந்து விட்டுக்கொடுத்தனர். மக்களின் ஆதரவுடன், உஜ்வாலா திட்டம், மக்கள் இயக்கமாகவும், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தின் உயிர்நாடியாகவும் மாறியது. 2016ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று உத்தரப்பிரதேசத்தின் பல்லியாவிலிருந்து பிரதமர் மோடி தொடங்கிய இந்தத் திட்டம் ஆறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

## ஆசைகள் சிறகுகளைப் பெறுகின்றன, வாழ்க்கை மென்மையாகிறது

உஜ்வாலா யோஜனா திட்டம் ஏழைகள், தாழ்த்தப்பட்டவர்கள், நடுத்தர வர்க்கத்தினர், ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் மற்றும் குறிப்பாக, பெண்களின் வாழ்க்கைத்



## ஆரோக்கியமான குடும்பம், ஆரோக்கியமான சமுதாயம்

- உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, மரபுசார் எரிபொருட்களைக் கொண்டு சமைப்பதால் ஏற்படும் மாசு காரணமாக இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 500,000 பேர் இறக்கின்றனர்.
- இப்போது, உஜ்வாலா திட்டம் சுவாச மற்றும் நுரையீரல் நோய்களை 20 சதவீதம் குறைத்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் (WHO), இந்திய இருதய சங்கம் மற்றும் இருதய ஆராய்ச்சி அறக்கட்டளை கண்டறிந்துள்ளன.
- உஜ்வாலா மேம்பட்ட ஆரோக்கியத்தை, குறிப்பாக பெண்களுக்கு உறுதி செய்துள்ளது.
- புகை இல்லாத சமையலறை பெண்களுக்கு தலைவலி மற்றும் கண் எரிச்சலை நீக்கியுள்ளது.
- சுய உதவிக்குழுக்களின் உதவியுடன் பெண்கள் வேலைவாய்ப்பு பெறத் தொடங்கியுள்ளனர். சமையலறையில் குறைந்த நேரத்தை செலவழிப்பதால், இப்போது அருகிலுள்ள மக்களுடன் சமூகப் பிரச்னைகள் குறித்த விவாதங்களில் பங்கேற்க அவர்களுக்கு நேரம் கிடைக்கிறது.
- ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் , ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் ஆகிய மக்கள் சமுதாயங்களின் வாழ்க்கையை மேம்படுத்தி சமூக அதிகாரத்தின் அடிப்படையாக மாறியது.

தரத்தை மாற்றியுள்ளது. வாழ்தல் எளிது என்பதே இப்போது அரசாங்கத்தின் மந்திரமாக மாறியுள்ளது. இந்த மந்திரத்தை மெய்ப்பிப்பதற்கு ஆதரவளிக்கும் தூணாக உஜ்வாலா யோஜனா உள்ளது. இது சாமானியர்களின் அபிலாஷைகளுக்கு, புதிய இறக்கைகளை வழங்கியுள்ளது. எரிவாயு அடுப்புகளில் சமைப்பது பெண்களுக்கும் வாழ்க்கையை மிகவும் எளிமையாக்கியுள்ளது, இப்போது பெண்கள், தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் செலவிட நேரம் உள்ளது. இதன் விளைவாக, பெண்கள் தங்கள் ஓய்வு நேரங்களில், சுய வேலைவாய்ப்பு, திறன் பயிற்சி மற்றும் பிற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

2020 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவில் அனைவருக்கும் எல்பிஜி வசதி வழங்கியுள்ளது ஒரு மகத்தான சாதனை" என்று சர்வதேச எரிசக்தி அமைப்பின் நிர்வாக இயக்குனர் பாத்திஹ் பீரோல் கூறுகிறார். "இது தூய்மையான எரிசக்தி வழங்குவதற்கான ஒரு விஷயம் மட்டுமல்ல; இது ஒரு நிதி சார்ந்த, சமூகம் சார்ந்த முயற்சியுமாகும். "

வாழ்தல் எளிது என்பதன் முக்கியத்துவத்தையும், இந்தத் திட்டத்தின் பின்னால் நாட்டின் உயர் நிலைத் தலைவரின் சிந்தனையையும் உணர, பிரதமர் மோடியின் வேதனையை அவரது கூற்றிலிருந்து ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்: "நான் பிறந்த வீடு மிகச் சிறிய தாழ்வாரம் போன்றது. ஜன்னல் கிடையாது. ஒரே ஒரு கதவு மட்டுமே இருந்தது, உணவு சமைக்க, அம்மா, விறகு எரிப்பார். சில சமயங்களில் அவள் உணவு பரிமாறும்போது அவளைப் பார்க்கவும் முடியாத அளவிற்கு புகை சூழ்ந்திருக்கும்",

என் குழந்தைப் பருவத்தில் புகை சூழ்ந்திருக்கத் தான் நான் சாப்பிடுவேன். எனவே, அந்த தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் வலியை என்னால் புரிந்து கொள்ள முடியும். நான் அந்த வலியை அனுபவித்து வாழ்ந்திருக்கிறேன், அந்த ஏழைத் தாய்மார்களை அத்தகைய வேதனையான வாழ்க்கையிலிருந்து விடுவிக்க வேண்டும். எனவே, 8 கோடி குடும்பங்களுக்கு எல்பிஜி சிலிண்டர்களை இலவசமாக வழங்குவதாக உறுதிமொழி எடுத்துள்ளேன். " இத்திட்டம் சாமானிய மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை வழங்கியுள்ளது, இது ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப உதவியாக இருக்கும் என்பதையும் நிரூபிக்கிறது.

## ஆரோக்கியமான குடும்பம், ஆரோக்கியமான சூழல்

விஞ்ஞானிகளின் கூற்றுப்படி, ஒரு பெண் மர அடுப்பில் சமைக்கும்போது, ஒரு நாளில் சுமார் 400 சிகரெட்டுகள் பிடித்தால் உள்ளிழுக்கக் கூடிய புகையை அவள் உள்ளிழுக்கிறாள். இது குழந்தைகள் மற்றும் வீட்டில் வாழும் மற்ற உறுப்பினர்களையும் பாதிக்கிறது. கண்களில் எரிச்சல், தலைவலி, ஆஸ்துமா, சுவாச நோய்கள் போன்றவையும் வெகு சாதாரணமாகக் காணப்படுகின்றன. உஜ்வாலா யோஜனா திட்டம், நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில்

## சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் ஏழை மக்களுக்கும் கிடைக்கச்செய்தல்

- உஜ்வாலா யோஜனா திட்டம் வேகமெடுக்கத் தொடங்கியபோது, நாட்டின் உயர் தலைமை அதை மேலும் விரிவாக்க உறுதி பூண்டிருந்தது. முன்னதாக, இந்தத் திட்டத்தின் இலக்கு ஐந்து கோடி இலவச இணைப்புகளை வழங்குவதாகும். ஆனால் அதன் வளர்ந்து வரும் முக்கியத்துவம் மற்றும் பொதுமக்களின் உணர்வைக் கருத்தில் கொண்டு, இலக்கு 2018ஆம் ஆண்டு 8 கோடியாக மாற்றப்பட்டது.
- முதல் இலக்கு 2011 சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இலக்கு விரிவாக்கப்பட்டபோது, பிற பிரிவுகளும் அதில் சேர்க்கப்பட்டன.
- சமூக-பொருளாதார கணக்கெடுப்புக்கும் கூடுதலாக, அனைத்து எஸ் சி/எஸ்.டி குடும்பங்கள், பிரதமர் ஆவாஸ் யோஜனா திட்டத்தின் பயனாளிகள் - கிராமின், அந்த்யோதயா அன்ன யோஜன் திட்ட வனவாசிகள், தேயிலைத் தோட்ட பழங்குடியினர், தீவுகளில் வாழும் மக்கள், மிகவும் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பொருளாதார ரீதியில் ஒரேவிதமான ஏழைகள் ஆகியோரும் திட்டத்திற்குள் கொண்டு வரப்பட்டனர்.
- 8 கோடி பயனாளிகளில், எஸ்சி-எஸ்டி பிரிவினர் மட்டும் 3.05 கோடிக்கு மேல் உள்ளனர். அதாவது 38 சதவீதம்.
- அரசாங்கத்தின் நோக்கம் எல்பிஜி வசதிகளை வழங்குவது மட்டுமல்ல. தொலைவு காரணமாக மக்கள் அதைப் பயன்படுத்துவதை நிறுத்தக்கூடாது என்ற வகையில் எல்பிஜி கிடைப்பதை விரிவுபடுத்தவும் அரசாங்கம் எண்ணியுள்ளது. விநியோகச் சங்கிலியை அதிகரிக்கவும், 15 கி.மீ சுற்றளவில் புதிய விநியோகஸ்தர்களை உருவாக்கவும் ஜியோ டேக்கிங் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, எரிவாயு விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது,
- முன்னதாக 13,500 எல்பிஜி விநியோகஸ்தர்கள் இருந்தனர். இப்போது 25,000 க்கும் அதிகமாக உள்ளனர். இது, குறிப்பாக கிழக்கு மற்றும் வடகிழக்கு இந்தியாவுக்கு பயனளித்துள்ளது, அங்கு நுகர்வோர் மற்றும் விநியோகஸ்தர்கள் குறைவாக இருந்தனர். எல்பிஜியின் ஆண்டு இறக்குமதியும் 16 மில்லியன் மெட்ரிக் டன்னிலிருந்து 26 மில்லியன் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.



- 14 கிலோ சிலிண்டர் ஒன்றுக்கு ஏழை ஒருவர் எவ்வாறு 800ரூபாய் செலுத்த முடியும் என்பதுதான், இந்தத் திட்டத்தின் பெருஞ்சவாலாக இருந்தது. இதற்காக 5 கிலோ சிறிய சிலிண்டரை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. ஆனால் பலருக்கு இது பிடிக்கவில்லை.
- இணைப்பைப் பெறும்போது மக்களுக்கு. அரசு ரூ. 1600 / - கடனாக அளித்தது. இது மானியமாகக் கொடுக்கப்படும் தொகையிலிருந்து கழிக்கப்பட வேண்டிய கடனாக அளிக்கப்பட்டது ஆனால், மக்கள் எந்தவித பிரச்னைக்கும் உள்ளாகி விடக் கூடாது என்பதற்காக இந்தக்கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்காலத்தில் முடிவெடுக்கப்படும்.

உள்ள பெண்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது. உலக சுகாதார அமைப்பு, இந்திய இருதய சங்கம், இந்திய இருதய இடர் அமைப்பு ஆகியவற்றின் புள்ளிவிவரங்கள், குடும்பத்தை ஆரோக்கியமாக மாற்றுவதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க உஜ்வாலா யோஜனா எவ்வாறு அடியெடுத்து வைத்துள்ளது என்பதை விளக்குகிறது.

இந்த மரபுசார் எரிபொருளால் ஆண்டுதோறும் 5 லட்சம் இறப்புகள் நேரிட்டன. இப்போது சுவாச நோய்கள் 20 சதவீதம் குறைந்துள்ளன. இதற்கு உஜ்வாலா யோஜனா திட்டம் முக்கிய பங்கு வகித்துள்ளது. அது மட்டுமல்லாமல், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கிறது. பல கிராமப்புறங்களுக்குச் சென்று தனது ஆய்வை மேற்கொண்ட அகமதாபாத்தின் இந்திய மேலாண்மை கழகத்தின் பேராசிரியர் எஸ்.கே. பருவா, எல்பிஜி, வீட்டு மாசுபாட்டைக் கடுமையாகக் குறைத்துள்ளதாகக் கூறியுள்ளார். இது இயற்கையாகவே பெண்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்குப் பயனளிக்கிறது. இப்போது வீடுகளில் மாசு குறைவாக இருப்பதாக சர்வதேச எரிசக்தி அமைப்பின் (ஐ.இ.ஏ) நிர்வாக இயக்குனர் ஃபாத்திஹ் பீரோல் கூறுகிறார்.

புவி வெப்பமடைதலில் பெரும் பங்கு வகிக்கும் மரபுசார் எரிபொருட்களால் வெளிப்படும் மீத்தேன், கருப்பு கார்பன் மற்றும் கரிம கார்பன் ஆகியவை குறைந்து வருகின்றன. ஐ.நா. பல பரிமாண வறுமைக் குறியீடும் காட்டுமிப்பு குறைந்து வருவது பற்றி பேசுகிறது. ஐக்கிய நாடுகளின் நிலையான மேம்பாட்டு இலக்குகளை (எஸ்.டி.ஜி) அடைவதற்கு உஜ்வாலா திட்டம் ஒரு தூணாக உருவெடுத்துள்ளது.

### கொரோனா காலம் மற்றும் வருங்காலத்திற்கான வழி

கொரோனா காலத்தின் போது உஜ்வாலா யோஜனா திட்டம் கிராமங்களையும் ஏழைகளையும் எவ்வாறு கவனித்துக்கொண்டது என்பதற்கு கரிப் கல்யாண் தொகுப்பு அல்லது ஏழை மக்கள் நலனுக்கான தொகுப்பு ஒரு நேரடி எடுத்துக்காட்டு. நாட்டில் பொது முடக்கம் அறிவிக்கப்பட்டிருந்த போது, ஏழைகளின் வீடுகளில்

# எல்பிஜி பஞ்சாயத்தும், ஐந்து மந்திரங்களும்

உஜ்வாலா திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்கான முயற்சிகள் கிராமங்களில் மட்டுமல்லாமல், எல்பிஜி பஞ்சாயத்துகளை ஏற்பாடு செய்வதன் மூலமும் மேற்கொள்ளப்பட்டது. தூய்மையான எரிபொருளை எவ்வாறு சரியாகப் பயன்படுத்துவது என்பது குறித்தும், அதன் பயனுள்ள நன்மைகள் குறித்தும் எல்பிஜி பயனாளிகளிடையே விழிப்புணர்வை பரப்புவதை இது நோக்கமாகக் கொண்டது. மரபுசார் எரிபொருளான மாட்டு சாணம், கரி அல்லது மரக்கட்டை ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது தூய எரிபொருளைப் பயன்படுத்துவதன் நன்மைகள் குறித்து தனிப்பட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் விவாதத்தைத் தூண்டுவதற்கான தளத்தையும் இது வழங்கியது. இந்த திட்டம் தொடங்கப்பட்டு கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து, அக்டோபர் 2017 இல், எல்பிஜி பஞ்சாயத்து என்ற தனித்துவம் வாய்ந்த கருத்து உருவாக்கப்பட்டது. அதன் ஐந்து முக்கியமான நோக்கங்கள்:

யாரும் நேரத்தை வாங்க முடியாது என்றாலும், ஆனால் உஜ்வாலாவிலிருந்து நாங்கள் நேரத்தையே வாங்கியது போல் தெரிகிறது.



குடியரசுத் தலைவர் மாளிகையின் தர்பார் அரங்கில் நிகழ்ந்த சமையல் எரிவாயு சம்பந்தமான பஞ்சாயத்து நிகழ்ச்சியில் உஜ்வாலா திட்ட பயனாளி நாராயணி சாகூ



**பாதுகாப்பு, செயல்திறன்:** பாதுகாப்பான, உடனடியான, நம்பகமான உதவி.

**சுற்றுச்சூழல்:** காற்று மாசுபாடு, காடழிப்பு, பாலைவனமயமாக்கல் ஆகியவற்றைக் குறைக்கிறது.

**ஆரோக்கியம்:** புகை இல்லாத உட்புற சமையலின் நன்மைகள்.

**பொருளாதார மேம்பாடு:** மலிவான எரிபொருள் வருமான வாய்ப்புகளுக்கு வழிவகுக்கிறது.

**அதிகாரம்:** வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றம்.

தூய எரிபொருளைத் தொடர்ந்து பயன்படுத்துவதையும், பாதுகாப்புக் கவலைகளை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டது பஞ்சாயத்து. இந்த பஞ்சாயத்தின் கருப்பொருள் 'எதையாவது கற்றுக் கொள்ளுங்கள், எதையாவது கற்றுக்கொடுங்கள்' என்பதாகும். குஜராத்தில் நடைபெற்ற முதல் பஞ்சாயத்து முதல் இதுவரை இதுபோன்ற 1.25 லட்சத்துக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துகள் நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டன.

அடுப்பு எரிந்து கொண்டே இருப்பதை உறுதி செய்வதற்காக அன்ன யோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக, சமைப்பதற்கு இலவச எல்பிஜி சிலிண்டர்களை அரசாங்கம் வழங்கியது. கொரோனா காலத்தில் அரசு 9600 கோடி ரூபாய் செலவழித்து 14.17 கோடி சிலிண்டர்களை ஏழைகளுக்கு இலவசமாக வழங்கியது. உஜ்வாலா திட்டத்தின் வெற்றிக்கும், அதன் இலக்கு, குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே எட்டப்பட்டதற்கும், முக்கிய காரணங்களுள் ஒன்று, இந்தத் திட்டம் யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்பதும், முழு இயந்திரங்களும் நேரடியாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கியது என்பதுமாகும். மத்திய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் நாட்டின் 750 மாவட்டங்களில் மாவட்ட நோடல் அதிகாரிகளை (டி.என்.ஓ) திட்டப்பணியில் அமர்த்தின. பெட்ரோலிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஒவ்வொரு வாரமும் இந்த இளம் அதிகாரிகளுடன் காணொளி மாநாடு மூலம் அவர்களின் மனத்திட்பத்தை அதிகரித்து, திட்டச் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் கலந்துரையாடினார்.

உஜ்வாலா திட்டத்தை தூய்மையான எரிபொருள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சுகாதார மேம்பாடு ஆகியவற்றுக்கு ஒத்ததாக அமைத்த ஒரு குறிக்கோள் கொண்தாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்படுத்தியதால், உலகம் அதைக் கவனித்தது.

உஜ்வாலா யோஜனா திட்டத்தின் வெற்றி அனைவரும் காணத்தக்கதாக உள்ளது. ஆனால் அரசாங்கம் நிற்கவேயில்லை. எல்பிஜி கவரேஜை மக்கள் தொகையில் இணைப்புகள் தற்போது 99.6 சதவீதமாக உள்ளது. இந்த இலக்கை எட்டிவிட்ட மத்திய அரசு, இந்த பொது பட்ஜெட்டில் ஒரு கோடி இலவச இணைப்புகளை வழங்கும் இலக்கை நிர்ணயித்துள்ளது. இதனால் நிரந்தர முகவரி இல்லாத திட்டத்திற்குட்படாத மீதமுள்ள நகரங்களில் 0.4 சதவீத பிரிவுகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு எல்பிஜி இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதனால்தான் நீண்டகால அணுகுமுறையுடன் கட்டமைக்கப்பட்ட பிரதமர் உஜ்வாலா யோஜனா திட்டம் இன்று இந்தியாவை சுயசார்பு நாடாக மாற்றுவதில் முக்கியமான போர்வீரராகப் பார்க்கப்படுகிறது. ■

நேர்காணல்

# “கார்ப்பரேட் அடையாளத்துடன் கூடிய பெட்ரோலிய அமைச்சகம் உஜ்வாலா திட்டத்தின் மூலம் ஒரு மக்கள் இயக்கமாக வெளிப்படுகிறது.”

பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், முன்னர், பெருநிறுவன உலகத்துடன் அடையாளம் காணப்பட்டது என்று தான் நான் கூறுவேன். ஆனால் பிரதமர் உஜ்வாலா திட்டம் அதற்கு ஒரு புதிய அர்த்தத்தை அளித்துள்ளது. பொருளாதார முதலீட்டின் மூலம் சமூக அதிகாரம் வழங்கக் கூடிய கருவியாக அதை உருவாக்கியுள்ளது. எரிசக்தி, வறுமைக் குறைப்பு ஆகியவை குறித்த அரசாங்கத்தின் கொள்கைகளின் மையப் பகுதியாக பெண்கள் மாறிவிட்டனர். ஏழைகளின் சமையலறைகளில் சமைத்தல் என்பது புகையற்றதாகி வருகிறது. *எனது நாடு உருமாறி முன்னேறி வருகிறது.....* இந்த 2.46 நிமிட பாடல், நரேந்திர மோடி அரசின் முதலாவது பதவிக்காலத்தின் இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தபோது வெளியான பாடல். இது மக்களின் கீதமாக மாறியது, இது பிரதமர் உஜ்வாலா யோஜனா திட்டத்தின் வெற்றியால் சாத்தியமானது. இந்த திட்டம் நாட்டுக்கும், உலகிற்கும் சமூக அதிகாரத்திற்கான ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. **மே 1 ம் தேதி இந்த திட்டம் ஆறு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இத்தகைய பின்னணியில் நியூ இந்தியா சமாச்சார் இதழின் கன்சல்டிங் எடிட்டர் சந்தோஷ்குமார் மத்திய பெட்ரோலிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுடனான ஒரு நேர்காணல்.**

> “பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் முன்பு பெருநிறுவன உலகத்துடன் அடையாளம் காணப்பட்டது என்றே நான் கூறுவேன். ஆனால் பிரதமர் உஜ்வாலா திட்டம் அதற்கு ஒரு புதிய அர்த்தத்தை அளித்துள்ளது. பொருளாதார முதலீட்டின் மூலம் சமூக அதிகாரம் வழங்கக் கூடிய ஒரு கருவியாக அதை மாற்றியுள்ளது. அரசாங்கத்தின் எரிசக்தி மற்றும் வறுமைக் குறைப்பு கொள்கைகளில் பெண்கள் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்திருக்கிறார்கள்.”
>
> **தர்மேந்திர பிரதான்**
> மத்திய பெட்ரோலிய அமைச்சர்



**Q மண்ணெண்ணெய், மாட்டுச்சாணம், விறகு பயன்படுத்தும் மக்களுக்கு சமையல் எரிவாயு வழங்கும் உஜ்வாலா திட்டம் ஒத்துவருமா என்று இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன்பு அரசு ஆய்வு எதையும் மேற்கொண்டதா? திட்டம் தொடங்கப்பட்டதன் பின்னணியில் என்ன எண்ணம் இருந்தது?**

**A** நான் ஒரு பயனாளியின் வார்த்தைகளில் இதற்கு பதிலளிக்கிறேன். 2017 ஆம் ஆண்டில் பீகார் மாநிலத்தின் தர்பங்கா மாவட்டத்தில் சடாரியா கிராமத்தைச் சேர்ந்த உஜ்வாலா பயனாளி பூலோ தேவி, “இப்போது எரிவாயு எங்கள் வீட்டு வாசலுக்கே வருகிறது. முன்பெல்லாம் நாம் இதைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.” தூய எரிபொருள் எரிசக்தி துறையில் பணிபுரியும் வல்லுநர்கள், ஏன் இத்தகைய முயற்சிகள் முன்னர் அறிமுகப்படுத்தப் படவில்லை என்று என்னிடம் பல முறை கேட்கிறார்கள். கிராமப்புறங்களில் பல்லாண்டு காலமாக, மாற்று சமையல் முறைகளைப் பரப்புவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் என் கருத்துப்படி வேறு எந்த சமையல் எரிபொருள் மாற்றுக்களை விட, எல்பிஜி பயன்படுத்தி சமைப்பது மிகவும் எளிது. எல்பிஜி நாட்டின் பெண்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்துள்ளது. நாடு விடுதலையடைந்த காலத்திலிருந்து, நீண்ட காலத்திற்கு, நாட்டின் வளங்கள் மீது அனைவருக்கும் சம உரிமை இருக்கும்போது, சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டுமே எல்பிஜி கிடைத்து வந்தது. குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன்னதாகவே 8 கோடி பயனாளிகளைச் சென்றடையும் இலக்கை நாங்கள் அடைந்து விட்டோம். முதல் 60 ஆண்டுகளில், 55 சதவீத குடும்பங்கள் அல்லது 13 கோடி குடும்பங்கள் மட்டுமே எல்பிஜி இணைப்புகளைப் பெற்றிருந்தன. ஆனால் ஆறு ஆண்டுகளில் பிரதமரின் தெளிவான பார்வை காரணமாக, எல்பிஜி இணைப்புகளைக் கொண்ட குடும்பங்கள் இரு மடங்கு அதிகரித்து 29 கோடியாக உள்ளது. இது நாட்டின் 99.6 சதவீத குடும்பங்களைச் சென்றடைந்ததாகும். பிரதமர் உஜ்வாலா 2.0 இல், நாங்கள் குறிப்பாக, நகர்ப்புற ஏழைகள் மற்றும்

புலம்பெயர்ந்த தொழிலாளர்களை இணைக்க திட்டமிட்டுள்ளோம். அதற்கான நடைமுறையை விரைவில் நாட்டிற்கு அறிவிப்போம்.

**Q** பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன, ஆனால் அவற்றைச் செயல்படுத்தல் மிகவும் முக்கியமானதாயிற்றே? தயவுசெய்து, அனைவருக்கும் எல்பிஜி இணைப்பை உறுதி செய்வதற்காக அரசாங்கம் மேற்கொண்ட திட்டத்தின் சாத்தியக்கூறு மற்றும் அதிலிருந்த பல்வேறு சவால்கள் பற்றிக் கூறுங்கள்?

**A** என் கருத்துப்படி, ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் எல்பிஜி இணைப்பை எடுத்துச் செல்வதற்கான திட்டத்தை செயல்படுத்துவதற்கான முன்னோடிக் கட்டமாக பெருமளவில் பஹல் திட்டம் அமைந்தது.

அதன் பிறகு உங்களுக்கே தெரியும். பல்வேறு முயற்சிகளின் மூலம் அனைத்து பங்குதாரர்களும் ஒரே தளத்தில் கொண்டு வரப்பட்டனர். ஏழைகளுக்கு எல்பிஜி எரிவாயு நியாயமான முறையில் விநியோகிக்கப்படுவதை ஊக்குவிக்கும் வகையில் ‘அதை விட்டுக் கொடுங்கள்’ கிவ் இட் அப்’ இயக்கத்தில் செல்வந்தர்கள் ஏராளமான ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் தொடர்புகொண்ட விதமும் அரசாங்கத்தை ஊக்குவித்தது. உஜ்வாலா திட்டம் நாட்டின் கடைசி ஏழை நபருக்கும் கிடைத்ததற்கு இதுவே காரணம். இந்தியா போன்ற அனேக பன்முகத்தன்மை உள்ள ஒரு நாட்டில், இது போன்ற மிகப்பெரிய திட்டங்களை செயல்படுத்துவது மிகவும் சவாலானது என்பதும் உண்மை. எரிவாயு விநியோகத்தை அதிகரித்தல், எரிவாயுவை சிலிண்டரில் அடைப்பதற்கான பாட்டிலிங் ஆலை நெட்வொர்க்குகளை விரிவுபடுத்துதல், சிலிண்டர்களின் உற்பத்தி, ரெகுலேட்டர்கள், அடுப்புகள் ஆகியவை உடனுக்குடன் கிடைப்பதை உறுதி செய்தல் போன்றவை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வு காண நாங்கள் திட்டமிட்டோம்.

**Q** விநியோகஸ்தர்கள் வெகு தொலைவில் இருப்பதால் கிராமங்கள் எரிபொருள் நிரப்பும் சிக்கலை எதிர்கொண்டனவா? இந்த பிரச்னையை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொண்டது?

**A** விநியோகஸ்தர்களின் பட்டியலைப் பாருங்கள், கிட்டத்தட்ட 10,000 விநியோகஸ்தர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். உஜ்வாலா திட்டத்தின் விளைவாக எல்பிஜி இணைப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது, இது விநியோகஸ்தர்களுக்கு அதிக லாபம் ஈட்டித் தந்துள்ளது. பொது நல மையங்கள் மற்றும் உஜ்வாலா தீதி ஆகியவற்றின் முயற்சிகளின் காரணமாக எதிர்காலத்தில் மேலும் சிறந்த சேவைகளுக்கான வாய்ப்புகள் உள்ளன.

**Q** சிலிண்டர்களுக்கான தொகையை நுகர்வோர் சில நேரங்களில் மொத்தமாகச் செலுத்த வேண்டியிருக்கும், ஏழைக் குடும்பங்களுக்கு இது சுமையாக இருக்கும்? இது குறித்து என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? எதிர்காலத்திற்கான திட்டங்கள் என்ன?

**A** பாருங்கள், உஜ்வாலா திட்டத்தின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு வீட்டிற்கும் எல்பிஜி இணைப்பு கிடைப்பதை உறுதி செய்வதாகும். மீண்டும் நிரப்புவதில் சிக்கலை எதிர்கொண்டபோது, சிறிய சிலிண்டர்கள் வழங்குவது குறித்து நாங்கள் திட்டமிட்டோம். ஆனால் பெரும்பாலான மக்கள் 14 கிலோ சிலிண்டர்களுக்கே ஆர்வம் காட்டினர். உஜ்வாலா திட்டத்தின் கீழ் நுகர்வோருக்கு 1,600 ரூபாய் கடன் வழங்கப்பட்டது என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். சிலிண்டருக்காக வழங்கப்படும் மானியத்திலிருந்து இத்தொகை கழித்துக் கொள்ளப்படும். ஏழைகளுக்கு சுமை ஏற்படாமல், தூய்மையான எரிசக்தி பயன்பாடு ஊக்குவிக்கப்படுவதை உறுதிசெய்யும் நோக்கில் அரசாங்கம் கடனுக்கான கால அவகாசத்தையும் நீட்டித்துள்ளது

**Q&A**

**பெண்களின் உடல்நலம் தொடர்பான பிரச்னைகளை நிவர்த்தி செய்வதற்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை அதிகரிப்பதற்கும் இது எவ்வளவு தூரம் உதவியது?**

இந்த விஷயத்தில் ஒரு அமைச்சரை விட ஒரு நிபுணர் சிறப்பாக உரைக்க முடியும். உலக சுகாதார அமைப்பு, இருதய சங்கம், ஐ.ஐ.எம் அகமதாபாத், உலக பெட்ரோலிய கவுன்சில், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் பலவும், இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்கொண்ட ஆய்வுகள், புகையற்ற வகையில் சமைத்தல் காரணமாக மாசு தொடர்பான நோய்கள் குறைந்துள்ளது என்பதைத் தெளிவாக சுட்டிக் காட்டுகின்றன. காடுகளில் மரம் வெட்டும் நடவடிக்கைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது. பெண்களும் அவர்களது குடும்பத்தினரும் இத்திட்டத்தின் மூலம் பெரிதும் பயனடைந்துள்ளனர் என்பது பல்வேறு ஆய்வுகளில் இருந்து தெளிவாகிறது.

**Q** கொரோனா பெருந்தொற்றுநோய்க் காலத்தில் ஏழைகளுக்கு நேரடி நிவாரணம் வழங்க உஜ்வாலா திட்டம் எவ்வளவு தூரம் உதவியாக இருக்கும்?

**A** நாட்டில் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட போது சிறிது சிறிதாக நாடு பொதுமுடக்கத்திற்குள் நுழைந்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஸ்பானிஷ் காய்ச்சலின் போது நிலவிய நிலைமைகளை அரசாங்கம் மிக நுணுக்கமாக ஆய்வு செய்தது. அதன் அடிப்படையில் தான், பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு பிரதமர் கரிப் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் 1.75 லட்சம் கோடி நிவாரணத் தொகுப்பு அறிவிக்கப்பட்டது. எந்தவொரு ஏழைக் குடும்பமும் பசியுடன் இருக்கக்கூடாது என்பது ஆரம்பத்தில் இருந்தே எங்கள் நோக்கமாக இருந்தது. அரசு கருவூலத்திற்கு 96,000 கோடி ரூபாய் கூடுதல் சுமை இருந்தது, ஆனாலும் அரசாங்கம் ஏழைகளின் வீட்டு வாசல்களில் 14 கோடி சிலிண்டர்கள் வழங்கப்பட்டதை உறுதி செய்தது.

**Q** உஜ்வாலா திட்டத்தின் மகத்தான வெற்றிக்குப் பிறகு கானா உள்ளிட்ட பல நாடுகள் இந்தியாவிடம் உதவி கேட்டுள்ளன?

**A** இது இந்தியா கண்டுள்ள புதிய ஞானத்தின் பிரதிபலிப்பாகும். இந்தியா, புதிய ஆற்றலுடனும், புதிய ஞானத்துடனும் ஒரு தீர்மானத்தை எடுத்தால் அதை வெற்றிகரமாகச் செயலாக்குகிறது என்பதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது. உஜ்வாலா திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன்னரே நாம் இலக்குகளை எட்டியுள்ளோம், நுகர்வோரை தூய்மையான எரிசக்தியைப் பயன்படுத்த ஊக்குவித்தோம். இந்தச் சிந்தனையும், உலகை இந்தியாவை நோக்கிப் பார்க்க வைத்திருக்கிறது. எரிசக்தி, சுற்றுச்சூழல், சுகாதாரம் குறித்த பல்வேறு சமகால ஆய்வுகளைப் பாருங்கள், எல்லா இடங்களிலும் உஜ்வாலா திட்டத்தின் வெற்றி இருப்பதை நீங்கள் காண்பீர்கள். ■

# தேசத்தின் முன்னேற்றம் என்பது கிழக்கு இந்தியாவின் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது




**இந்தியாவின் பொற்காலம் என்பது கிழக்குப் பகுதிகளான ஒடிசா, பீகார், அல்லது வங்கம் போன்ற பகுதிகள் இந்தியாவை முன்னெடுத்துச் சென்ற காலம் ஆகும். இந்தியாவை முன்னெடுத்துச் செல்வதில் இவை மத்தியப் புள்ளிகளாக இருந்தன. உத்கல் கேசரி டாக்டர் ஹரே கிருஷ்ணா மஹ்தப்பின் இந்தித் தழுவல் நூலான "ஒடிசா இதிகாஸ்" என்ற நூலினை வெளியிட்டு அந்த விழாவில் பேசிய பிரதம மந்திரி நரேந்திர மோடி இந்தியாவை புதிய சிகரங்களுக்கு எடுத்துச் செல்லும் ஒருவித உறுதிப்பாட்டை உட்செய்தியாகத் தெரிவித்தார். சுதந்திர வரலாற்றின் பாடங்களை கிரகித்துக் கொண்டு இளைஞர்கள் உள்ளுறை ஆற்றலை ஒருங்கிணைத்து இது மேற்கொள்ளப்படும் என்றார்.**

"இந்தியாவில் சமச்சீரான வளர்ச்சி இல்லை என்றால், நாம் நமது உள்ளார்ந்த ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் போய்விடும். இந்த நாட்களில் மேற்கு பிராந்தியத்தின் வளர்ச்சியையும் வளமையையும் நீங்கள் பார்க்கலாம். கிழக்குப் பிராந்தியத்தில் அது ஒடிசா, பீகார், வங்கம் அல்லது அசாம் என எந்தப் பிராந்தியமாக இருந்தாலும் அங்கு எண்ணற்ற இயற்கை மூலவளங்கள், படைப்பாக்க சிந்தனை உள்ளவர்கள், அற்புதமான மனித வளம் போன்றவை இருக்கின்றன. அளப்பரிய ஆற்றல் பொதிந்து உள்ள இந்தப் பிராந்தியம் வளர்ச்சி பெறும் போது, இந்தியா பின்தங்கி இருந்துவிட முடியாது". கடந்த ஆறு ஆண்டுகளில் இந்தியாவின் கிழக்குப் பிராந்திய வளர்ச்சிக்கு அரசு அதிகபட்ச முக்கியத்துவம் தருவதற்கு இதுவே காரணம் ஆகும். அதனால் நாட்டில் சமச்சீரான வளர்ச்சி உள்ளது. உத்கல் கேசரி டாக்டர் ஹரே கிருஷ்ணா மஹ்தப்பின் இந்தி மொழி தழுவல் நூலை வெளியிட்ட தருணத்தில் பிரதம மந்திரி நரேந்திர மோடி கிழக்கு இந்தியாவின் மேம்பாட்டுக்கான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தினார்.

கிழக்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் வர்த்தகம்



# உத்கல்லின் மேன்மையான பாரம்பரியம்

**இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு தங்களது குருதி மூலம் உயிர்ப்பு ஏற்படுத்தி சுதந்திரப் பூக்களை மலரச் செய்த மாபெரும் மனிதர்கள் பிறந்த பூமியாக உத்கல் எப்போதும் இருந்து உள்ளது. அவர்களில் ஒருவர்தான் உத்கல் கேசரி டாக்டர் ஹரே கிருஷ்ணா மஹ்தப் ஆவார்.**

ஒடிசா கடவுள் ஜெகந்நாதரின் புனித பூமியாக விளங்குவதோடு கலை மற்றும் கலாச்சாரங்களின் பாரம்பரிய இடமாகவும் தலைவர்கள் மற்றும் மாபெரும் தலைவர்களின் இருப்பிடமாகவும் விளங்குகிறது. மகாபாரதம் என்ற புராண இதிகாசத்தில் கலிங்கப் பேரரசு பற்றி குறிப்பிடப்பட்டு உள்ளது. அதே போன்று கல்வெட்டுகளில் மேன்மை பொருந்திய அரசர் காரெவேலா என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளதும் அதன் கதையைத் தெரிவிக்கிறது. கலிங்கப் போர் என்பதே ஒடிசா மக்களுடைய சுய-மரியாதை, தேசபக்தி மற்றும் தைரியத்துக்கான சாட்சியமாக விளங்குகிறது. பேரரசர் அசோகரின் ஆற்றலுக்கு அடிபணிவதற்குப் பதிலாக கலிங்கத்தின் மைந்தர்கள் போரில் தங்களின் இன்னுயிரை நீத்தனர். இந்தப் போர் பேரரசர் அசோகரின் வாழ்க்கை மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதற்குப் பிறகு அசோகர் அறநெறியாளராக மாறியதோடு புத்த மதப் போதனைகள் மற்றும் அறிவைப் பரப்புபவராக மாறினார். போரின் முதல் முழக்கம் இங்கிருந்துதான் எழும்பியது. 1804ல் ஜயி ராஜகுரு (ஜயகிருஷ்ணா மஹோபத்ரா) முன்னெடுத்த சுதந்திரத்துக்கான பைக்கா போர் இங்குதான் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து பக்ஷி ஜகபந்து (ஜகபந்து பித்யாதர் மஹோபத்ரா), சக்ர பிசாய் மற்றும் ரிண்டோ மஜ்ஹி ஆகியோர் 1817ல் போராட்டத்தை முன்னெடுத்தனர்.



## டாக்டர் மஹ்தப் - நவீன ஒடிசாவை உருவாக்கியவர்

தங்களது தாய்நாடு குறித்து பெருமிதம் கொள்பவர்களை நினைக்கும் போது சிலரின் பெயர்கள் நினைவுக்கு வரும். அவர்களில் ஒருவரின் பெயர்தான் உத்கல் கேசரி டாக்டர் ஹரே கிருஷ்ணா மஹ்தப். நாடு கடமை ஆற்ற அழைப்பு விடுத்தபோது, இளைஞரான ஹரேகிருஷ்ணா கல்லூரி படிப்பை விட்டு விட்டு பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொண்டார். ஏப்ரல் 23, 1946ல் அவர் ஒடிசாவின் பிரதம மந்திரி ஆனார். 25 சமஸ்தானங்களை ஒருங்கிணைத்து அவர் மாபெரும் ஒடிசாவை உருவாக்கினார். அவருடைய முயற்சிகளுக்குத் தேவையான பெரும் உதவிகள் அவருக்கு சர்தார் படேலிடம் இருந்து கிடைத்தது. பிறகு அவர் மாநிலத்தின் முதல் அமைச்சராகவும் ஆனார். டாக்டர் மஹ்தப் தனது எடுப்பான தோற்றத்துக்குப் புகழ் பெற்றிருந்ததோடு அவரது நடத்தையும் ஆற்றல் மிக்கதாக இருந்தது. புதிய ஒடிசாவின் எல்லைகளை அவர் வரையறுத்ததோடு அதன் எதிர்காலம் குறித்து கனவு கண்டதோடு தனது கனவை நனவாக்கவும் பாடுபட்டார். ஹிராகுட் அணை, பரதீப் துறைமுகம் மற்றும் ரூர்கேலா ஸ்டீல் தொழிற்சாலை ஆகியவற்றை உருவாக்கி அவர் நவீன ஒடிசாவுக்கான அஸ்திவாரத்தை ஏற்படுத்தினார். மேலும் கட்டாக்கில்



இருந்து தலைநகரை புவனேஸ்வருக்கு மாற்றுவதில் முக்கிய பங்கினை ஆற்றினார். உத்கல் வரலாறை தேசிய அளவில் எடுத்துச் செல்வதில் மஹ்தப்ஜி குறிப்பிடத்தக்க பணி ஆற்றி உள்ளார். ஒடிசாவில் உருவாக்கப்பட்ட அருங்காட்சியம், பண்டைய ஆவணக் காப்பகங்கள் அல்லது தொல்பொருள் ஆராய்ச்சி பிரிவுகள் என அனைத்தும் அவரது தொலைநோக்கு பார்வை மற்றும் பங்களிப்பால்தான் சாத்தியமாகின. தாம்ரா மற்றும் பரதீப் துறைமுகங்களை புணரமைப்பு செய்வதாகட்டும் அல்லது எனர்ஜி கங்கா பைப்லைன் திட்டமாகட்டும் அல்லது கனிமங்களை முறையாகப் பயன்படுத்துதல் அல்லது மாநிலத்தை ஹைட்ரோகார்பன் மையமாக ஆக்குதல் என எதுவாயினும் ஒடிசா சீரான வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகிறது.

ஒடிசாவின் விசாலமான வரலாற்றை டாக்டர் மஹ்தப் உலகின் பார்வைக்கு எடுத்து வைத்தார். இதன் இந்திப் பதிப்பை பிரதம மந்திரி நரேந்திர மோடி ஏப்ரல் 9 அன்று வெளியிட்டார். இந்திய வரலாறு என்பது அரண்மனைகளின் வரலாறு அல்ல என்ற முக்கியமான கருத்தை இந்தத் தருணத்தில் பிரதம மந்தரி தெரிவித்து உள்ளார்.

மற்றும் தொழிற்சாலைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி என்பது மிகவும் முக்கியமானது ஆகும். ஒடிசாவில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களுக்கு தேசிய நெடுஞ்சாலைகளும் கடலோர நெடுஞ்சாலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நெடுஞ்சாலைகள் துறைமுகங்களை இணைக்கும். கடந்த 6-7 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்திற்கு புதிய ரெயில்வே இருப்புப் பாதைகள் போடப்பட்டு உள்ளன. சாகர்மாலா திட்டத்துக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிக்குப் பிறகு வளர்ச்சிக்கு மிக முக்கிய கூறாக இருப்பது தொழிற்சாலையே ஆகும். எனவே இந்தத் திசையில் தொழிற்சாலை மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் பணி நடந்து வருகிறது. ஒடிசாவில் இருக்கின்ற எண்ணெய் மற்றும் எரிவாயு வளத்தைப் பயன்படுத்த பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு உள்ளது. அதே போன்று ஸ்டீல் தொழிற்சாலைக்கான வாய்ப்புகளும் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. கடல்சார் மூல வளங்களுக்கான அளப்பரிய வாய்ப்புகள் ஒடிசாவில் உள்ளன. நீலப்புரட்சி மூலமாக இத்தகைய மூலவளங்களை ஒடிசாவின் வளர்ச்சிக்கான அடித்தளமாகச் செய்வது என்பது தேசம் எடுக்க வேண்டிய முக்கியமான முயற்சி ஆகும். இதன் மூலம் மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார நிலை மேம்படும். இத்தகைய வளர்ச்சியின் அதிகபட்ச பலன்கள் ஒடிசாவின் இளைஞர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், ஐஐடி புவனேஸ்வர், ஐஐஎஸ்இஆர் பெர்ஹாம்பூர் மற்றும் இந்திய தொழில்திறன் நிறுவனம் ஆகியவற்றுக்கான அடிக்கல் நாட்டுதல் இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்று உள்ளது. அதே போன்று வரும் ஆண்டுகளில் ஒடிசாவின் எதிர்காலத்தைக் கட்டமைக்க இருக்கின்ற ஐஐஎம் சம்பல்பூருக்கும் அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. இது வளர்ச்சிக்கான புதிய உத்வேகத்தை வழங்கும். ■



# பொக்ரான் II: இந்தியாவின் ஆற்றலை உலக நாடுகள் உணர்ந்த தருணம்

சில தருணங்களில் ஒரு சாதனையின் செயல்வகையானது உண்மையாக மேற்கொள்ளப்பட்ட பணியைவிட மிக முக்கியமானதாகி விடும். 22 ஆண்டுகளுக்கு முன்பு மே 11, 1998ல் நடத்தப்பட்ட பொக்ரான் அணுசக்தி பரிசோதனை இந்த கூற்றுக்கு உண்மையானதாக இருக்கிறது. ஏற்கனவே இந்தியா மே 19, 1974ல் அணுசக்தி பரிசோதனை மேற்கொண்டு இருந்த போதிலும் மே 1998ல் பரிசோதனைகளை இந்தியா பல நாடுகளின் கண்காணிப்பில் இருந்தபோது மேற்கொண்டது. கண்காணிப்பு இருந்த போதிலும், தனது வலிமையை உலகம் உணர்ந்து கொள்ளும் வகையில் இந்தியா தொடர்ந்து ஐந்து அணுசக்தி பரிசோதனைகளை நடத்தியது. இந்த முடிவு அப்போதைய மத்திய அரசின் அதிலும் அதிகாரத்துக்கு வந்து மூன்று மாதங்களே ஆன நிலையில் அதன் அரசியல் உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டியது.

அமைதியான முறையில் மற்றவர்களுடன் சேர்ந்து இருப்பது என்பது இந்தயாவின் உச்சபட்ச சிறப்பு அம்சம் ஆகும். சுய-பாதுகாப்பு, சுய-மரியாதை மற்றும் தேச நலன் ஆகியவற்றுக்குப் பாதிப்பு இல்லாமல் சர்வதேச அமைதி என்ற ஒட்டுமொத்த குறிக்கோளுடன் இந்தியா இருக்கிறது. பொக்ரான் அணுசக்தி பரிசோதனைகள் இந்தியாவின் பெருமைமிகு தருணத்துக்கும் சுயமரியாதைக்கும் சாட்சியங்களாக இருக்கின்றன. முதல் முறை அதாவது மே 18, 1974ல் இந்தியா குறிப்பிட்ட அணுசக்தி ஆற்றல் நாடுகளின் பட்டியலில் சேர்ந்தது. இதே பெருமை மீண்டும் மே 11, 1998ல் திரும்பவும் நிகழ்த்தப்பட்டது. இந்தியா அணுசக்தி ஆற்றல் திறமைகளில் தன்னிறைவு பெறுவதன் தொடக்கமாக இது இருந்தது. உண்மையில் இதற்கான செயல்திட்டம் 13 நாட்கள் அரசாட்சியில் இருந்த போது அடல் பிகாரி வாஜ்பாயால் தயாரிக்கப்பட்டது ஆகும். அரசாட்சி நீண்ட நாட்கள் நீடிக்காததால், செயல் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனது.

மே 11, 1998 அன்று அனல் வாட்டும் பிற்பகலில் பிரதம மந்திரியின் அதிகாரப்பூர்வ இல்லமான 7, ரேஸ் கோர்ஸ் சாலையில் (அப்போது இந்தப் பெயரில்தான் இருந்தது) சுமார் 3.45 மணிக்கு புல்வெளியில் செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. வழக்கமான நடைமுறைகளுக்கு மாறாக, எதற்காக இந்தச் செய்தியாளர் சந்திப்பு என்று யாருக்கும் தெரியவே இல்லை. திடீரென பிரதம மந்திரி அடல் பிகாரி வாஜ்பாய் கேமரா முன் தோன்றி பேசத் தொடங்கினார். இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இந்தியா பொக்ரான் பகுதியில் மூன்று நிலத்தடி அணுசக்தி பரிசோதனைகளை மேற்கொண்டது. ஒரு அணு பிணைப்பு, ஒரு குறைந்த திறன் கருவி மற்றும் ஒரு அனல் அணுசக்தி சாதனம் என மூன்று பரிசோதனைகள் இன்று நடத்தப்பட்டன''.

> “இது ஒரு வித்தியாசமான இந்தியா. சமத்துவத்தின் அடிப்படையில் உலக சமூகத்தின் ஒத்துழைப்போடு முன்னேற விரும்புகிறது. எந்தவிதமான அச்சுறுத்தல்களுக்கும் இது அடிப்பணியாது. நமது அணு ஆயுதங்கள் எந்த நாட்டிற்கும் எதிரானதும் அல்ல, அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தான்.”
>
> **அன்றைய பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய்,**
> நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில்

# சர்வதேச கண்காணிப்புக்கு இடையிலும் இந்தியா சாதனை புரிந்தது






*இந்தியா தனது முதலாவது அணுசக்தி பரிசோதனையை மே 18, 1974ல் நடத்தியது. அந்த நாள் புத்த பூர்ணிமா நாளாக தற்செயலாக அமைந்து விட்டது. எனவே அந்த ஆப்ரேஷனுக்கு "புன்னகைக்கும் புத்தர்" எனப் பெயர் இடப்பட்டது. மே 1998ல் மேற்கொள்ளப்பட்ட ஆப்ரேஷனுக்கு பிரதம மந்திரி அடல் பிகாரி வாஜ்பாய் "ஆப்ரேஷன் சக்தி" எனப் பெயரிட்டு இருந்தார். அப்போது இந்த நிகழ்வின் போது பின்னணியில் நடந்தேறியதாக ஊடகங்கள் வெளியிட்ட சம்பவங்களின் தொகுப்பு.....*

- இதற்கு முன்பு 1995லேயே அணுசக்தி பரிசோதனைகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் கடைசி நேரத்தில் யுஎஸ் வற்புறுத்தலால் அவை கைவிடப்பட்டன. பொக்ரான் சோதனை இடத்தில் அதிக அளவிலான கண்காணிப்புடன் யுஎஸ் இந்தியா மீது அதிக அழுத்தம் கொடுத்தது. நான்கு செயற்கைக் கோள்கள் தொடர்ச்சியாக விழிப்புடன் கண்காணித்தன.
- யு.எஸ் கண்காணிப்பு செயற்கைக் கோள்களின் நிகழ்-நேர நடவடிக்கைகளை தெரிந்து கொள்ள இந்திய விஞ்ஞானிகள் முயற்சித்தனர். அவர்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்காமல் இருக்க செயற்கைக் கோள்களின் கண்காணிப்பில் இருந்து தப்பிக்க முயற்சி செய்தனர். யு.எஸ் கண்காணிப்பு செயற்கைக் கோள்கள் பொக்ரானை எப்போது கடக்கின்றன என்பதையும் அதே நாளில் அவை மீண்டும் திரும்ப எப்போது அந்த இடத்திற்கு வருகின்றன என்பதையும் இந்திய விஞ்ஞானிகள் தெரிந்து கொண்டனர்.
- யு.எஸ் கண்காணிப்பு செயற்கைக் கோள்கள் 24 மணி நேரத்தில் இரண்டு முறை அல்லது மூன்று முறை பொக்ரான் பரிசோதனை பிராந்தியத்தை கூர்ந்து கவனிக்கின்றன என்பதை தெரிந்து கொண்ட இந்திய விஞ்ஞானிகள் அந்த கவனிப்பு நேரத்தில் எதையும் செய்யாமல் தவிர்த்தனர்.
- இந்த செயல்திட்டத்தில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் மிகவும் விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் இருந்தனர். அவர்களுக்கு இடையே பேசிக் கொள்ளும் போதும் சங்கேத வார்த்தைகளையே பயன்படுத்தினர். ஒருவரை ஒருவர் புனைபெயரிலேயே அழைத்துக் கொண்டனர். இந்தச் செயல் திட்டத்தில் ஈடுபட்டவர்களை அணுசக்தி பரிசோதனை இடத்திற்கு இராணுவ சீருடையில் அழைத்துச் சென்றனர். இராணுவ வீரர்கள் பணிக்கு அழைத்து வரப்பட்டு உள்ளனர் எனக் கருதி புலனாய்வு அமைப்புகள் ஏமாற வேண்டும் என்பதற்காக இவ்வாறு நடந்தது.
- இரகசியம் எவ்வாறு பாதுகாக்கப்பட்டது என்றால், அப்போதைய அணுசக்தி கமிஷனின் தலைவர் டாக்டர் ஆர்.சிதம்பரம் அவர்கள் மேஜர் ஜெனரலுக்கு உரிய இராணுவ உடையிலும் டி.ஆர்.டி.ஓ தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் மேஜர் ஜெனரல் பிருத்விராஜின் சீருடையிலும் இருந்தனர். பரிசோதனை நடைபெற்ற இடத்தில் அணுசக்தி விஞ்ஞானிகள் அனில் கக்கோதர் மற்றும் கே.சந்தானம் ஆகியோரும் இராணுவச் சீருடையில் இருந்தனர்.
- மே 10 அன்று இரவு இறுதி வடிவம் கொடுக்கும் போது ஆப்ரேஷனுக்கு "ஆப்ரேஷன் சக்தி" என்று பெயரிடப்பட்டது. விடியற்காலை 3 மணி அளவில் அணுசக்தி உபகரணங்கள் இராணுவ டிரக்கில் பரிசோதனை நடைபெறும் இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. முன்னரே அவை இந்திய விமானப் படை மூலம் மும்பையில் இருந்து ஜெய்சல்மார் தளத்துக்கு எடுத்து வரப்பட்டு இருந்தன.
- ஒட்டுமொத்த நடவடிக்கையின் போதும், தில்லியில் இருந்த அலுவலகம் இந்த விதமாகவே உரையாடியது - சரக்கு சென்று சேர்ந்து விட்டதா? அணுசக்தி உபகரணங்களின் ஒரு தொகுதிக்கு தாஜ்மகால் என்று பெயரிடப்பட்டு இருந்தது. பிற சங்கேதப் பெயர்களாக வெள்ளை மாளிகை மற்றும் கும்பகரன் போன்ற பெயர்கள் பயன்படுத்தப்பட்டன.
- விஞ்ஞானிகளின் அறிவுறுத்தலின்படி பாலைவனத்தில் ஆழமான கிணறுகள் தோண்டப்பட்டன. அணுசக்தி உபகரணங்கள் இந்தக் கிணறுகளில் வைக்கப்பட்டு தடிமனான ஒயர்களை மறைக்கும் வகையில் மணல் மேடுகள் உருவாக்கப்பட்டன.
- அணுசக்தி பரிசோதனை நடைபெற்ற போது, தடிமனான காளான் வடிவிலான புகை வெளிக் கிளம்பியது மற்றும் பரிசோதனை இடத்தில் மிகப் பெரிய அளவிலான பள்ளம் உருவானது. ஒட்டு மொத்த பரிசோதனையையும் 20 விஞ் ஞானிகள் அடங்கிய குழு தொடர்ந்து கண்காணித்து வந்தது.
- பொக்ரான் பரிசோதனைக்குப் பிறகு அணுசக்தி கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத ஒரே நாடாக இந்தியா உருவானது. பல நாடுகள் அணுசக்தி பரிசோதனைக்காக இந்தியாவை விமர்சனம் செய்ததோடு இந்தியா மீது தடைகளும் விதிக்கப்பட்டன. ஆனால் தேசம் நாட்டு மக்களின் இதயங்களை பெருமித உணர்வால் நிரப்புகின்ற செயலின் மூலம் சாதனை புரிந்தது. தைரியமான முடிவுகளுக்காகவும் மென்மையான பேச்சுகளுக்காகவும் புகழ் பெற்ற அடல் பிகாரி வாஜ்பாய்க்கு 2014ல் பாரத் ரத்னா விருது வழங்கப்பட்டது. நரேந்திர மோடி அரசாங்கம் இதே பெருமையை மேலும் முன்னெடுத்துச் செல்கிறது.

பிரதம மந்திரியின் இந்தச் சொற்கள் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நாடுகளின் குழுவில் இந்தியாவும் சேர்வதற்கான தொடக்கமாக அமைந்தது. இப்போது தேசம் அதே பாதையின் ஒரு புதிய இந்தியாவாக பரிணமித்து வருகிறது. அன்றைய பிரதம மந்திரி அடல் பிகாரி வாஜ்பாய் செய்தியாளர் சந்திப்பில் பேசிய பிறகு சுமார் 45 மணி நேரம் கழித்து மேலும் இரண்டு அணுசக்தி சோதனைகள் நடத்தப்பட்டன. அன்று முதல் மே 11 தேசிய தொழில்நுட்ப தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது.

பிரதம மந்திரி நரேந்திர மோடியின் சொற்களில் எடுத்துரைப்பது என்றால், 11 மே 1998 என்பது அணுசக்தி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட மாதம் என்ற ஒரு அம்சத்தில் மட்டுமே நாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த மாதமாக இல்லை. அதைவிட அந்தப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட முறை மிக முக்கியமானது ஆகும். இது இந்தியா மாபெரும் விஞ் ஞானிகளையும் வலிமையான தலைமையையும் கொண்ட நாடு என்று ஒட்டுமொத்த உலகத்துக்கும் எடுத்துக்காட்டியது. அன்றைய தினம் அடல் பிகாரி வாஜ்பாய் இந்த மந்திரத்தை வழங்கினார் - "ஜெய் ஜவான் ஜெய்-கிசான், ஜெய்-விக்யான் என்ற மந்திரத்தை அடல்ஜி இந்தியாவின் வல்லமை மற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்காக வழங்கினார். அதாவது நவீன இந்தியாவை கட்டமைக்க, ஆற்றல்மிக்க இந்தியாவுக்காக மற்றும் சுய சார்பு இந்தியாவுக்காக வழங்கினார். உங்கள் ஆற்றலை இந்தியாவின் வலிமையோடு ஒன்றிணையுங்கள்". ■



# வாழ்க்கையின் பாதுகாப்புக்கு உத்திரவாதம்

ஒவ்வொருவரும் குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ளவர்கள், முதுமை குறித்தும் வாழ்வில் திடீரென ஏற்படும் பாதகமான நிலைமைகள் குறித்தும் கவலை கொள்கின்றனர். அவர்கள் எப்போதும் பொருளாதார பாதுகாப்பின்மையை உணர்கின்றனர். அவர்களுக்காக பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டம், பிரதம மந்திரி சுரக்ஷா பீமா திட்டம் மற்றும் அடல் ஓய்வூதியத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை அரசு தொடங்கி உள்ளது. வாழ்க்கையின் பாதுகாப்புக்கு உத்திரவாதம் வழங்கும் வகையில் இத்தகைய திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.



> அனைத்து திட்டங்களின் மையத்திலும் இரண்டு விஷயங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன. முதலாவது, ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்ச பிரீமியத்தில் காப்பீட்டுப் பலன் கிடைத்தாக வேண்டும்; இதனால் ஏழையிலும் ஏழைக்கு இதன் அனுகூலம் கிடைக்கும். நமது அரசாங்கம் ஏழைகள் மீது அக்கறை கொண்டுள்ளது; ஏழைகளை மதிக்கிறது மற்றும் அவர்கள் அதிகாரம் பெற தொடர்ச்சியாக முயற்சிகள் எடுத்து வருகிறது
>
> — பிரதமர் நரேந்திர மோடி

இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பிலாஸ்பூரில் வசிக்கும் கந்த தேவி தனது கணவர் இறந்ததால் பேரிழப்பில் தவித்தார். அவரது கணவர் பிரதம மந்திரி சுரக்ஷா பீமா திட்டத்தின் கீழ் காப்பீட்டு பாலிசி எடுத்து இருக்கிறார் என்பது அவருக்குத் தெரியாது. யாரோ ஒருவர்தான் கந்த தேவியிடம் அவர் கணவர் காப்பீடு எடுத்திருப்பதாகக் கூறி அவரை வங்கிக்குச் சென்று விசாரிக்குமாறு கூறினார். வங்கியும் அவரது கணவர் காப்பீடு எடுத்திருப்பதை உறுதி செய்தது. சில நடைமுறைகளைப் பூர்த்தி செய்தப் பிறகு அவர் காப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று வங்கி தெரிவித்தது. நடைமுறைகள் முடிந்தப் பிறகு ரூபாய் 2 லட்சம் தொகை கந்த தேவியின் வங்கிக் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டது. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா திட்டத்தின் காரணமாக கந்த தேவி பிரச்சனைகளில் இருந்து விடுபட்டார். “பிரதம மந்திரி இந்தத் திட்டத்தை தொடங்கி

## பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா



- ஓராண்டுக்கு ரூபாய் 330 மட்டுமே பிரீமியம் என்ற நிலையில் ரூபாய் 2 லட்சம் வரையிலான காப்பீட்டுத் திட்டம். இதற்கு மருத்துவ பரிசோதனை தேவை இல்லை.
- 18-50 வயதுப் பிரிவில் உள்ள எந்த ஒரு இந்தியக் குடிமகனும் இந்தத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம். இந்த காலவரம்புத் திட்டமானது ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டிய திட்டம் ஆகும். 55 வயது நிறைவடையும் போது திட்டம் பூர்த்தி அடையும்.
- எந்த ஒரு வங்கிக் கிளைக்கும் நேரடியாகச் சென்று அல்லது வீட்டில் இருந்து கொண்டே நெட்பேங்க் வசதி மூலம் நீங்கள் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம். இந்தத் திட்டத்தின் போர்ட்டல் மூலம் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

## பிரதம மந்திரி சுரக்ஷா பீமா திட்டம்



ஓராண்டுக்கு **ரூ. 12** மட்டும் பிரீமியமாகச் செலுத்தி ஒருவர் **ரூ.2 லட்சம்** வரை காப்பீடு பெறலாம்.

- இது ஒரு விபத்துக் காப்பீட்டுத் திட்டம் ஆகும். விபத்தில் இறப்பு அல்லது நிரந்தர ஊனம் ஏற்பட்டால் ரூ.2 லட்சமும் பகுதி ஊனம் ஏற்பட்டால் ரூ.1 லட்சமும் கிடைக்கும்.
- 18 வயது முதல் 70 வயது வரை உள்ள யார் வேண்டுமென்றாலும் இந்தக் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம். காப்பீட்டுதாரர் 70 வயதை அடையும் போது காப்பீடு ரத்து செய்யப்படும். இந்தத் திட்டத்தில் சேர வங்கிக் கணக்கு கட்டாயம் ஆகும்.
- பிரீமியத்துக்கான தொகை பிடிக்கப்படும் போது கணக்கு வைத்திருப்பவரின் வங்கிக் கணக்கில் இருப்பு இருக்க வேண்டும். வங்கிக் கணக்கில் இருப்பு இல்லாவிட்டால் பாலிசி தானாகவே ரத்தாகி விடும்.
- வங்கிக் கணக்கை முடித்துக் கொண்டால் பாலிசியும் ரத்து செய்யப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படும்.

## அடல் ஓய்வூதியத் திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ் பலன் பெற 20 ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப்பட வேண்டும். 18 வயது முதல் 40 வயது வரை உள்ள யார் வேண்டுமென்றாலும் இந்தத் திட்டத்தில் முதலீடு செய்யலாம்.
- 60 வயதுக்குப் பிறகு உங்களுக்கு ஓய்வூதியத் தொகை தரப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் மாத ஓய்வூதியமாக ரூ.1000, ரூ.2000, ரூ.3000 அல்லது ரூ.5000 பெறலாம்.
- மாதந்தோறும் நீங்கள் செலுத்தும் பிரீமியத்துக்கு ஏற்பவும் நீங்கள் எந்த வயதில் முதலீடு செய்யத் தொடங்குகிறீர்களோ அதற்கேற்பவும் ஓய்வூதியத் தொகை இருக்கும்.

**இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட முதல் இரண்டு ஆண்டுகளில் 50 லட்சம் சந்தாதாரர்கள் பதிவு செய்திருந்தனர். மூன்றாம் ஆண்டில் இது இரு மடங்கு அதிகரித்து ஒரு கோடியானது. நான்காம் ஆண்டில் 1.50 கோடியைத் தொட்டது. 2019ஆம் நிதி ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 70 லட்சம் சந்தாதாரர்கள் சேர்ந்தனர்.**

இருந்தார். உண்மையில் இது மிகச் சிறந்த திட்டமாகவும் நெருக்கடியில் இருந்து குடும்பத்துக்கு உதவுவதாகவும் இருக்கிறது", என்கிறார் கந்த தேவி. மற்றொருவர் சுனிதா. இவர் பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டப் பாலிசியை எடுத்துள்ளார். சுனிதா கூறுகிறார், " என்னுடைய மகன்கள் வேலை செய்யவில்லை. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட போது, நான் காப்பீட்டு பாலிசியை வாங்கி இருந்தேன். வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் மாற்றப்படும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் பணம் கிடைக்கும் போது அது எனக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பது இப்போது தெரிந்துள்ளது. என்னிடம் இருப்பது இந்த ஒரு பாலிசி மட்டும்தான். முன்பு எனக்கு சில சந்தேகங்கள் இருந்தன. ஆனால் இப்போது நான் இந்த பாலிசியின் முக்கியத்துவம் குறித்து எல்லோருக்கும் எடுத்துச் சொல்கிறேன்." இன்று கோடிக்கணக்கான மக்கள் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வருவதற்கு அடல் ஓய்வூதியத் திட்டம், பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா திட்டம், பிரதம மந்திரி சுரக்ஷா பீமா திட்டம் போன்ற திட்டங்கள்தான் காரணமாக இருக்கின்றன. இந்தத் திட்டங்கள் தொடங்கப்படுவதற்கு முன்பு நாட்டில் 80 முதல் 90 சதவிகிதம் மக்களுக்கு காப்பீட்டு பாலிசி ஏதும் இருக்கவில்லை. யாருக்கும் எந்தவிதமான ஓய்வூதியப் பலன்களும் கிடைத்திருக்கவில்லை. ■



# உஸ்தாத்: கலைகளை புதுப்பித்து கலைஞர்களை ஆதரித்து கலாச்சாரத்தை பாதுகாத்தல்

*சமூகத்தின் எந்த ஒரு பிரிவில் ஏற்படும் முன்னேற்றமும் நாட்டின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதாகவே இருக்கும். தொடர்ச்சியாக அரசுகளால் புறக்கணிக்கப்பட்டு இருந்த கைவினைக் கலைஞர்களை பெரும்போக்கில் இணைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. இந்தக் கலைஞர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்குண்டு இருப்பதோடு அவர்களது கலை வடிவங்களும் மறைந்து வருகின்றன. உஸ்தாத் திட்டத்துடன் அரசு எடுத்து வரும் இடையீட்டு முயற்சியின் காரணமாக கலைஞர்களின் நலன் பாதுகாக்கப்படுவதோடு அவர்களுக்கான புதிய விடியலும் கண்ணுக்குப் புலப்படுகிறது.*

**லக்னௌவின் சிக்கன்கரி கைவினைக் கலைஞர்கள் முதல் முரதாபாத் பித்தளை பணியாளர்கள் வரை, குஜராத்தின் ஆஜ்ரக் முதல் தஞ்சாவூரின் பட்டு நெசவாளர்கள் வரை நாடு முழுவதிலும் எண்ணற்ற கலை வடிவங்கள் சீர் குலைந்து உள்ளன. ஆனால் அரசு மே 14, 2015 அன்று கைவினைக் கலைஞர்களின் நலனுக்காக முக்கிய முடிவை எடுத்தது. அன்றுதான் கலைநயம் மிகுந்த பனாரஸ் புடவைகளுக்குப் பெயர் பெற்ற வாரணாசியில் பாரம்பரிய கலைகள் - கைவினைக் கலைகள் மேம்பாட்டுக்கான திறன்கள் மற்றும் பயிற்சியை தரநிலை உயர்த்துதல் (USTTAD — உஸ்தாத்) என்ற திட்டம் தொடங்கப்பட்டது. புதிய சகாப்தத்தை உருவாக்கும் இந்த முடிவு நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பாரம்பரிய கலைத்திறனை பாதுகாப்பதோடு அவற்றைப் புதுப்பிக்கவும் உதவியாக இருக்கிறது.**

**குறிப்பாக சிறுபான்மையினரிடம் உள்ள குடும்பப் பாரம்பரியமான கலைத்திறன் கைவிடப்பட்டு தலைமுறை தலைமுறையாக கையளிக்கப்பட்டு வந்த அவர்களது பாரம்பரிய திறன்களைக் கடைபிடிப்பதில் இருந்து விலகிச் செல்ல நேரிட்டது. குடும்பத்தை நடத்துவதற்குத் தேவையான குறைந்தபட்ச வருவாயைக்கூட ஈட்ட முடியாத நிலையில் அல்லது மேன்மையான குடும்பப் பாரம்பரிய கலைத்திறனை முன்னெடுத்துச் செல்வதில் அங்கீகாரம் கிடைக்காத நிலையில் கலைஞர்கள் கலைகளில் இருந்து விலகுகின்றனர். பிரதம மந்திரி நரேந்திர மோடியின் அனைத்தையும் உள்ளடக்கிய மந்திரமான "சப்கா சாத், சப்கா விகாஸ், சப்கா விஸ்வாஸ்" என்பதும் இந்தியாவில் தயாரியுங்கள் என்பதும் இத்தகைய கலைஞர்களுக்கு கைகொடுத்தன. இவர்களுக்கு சரியான தகவல்களைத் தந்து பயிற்சி அளித்து தங்களது கலைப்பொருட்களை சரியான விலையில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. அவர்களுக்கு சிறப்பான வருவாய் கிடைப்பதற்கு சர்வதேச சந்தையில் அரசே அவர்களின் பிராண்ட் தூதராகச் செயல்படுகிறது. சிறுபான்மையினரின் பாரம்பரிய கலைகள் மற்றும் கைவினைக் கலைகள், சமையல் திறன்கள் ஆகியவற்றை வெளியுலகிற்கு எடுத்துக்காட்ட அரசு ஹுனர் ஹாத் மற்றும் ஷில்ப் உத்சவ் ஆகியவற்றில் தொடர்ச்சியாக கண்காட்சிகளை நடத்த உதவி செய்து வருகிறது. இதில் வடகிழக்கு பிராந்தியத்துக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ■**

- **உஸ்தாத் திட்டத்தின் கீழ் கலைஞர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் சந்தையில் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பதற்கும் உதவிகள் செய்யப்படுகின்றன.**
- **சிறுபான்மை சமுதாயங்களைச் சேர்ந்த 45 வயது வரை உள்ளவர்கள் பயிற்சி பெறும் போது அவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3,000 உதவித் தொகை அரசால் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு 33 சதவிகித ஒதுக்கீடு உள்ளது. வடகிழக்கு பிராந்தியம், ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு சிறப்பு கவனம் அளிக்கப்படுகிறது.**
- **உத்திரப் பிரதேசத்தின் சிக்கன்கரி மற்றும் கண்ணாடி வேலைகள், ஜம்மு & காஷ்மீரின் காகித பொம்மைகள், பஞ்சாபின் ஃபுல்காரி, ராஜஸ்தானின் லஹாரியா மற்றும் குஜராத்தின் ஆஜ்ராக் போன்ற நாடு முழுவதிலும் உள்ள 33 பாரம்பரிய கலை வடிவங்களில் பயிற்சி அளிக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.**
- **சிறுபான்மை கலைஞர்கள் / கைவினைக் கலைஞர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த நாடு முழுவதிலும் மட்டுமல்லாமல் வெளி நாட்டிலும் கண்காட்சிகள் நடத்த ஹீன்னார் ஹாத் மற்றும் ஷில்ப் உத்சவ் மூலம் வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.**
- **அமைச்சகத்துக்கும் திட்டத்தை செயல்படுத்தும் முகமைகளுக்கும் (PIA) மாஸ்டர் கலைஞர்கள் / கைவினைக் கலைஞர்களின் பாரம்பரிய தொழில்திறனை தரநிலை உயர்த்தவும் திறன் கட்டமைப்புக்கான தொழில்நுட்ப உள்ளீடுகளைப் பெறவும் தேசிய வடிவமைப்பு தொழில்நுட்ப கல்வி நிறுவனம், பிராந்திய ஏற்றுமதி கவுன்சில்கள் மற்றும் இதர ஏற்றுமதி முகமைகள் "அறிவுசார் பங்குதாரர்களாக" இந்தத் திட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர்.**
- **தலைசிறந்த மாஸ்டர் கைவினைக் கலைஞர்கள் / கலைஞர்கள் / சமையல் நிபுணர்களுக்கு ஓராண்டுக்கு அதிகபட்சம் 10 உஸ்தாத் விருது ரூ.1 லட்சம் மதிப்பில் வழங்கப்படுகிறது.**

**திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களையும்**
**http://usttad.minorityaffairs.gov.in மற்றும்**
**www.minorityaffairs.gov.in மூலம் பெறலாம்.**



# வலிமை மிகுந்த பிரதாப்

பல்வேறு மாவீரர்களின் கதைகளை இந்திய வரலாறு எடுத்துக்காட்டுகிறது. அவர்களின் வீரம் பொருந்திய கதையாடல்கள் இன்றைக்கும் பகிரப்படுகின்றன. மக்களுக்கு கதை சொல்வதில் குறிப்பிட்ட சில மாவீரர்களின் தைரியமான சகாப்தங்கள் முக்கியமானவையாக இருக்கின்றன. அத்தகைய விசேஷமான கதை வகைமையில் சேர்ந்தவராக மஹாராணா பிரதாப் விளங்குகிறார். மனோதிடத்துக்கும் மனஉறுதிப்பாட்டுக்கும் அவர் பெயர் நிலைத்துள்ளது. அவர் சிக்கனமான வருவாய் கொண்ட கடினமான வாழ்க்கையையே தேர்ந்தெடுத்தார். அடிமைத்தனத்திற்கு அவர் அசைந்து கொடுக்கவே இல்லை. கடைசி மூச்சு வரை, அவர் தனது தாய்நாடான மேவாரை பாதுகாக்க போரிட்டார். இதனால் அவர் இன்றும் வீரம் செறிந்த கதையின் நாயகனாக உயிர் வாழ்கிறார். இது இல்லாமல் தேசபக்தி, தியாகம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் அர்த்தம் முழுமை பெறாது.

மேவாரை உள்ளடக்கிய ராஜஸ்தானில் பிரதாப் போற்றுதலுக்குரிய வீரராக இருக்கிறார். ஒவ்வொரு வீட்டிலும் அவரைப் பூசிக்கிறார்கள். அவருடைய தைரியம், தேசபக்தி மற்றும் தியாகம் ஆகியன இன்றும் நினைவுகூரப்படுகின்றன. பிரதம மந்திரி நரேந்திர மோடி இவ்வாறு கூறுகிறார், ”மஹாராணா பிரதாப்பின் வாழ்க்கை தைரியம், மரியாதை மற்றும் கண்ணியத்தின் அடையாளமாக விளங்குகிறது. அவரது வாழ்க்கை குடிமக்களுக்கு எப்போதும் தேசபக்தி உணர்வை ஊட்டுவதாக விளங்குகிறது. ”மேவார் என்ற இந்த மண் பல மாவீரர்களின் வல்லமை பொருந்திய தியாகங்களால் ஒளியூட்டப்பட்டு உள்ளது. அரசு வாரிசுரிமையை ராணா சங்கா மற்றும் ராணா உதங் சிங்கிடம் இருந்து பெற்ற மஹாராணா பிரதாப் வரலாற்றில் அத்தகைய சிறப்புமிக்க ஆளுமையாக இருக்கிறார். சித்தூர் அரசர் ராணா உதய் சிங்கின் தலைமகனாக அவர் மே 9, 1540ல் பிறந்தார். அரச குடும்பத்தில் பிறந்து இருந்தாலும், பிரதாப்பின் குழந்தைப் பருவ நாட்கள் பில்ஸ் இனக் குழுவினரிடையே கழிந்தது. அவரது தந்தை உதய் சிங் தனது கடைசி மனைவிக்குப் பிறந்த மகனான ஜக்மாலை அடுத்த வாரிசாக அறிவித்து இருந்தார். ஆனால் முகலாயர்களுடன் தொடர்ந்து மேவார் போரிட்டுக் கொண்டு இருந்த சூழலில் அரசவையினர் பிரதாப்புக்கு மகுடம் சூட்டினர். கோபம் அடைந்த ஜக்மால் அக்பரின் படையோடு சேர்ந்து கொண்டார். மஹாராணா பிரதாப் முகலாயர்களிடம் இருந்து சித்தூரை மீட்கும் வரை தான் தங்கத் தட்டில் சாப்பிடுவதில்லை என்றும் தரையிலேயே படுத்து உறங்குவது என்றும் சபதம் ஏற்றார். பிரதாப் அரியணை ஏறிய பிறகு, அக்பர் நான்கு தருணங்களில் போர் நிறுத்த உடன்பாட்டு ஒப்பந்தங்களை அனுப்பி வைத்தார். முகலாயர்களுக்கு அடிமையாக இருப்பதற்கு சம்மதிப்பதைவிட போரிடும் பாதையையே அவர் தேர்ந்தெடுத்தார். இதன் காரணமாக 1576ல் முகலாயர்களுடன் ஹால்டிகாத்தி என்ற இடத்தில் போர் மூண்டது. மிகப் பெரும் முகலாய சேனை எதிரில் நின்றது. 10,000க்கும் அதிகமான முகலாயப் படை வீரர்கள் எதிரில் இருந்தாலும் மஹாராணா பிரதாப் வீரம் பொருந்திய 3,000 வீரர்கள் மற்றும் ஒரு சில பில் இனக்குழு வீரர்களுடன் போரிட்டு முகலாயர்களுக்குத் தக்க பதிலடி கொடுத்தார். இந்தப் போரில் அவர் மிகவும் நேசித்த குதிரை படுகாயம் அடைந்தது. பிரதாப் எதிரிகளால் சூழப்பட்டுள்ள நிலையைக் கண்ட அவரது ஆத்ம நண்பர் ஜாலா மன் சிங் தன்மீது கொற்றக் குடையை விரித்து எதிரிகளை திசை திருப்பி உயிர்த் தியாகம் செய்தார். பிரதாப் காட்டில் அஞ்ஞாதவாசம் மேற்கொண்டார். ஹால்டிகாத்தி போர் நடைபெற்று ஆறு ஆண்டுகள் கழித்து திவெரில் நடைபெற்ற போரில் மஹாராணா பிரதாப் முகலாயர்களைத் தோற்கடித்தார். பிறகு படிப்படியாக அவர் முகலாயர் வசம் இருந்த பல நிலப்பரப்புகளைக் கைப்பற்றினார். தனது தாய் நாட்டுக்காக நெடிய போராட்டத்தை முன்னெடுத்த மஹாராணா பிரதாப் ஜனவரி 19, 1597ல் மரணம் அடைந்தார்.

अस लेगो अणदाग पाग लेगो अणनामी
गो आडा गवड़ाय जीको बहतो घुरवामी
नवरोजे न गयो न गो आसतां नवल्ली
न गो झरोखा हेठ जेठ दुनियाण दहल्ली
गहलोत राणा जीती गयो दसण मूंद रसणा डसी
निसा मूक भरिया नैण तो मृत शाह प्रतापसी

பேச்சு வழக்கு மொழியிலான இந்தக் கவிதை மஹாரானா பிரதாப் என்ற மாவீரனை அவரது எதிரிகள்கூட வீரத்துக்காக எப்படி புகழ்கிறார்கள் என எடுத்துச் சொல்கிறது. ■




# ஜெய் ஜவான், ஜெய் கிசான்: இந்த வாசகத்தை உண்மையாக்குதல்

*பல பத்தாண்டுகள் பழமையான கவன ஈர்ப்பு வாசகமான ஜெய் ஜவான், ஜெய் கிசான் என்பது தற்போது தன்னைத்தானே புதுப்பித்துக் கொண்டுள்ளது. ஒரு பக்கம் அண்மைக்கால உதாரணமாக துணை இராணுவப் படையான சிஆர்பிஎஃப் சுற்றுச்சூழல் பாதுகாப்பு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. மறுபக்கம் குஜராத்தின் ஒரு விவசாயி முருங்கையின் அதிகத் தரம் வாய்ந்த விதைகளை உருவாக்கி உள்ளார். இவை பலன் அளிக்கும் விளைவுகளை எடுத்துக்காட்டுகின்றன.*

## பாதுகாவலில் இருந்து பாதுகாத்தலுக்கான முயற்சிகள்...



பிரதம மந்திரி தொடங்கி உள்ள ‘‘மழையைப் பிடியுங்கள்’’ என்ற பிரச்சாரத்தில் இருந்து ஊக்கம் பெற்ற அஜ்மீரில் உள்ள சிஆர்பிஎஃப் குழு மையம், நீரைப் பாதுகாப்பதற்காக ஆழமான குளம் ஒன்றை வெட்டுவதற்கு தீர்மானித்தனர். சிஆர்பிஎஃப் தலைவர் ஐஜி விக்ரம் ஷேகால் தலைமையில் இந்தப் பணி நடைபெற்று வருகிறது. சிஆர்பிஎஃப் முகாமை ஒட்டி மலைக்கும் காட்டுக்கும் இடையில் உள்ள இயற்கையான பள்ளத்தில் ஆழமான குளம் வெட்டப்படுகிறது. இரண்டு பக்கங்களிலும் நீரைத் தேக்கி வைக்க கரைகள் எழுப்பப்பட்டு உள்ளன. மழைக்காலத்தில் நீரால் இயற்கையாக பள்ளம் நிரப்பப்படுகிறது. இதனை மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் மற்றும் சிஆர்பிஎஃப் வீரர்கள் பயன்படுத்தினர். இந்தக் குளத்தின் நீர் நீர்ப்பாசனத்துக்கும் தோட்டக் கலைக்கும் பயன்படுத்தப்படுகிறது. குளம் நிரம்பிய நீரும் மிஞ்சி வடியும் நீரும் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிக்கின்றன என்று விக்ரம் ஷேகால் கூறுகின்றார். மேலும் இந்தக் குளம் 12 குழாய் கிணறுகள் நீர் பெறவும் உதவுகின்றது. சிஆர்பிஎஃப் பல சிறிய குளங்களை நீரைச் சேமிக்க உருவாக்கி உள்ளது. பிரதம மந்திரி நரேந்திர மோடியின் ‘‘மழைநீரைப் பிடியுங்கள்’’ என்ற பிரச்சார அழைப்புக்கிணங்க இந்த நீரைச் சேமிக்கும் முன்னெடுப்பு நடந்துள்ளது.

## விவசாயிகளுக்கு வளமை சேர்க்கும் முருங்கைக் காய்கள்



சுய சார்புக்கு உண்மையான எடுத்துக்காட்டாக, குஜராத்தின் சுபதன் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாயி முருங்கையின் விதைகளை உருவாக்கி உள்ளார். இது விதைகள் நல்ல விளைச்சலைத் தருவதோடு தரமான காய்களையும் தருகிறது. முருங்கைக்காய் விளைச்சலால் காம்ராஜ் சௌத்ரியின் வருமானம் வெகுவாக அதிகரித்து உள்ளது. அவர் முருங்கையை குஜராத் மாநிலத்துக்கு வெளியேயும் தமிழ்நாடு, மேற்கு வங்கம் மற்றும் இதர பாகங்களிலும் நல்ல வருமானம் கிடைக்கும் வகையில் விற்பனை செய்கிறார். இப்போது அவர் முருங்கை பயிரிடுவதை விரிவாக்கம் செய்யத் திட்டமிட்டு உள்ளார். சௌத்ரி கடந்த 10 ஆண்டுகளாக முருங்கை பயிரிட்டு வருகிறார். இதன் எதிர்காலம் சிறப்பாக உள்ளது. இந்தப் பயிரில் இருந்து இவர் ஒரு பிகாவுக்கு ரூபாய் 1 லட்சம் முதல் ரூபாய் 1.25 லட்சம் வரை வருவாய் பெறுகிறார். முருங்கை பயிரிட கூடுதலான உரம் தேவைப்படுகிறது. உண்மையில் முருங்கைக்காய்க்கு ஆயுர்வேதத்தில் நல்ல தேவை இருக்கிறது. ஆயுர்வேதத்தில் 300க்கும் அதிகமான நோய்களுக்கான சிகிச்சையில் முருங்கை பயன்படுத்தப்படுகிறது. சஹ்ஜன், சர்கவா மற்றும் மோரிங்கா ஆகிய பெயர்களில் முருங்கை அழைக்கப்படுகிறது. அண்மையில் பிரதம மந்திரி நரேந்திர மோடி தனது ‘‘மனதின் குரல்’’ நிகழ்ச்சியில் அதிகத் தரத்திலான முருங்கை விதைகளை உருவாக்கியதற்காக காம்ராஜ் சௌத்ரியை பாராட்டி இருந்தார். ■



**Narendra Modi** @narendramodi ·

தற்போதைய கோவிட்-19 சூழலைக் கையாள்வதற்கு தயாராக உள்ள நிலை குறித்து மீளாய்வு செய்யப்பட்டது. மருந்துகள், வென்ட்டிலேட்டர்கள், ஆக்சிஜன் மற்றும் தடுப்பூசி தொடர்பான விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. கடந்த ஆண்டு நாம் செயல்பட்டது போலவே, இப்போதும் நாம் அதிக வேகத்துடனும் ஒருங்கிணைப்புடனும் வெற்றிகரமாக கோவிட்டை எதிர்த்துப் போராடுவோம்.



**Rajnath Singh** @rajnathsi...

சட்டீஸ்கரின் சுக்மா - பீஜப்பூர் எல்லையில் இடதுசாரி தீவிரவாதிகளுடன் நடந்த போரில் கொல்லப்பட்ட நமது வீரம் செறிந்த பாதுகாப்பு படை வீரர்களுக்கு அஞ்சலிகள். அவர்கள் அதிதீவிர தைரியத்துடன் போராடினர். அவர்களது தியாகத்தை என்றுமே மறக்க முடியாது. அவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கல்கள்.



**Amit Shah** @AmitShah ·

रेमडेसिविर का प्रोडक्शन अभी भी हमारे यहाँ प्रयाप्त मात्रा में हो रहा है, हमने एहतियातन एक्सपोर्ट को बैन किया है।

लेकिन जब आपा धापी होती है तो लोग panic buying करते हैं जिससे shortage आती है।

मैं सभी से अपील करता हूँ कि अगर डॉक्टर ने आपको कहा है तभी इस इंजेक्शन को लें।



**Nitin Gadkari** @nitin_gadkari

ஒடிசாவுக்கு - ஒடிசா மாநிலத்திற்கு சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் 2020-21 காலகட்டத்தில் ரூ.1144.29 கோடி மதிப்பில் 314.17 கிலோ மீட்டர் நீளத்திற்கு 14 பெருந்திட்டங்களுக்கும் ரூ.1.42 கோடி மதிப்பில் சாலை பாதுகாப்பு பணிகளுக்கும் அனுமதி அளித்துள்ளது.
@pcsarangi
@dpradhanbjp @Naveen_Odisha @
SamirMohantyBJP @BJP4Odisha



**Sadananda Gowda** @DVSadanandGowda

இந்த நெருக்கடியான காலகட்டத்தில் இது மக்களுக்கு மிகப் பெரும் நிவாரணமாக இருக்கும். அரசின் தலையீட்டுக்குப் பிறகு இப்போது #Remdesivir மருந்தின் விலை குறைக்கப்பட்டு உள்ளது. பிரதமர் @narendramodiJ¡ #Covid, எதிரான போரில் மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் பிரதமருக்கு ஆதரவாக இருப்பதற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**Dr. S. Jaishankar** @DrSJaish...

இன்றைய காலகட்டத்தில் ராஜாங்க உறவில் நல்லது செய்வது என்பது ஸ்மார்ட்டாக இருப்பது என்று ஆகிறது. தடுப்பூசி தோழமை என்பது வைசுதைவ குடும்பகம் என்பதன் நெடிய கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கிறது. இப்போது சுகாதாரப் பாதுகாப்பு என்பது தேசிய பாதுகாப்புடன் ஒன்றிணைந்து உள்ளது. அனைவரும் பாதுகாப்பாக இல்லாத வரையில் தனி ஒருவர் பாதுகாப்பாக இருப்பது இயலாது.

RAISINA DIALOGUE: VACCINE MAITRI TO ENSURE NO ONE GETS LEFT BEHIND, SAYS JAISHANKAR

# Gave vaccine to 80 countries, will continue: PM

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, APRIL 13

INDICATING THAT New Delhi will supply Covid vaccines to other countries, Prime Minister Narendra Modi on Tuesday said that India will continue to share its resources in the fight against the pandemic.

The Prime Minister's remarks came after External Affairs Minister S Jaishankar defended India's decision to supply Covid vaccines to other countries and said there is a need to ensure equitable access to it across the world. "I think equitable access (to vaccines) is critically important in this. Because we all know that no one will be safe till everyone is safe," Jaishankar had said.

Both Modi and Jaishankar spoke at the Raisina Dialogue, ...

... India have tried to walk the talk. We have tried to protect our own 1.3 billion citizens from the pandemic. At the same time we have also tried to support the pandemic response efforts of others. In our neighborhood, we have encouraged our coordinated regional response to the crisis. Last year we shared medicines and protective equipment with over 150 countries. We understand fully, that mankind will not defeat the pandemic unless all of us, everywhere, regardless of the color of our passports, come out of it."

"That is why, this year despite many constraints, we have supplied vaccine to over 80 countries. We know that the supplies have been modest. We know that the demands are huge. We know that it will be a long time before the entire humanity can be vaccinated. At ...



Prime Minister Narendra Modi speaks at the Raisina Dialogue, in New Delhi on Tuesday. *PTI*

... continue to share our experiences, our expertise and also our resources with the entire humanity in the fight against the pandemic," he said.

... macy, doing good is being smart, the minister said 'vaccine maitri' reflects the larger outlook of 'Vasudhaiva Kutumbakam' (world is one family), asserting that health security is now inte- ...

... have had access to them. "For small countries, it is not just the ability to buy, but also the wherewithal to access markets. The big debates around globalisation are 'equity' and 'fairness'", he said.

Rwanda's President Paul Kagame thanked India for the vaccines to African countries.

Making a broad political point, Modi said, "After the end of the Second World War, over the next few decades, many structures and institutions were created but under the shadow of the two wars they were aimed at answering only one question, how to prevent the third world war. Today, I submit to you that this was the wrong question, as a result all the steps taken were like treating a patient's symptoms without addressing the underlying causes. Or to put it differently, all the steps taken were to prevent the last war, not the next ...

... not reduced in people's lives. With a number of proxy wars and unending terror attacks, the prospect of violence is ever present, he said.

Calling for a more human-centric approach, the Prime Minister said, "It is not too late even now. The mistakes and misdeeds of the past seven decades need not constrain our thinking for the future. The Covid-19 pandemic has presented us an opportunity to reshape the world order, to reorient our thinking. We must create systems that address the problems of today and the challenges of tomorrow. And we must think of the entire humanity and not merely of those who are on our side of the borders. Humanity as a whole must be at the center of our thinking and action."

"While we may be used having Plan A and plan B, there ...

# PM: Celebrating Guru Tegh Bahadur's birth anniv 'spiritual privilege' for me

TIMES NEWS NETWORK

**New Delhi:** Chairing a high-level committee formed to decide how India will celebrate the 400th birth anniversary of Sikh Guru Tegh Bahadur Singh, PM **Narendra Modi** said on Thursday that celebrating the Guru's 400th Prakash Purab was a "spiritual privilege" and "a national duty" for him.



At a virtual gathering of the committee comprising former PM Manmohan Singh, home minister Amit Shah, leader of opposition in Rajya Sabha, Mallikarjun Kharge and Punjab CM Amarinder Singh among others, Modi said the country drew inspiration from Guru Tegh Bahadur.

He said the government felt privileged to have the opportunity to celebrate the 550th Prakash Purab of Guru Nanak Dev Ji, the 400th Prakash Purab of Guru Tegh Bahadur and the 350th Prakash Purab of Guru Gobind Singh. He said the year-long activities should be such that the entire Guru tradition is propagated the world over.

Kharge urged Modi to reach out to farmers protesting against the contentious farm laws, who he said are from Punjab and represent the Guru. "With this, the 400th birth anniversary of Shri Guru Tegh Bahadur ji will be celebrated with more enthusiasm," he said. Punjab CM Amarinder Singh presented the government's plans to publicise how the Guru believed that religious harmony was only possible when one is not forced to change religion.

# Modi for global synergy to face pandemic challenge

PNS ■ NEW DELHI

Prime Minister Narendra Modi on Tuesday cautioned that in the fight against corona pandemic the world is still "underprepared" and called for a united global approach to face the challenge.

He also called for changing the mindset in bracing for future threats and called for human centric approach in dealing with them.

Making this assertion here while inaugurating the sixth edition of the Raisina Dialogue, he also said the world still faced violence in many facets, especially proxy war and terrorism, despite creation of several inter- ...



... place at a watershed moment in human history.

"A global pandemic has been ravaging the world for over a year. The last such global pandemic was a century ago," he said.

"During this pandemic, in ...

... from the pandemic. At the same time, we have also tried to support pandemic response efforts of others," he said.

Highlighting India's role in the fight against corona pandemic, the Prime Minister said, "We understand fully, that mankind will not defeat the pandemic unless all of us, everywhere, regardless of the colour of our passports, come out of it. That is why, this year, despite many constraints, we have supplied vaccines to over 80 countries."

In his nearly ten-minute address, Modi said, "Although, humanity has faced many infectious diseases since then. The world today is underpre- ...

# Tika Utsav beginning of another major war against corona: PM

EXPRESS NEWS SERVICE
NEW DELHI, APRIL 11

INDIA ON Day 1 of the 'Tika Utsav' administered 27.69 lakh doses of the Covid-19 vaccine till Sunday evening, the Health Ministry said, with Prime Minister Narendra Modi calling the drive the "beginning of another major war against corona".

The special vaccination drive was launched after Modi had said last week that over the four-day festival – from April 11, which is the birth anniversary of Jyotiba Phule, to April 14, the birth anniversary of B R Ambedkar – the country will try to achieve maximum vaccination coverage for ...



PM Narendra Modi

The PM said that as part of the war against the virus, the country must keep four important issues in mind - "Each One-Vaccinate One, that is, help those who are less educated and elderly, who cannot go and get vaccinated themselves. Each One-Treat One, that is, help people who do not ...

... way I save myself and save the lives of others also.

"The fourth important thing is that in the event of someone contracting corona, the people of the society should lead in the creation of micro-containment zones. Family members and people of the society should create a 'micro-containment zone' wherever a Corona positive case has been reported," Modi said.

In his message, the PM reiterated that in densely populated country like India, micro-containment zones is also an important way to fi... event of det... positive case, it is very important for all of us to be alert and to test the rest of the people. At the same time, the society and the administration have to make ...



**Second shot:** Prime Minister Narendra Modi has urged all those eligible to get vaccinated soon. ▪AFP/PIB

# PM gets second dose of Covaxin at AIIMS

SPECIAL CORRESPONDENT
NEW DELHI

... vaccine at the All India Institute Of Medical Sciences (AIIMS), New Delhi. He received the first dose of Bharat Biotech's Covaxin on March 1.

dose of the vaccine and said: "Got my second dose of the COVID-19 vaccine at ... Vaccination is among ... ways we have, to defeat the virus. If you are eligible for the vaccine, get your shot soon. Register on CoWin.gov.in."

The two nurses who administered the vaccine were ...

RNI No. :
DELTAM/2020/78809
May: 1-15, 2021

New India SAMACHAR Fortnightly

RNI Registered No DELTAM/2020/78809, Delhi Postal License No DL(S)-1/3551/2020-22, WPP NO U (S)-99/2020-22, posting at BPC, Meghdoot Bhawan, New Delhi - 110 001 on 26-30 advance Fortnightly (Publishing Date April 20, 2021, Pages - 40)






## கவனம் தேவை

# எச்சரிக்கை அவசியம் பாதுகாப்பு நிச்சயம்

தடுப்பூசி செலுத்திகொள்வோம் - முக கவசம் அணிந்திருப்போம்

கொரோனா விதிமுறைகளை பின்பற்றுவோம்



சுத்தம் பேணுவோம், மருந்துகள் எடுப்போம், உறுதியாக இருப்போம்

கொரோனாவுக்கு எதிரான போரில் வெல்வோம்

Tamil Issue 21

**Editor**
**Jaideep Bhatnagar**, Principal Director General, Press Information Bureau, New Delhi

**Published & Printed by: Satyendra Prakash**, Principal Director General, BOC on behalf of Bureau of Outreach and Communication

**Published from Bureau of Outreach and Communication, 2nd Floor, Soochna Bhawan, New Delhi -110003**

**Printed at** Infinity Advertising services Pvt.Ltd. FBD-One Corporate Park 10th Floor, New Delhi-Faridabad border NH-1, Faridabad-121003